# திரிமூர்த்தி உண்மை

அல்லது

# தேவர்களின் இரகசியம்

எம். ஆர். ஜம்புநாதன்

எழுதினது

தமிழ்ச் சத்தியார்த்தப் பிரகாசம், ரோஜாத்தோட்டம்,
வைதிக ஜெயபேரிகை, தயாநந்த சரிதை,
ஆகியவைகளின் ஆசிரியர்.

கூட்ன் அன் கோ.,

வேதிக் புக் ஷாப்,

14, பள்ளியப்பன் தெரு, சௌகார்பேட்டை,

சென்னை.

---

1928.

உரிமை பதிவு செய்தது]

[விலை ரூ. 1



சுவாமி சிரத்தானந்தர்

3847

ஓம்

சுவாமி சிரத்தானந்தருடைய சரணகமலங்களில் பக்தி பிரேமயுடன் சமர்பிக்கப்பட்டது.

முனியே! தாங்கள் பௌதிக சரீரத்தை விட்டு இவ்வளவு தினங்களாகியும், தங்களுடைய திவ்யசுயரூபம் என் மனதில் எப்பொழுதும் பிரகாசித்துக் கொண்டே வருகிறது. துர்பலமான எனது மனது தங்களுடைய ஞாபகத்திலேயே பலத்தை யடைகின்றது. தாங்கள் எத்தனே ஆத்மாக்களேக் காப்பாற்றியிருப்பீர்களென்று எண்ணுவது முடியாத காரியமாகும். தங்களால் போதிக்கப்பட்டுவந்த உபதேசமான அக்னி உலகத்தில் எத்துணே பாபங்களே எரித்து விட்டதென்று எவரால் கூறமுடியும்? தங்களுக்கு நான் கடன் பட்டிருக்கின்றேன். அதிலிருந்து மீறவேண்டி தங்களுடைய ஆத்மசக்தியை எனக்குத் தந்தருளுவீராக.

ம. ரா. ஜ.

# பொருளடக்கம்


| | | | பக்கம். |
|---|---|---|---|
| 1. | முகவுரை | .... | vii |
| 2. | பிரும்ம விளக்கம் | .... | 1 |
| 3. | விஷ்ணு விளக்கம் | .... | 29 |
| 4. | சிவ விளக்கம் | .... | 87 |

# பிழை திருத்தம்

பக்கம் VIII. 12-வது வரிக்குப் பிறகு இதைச்சேர்க்க :—அக்காலத்திலிருந்து இந்நாட்டில் பாதிரிகள் தோன்றும் வரை, ஆரியர்களும் திராவிடர்களும் அன்புடனே வாழ்ந்த போதிலும், பரஸ்பர நன்மைகளை நிலவச் செய்யாமல் இருவர்களும் அதிகமாக இருளிலேயே அமிழ்ந்தார்கள். அவைகளில் திரிமூர்த்தி பூஜை ஒன்றாகும். வேத சாஸ்திரங்களில் நடமாடும் திரிமூர்த்திகள் இல்லை எனத் தெளிவாயிருப்பதுபோல் தமிழர்களின் நூல்களிலும் இல்லை எனலாம். ஸ்ரீ இராமலிங்க சுவாமிகளும் திரிமூர்த்திகளின் நிலைகளை மானிட உடலிலேயே நிறுவியுள்ளார். ஆனால் தமிழர்களும் முப்பொருளை உணர்த்தும் புராதன நூல்களைப் புறக்கணித்து நவீன வேதாந்த புராணங்களிலேயே புரண்டமிழ்கின்றார்கள். புராதன நூல்களில் பல தேவை பூசையில்லை. ஆனால் பலதேய....

IXபக்கத்தின் சுலோக திருத்தம்:

**यस्तर्केणानु सन्धत्ते स धर्मं वेद नेतरः**
**अविद्याया मन्तरे वर्त्तमानाः**

பிழை, ஞானமல்லது ; திருத்தம், ஞானமலது

X பக்கம்.

**स्वयं धीराः पण्डितं मन्यमानाः**
**दन्द्रम्यमाणाः परियन्ति**
**मूठा अन्धेनैव नीयमाना यथान्धाः**

XVI பக்கம்

சுலோகத்தின் இரண்டாவதுவரி

यत् त्वं दुहितरं गच्छेरनिप्यांगजं प्रभुः

XVII பக்கம்

तां दृष्ठाभिमतां ब्रह्मा मैथुनाया जुहावतां

XVIII பக்கம்

तांबूलैश्च विनोदैश्च etc.

....................समन्विता

XII

मायावाच க்குப் பதிலாக माययाच எனப்ப

# முகவுரை

அகாவுயிரெழுத் தனைத்துமாகி வேருயமர்ந்தெதென
வகிலாண்ட மனைத்துமாகிப்
பகர்வனவெல்லாமாகி, அல்லவாகிப்
பரமாகிச் சொல்லரிய பான்மையாகித்
தகளலு சங்கற்பவிகற்க ளெல்லாந் தோயாத
வறிவாகிச், சுத்தமாகி
நிகரில்பசுபதியான பொருளைநாடி
நெட்டுபோர்த்துப் பேரன் பானிநினைதல்வேண்டும்.

தாயுமானவர்.

இத்தென்னுட்டார்களால் போற்றிப் புகழ்ந்து பூஜிக்கப் பட்டுவரும் தெய்வங்கள் பல. அவைகளின் மூலாதாரத்தைக் கண்டறிந்து கணக்கிடுவது முடியாத காரியம். ஏனெனில் ஆரியத்தெய்வங்களைத் திராவிடர்களும், திராவிடத்தெய்வங் களை ஆரியர்களும் முறையே பேதமின்றி பூஜித்துப் புகழ்ந்து வந்தார்கள். ஆரியர்களும் திராவிடர்களும் பரஸ்பர பிரே மையுடன் வாழ்ந்துவந்ததின் பயனுக இப்பொழுது ஆரியர் யார் திராவிடர் யார் என்று அறிய முயலுவது கடினமான காரியம். ஏனைய புராதன ஜனங்களிட மிருந்து ஆரியர்களைச் சிறப்பித்து காண்பிப்பது இந்த ஒரு குணமேயாகும். எப் படியெனில் தாங்கள் ஜயித்த நாடு நகரங்களில் உள்ளவர்களை யெல்லாம் ரோமர்கள் கிறிஸ்துவர்களாக மாற்றினர். கிறிஸ் துவர்கள் போனவிடமெல்லாம் பிறருடைய மதங்களையும்

கொள்கைகளையும் பழித்து தங்களுடையதை ஸ்தாபிக்க முயன்றனர். அமெரிக்கா, ஆஸ்திரேலியா, முதலான விடங்களில் இவர்கள் குடியேறினபிறகு சுதேசவாசிகள் இருக்கும் இடம் தெரியாமல் போய்விட்டனர். முகம்மதியர்கள் சென்ற நாடுகளிலுள்ள பழைய நாகரிகத்தைப் பறக்கச்செய்து, தங்களுடையதைத் தாபித்தார்கள். இவர்கள் குடியேறினதின் பயனாக எகிப்து அப்கானிஸ்தானம், பாரசீகம், மலாய், ஜாவா முதலான விடங்களிலிருந்த புராதன நாகரிகமும் நம்பிக்கையும் இருந்தவிடம் தெரியாமல் போய்விட்டது. ஆரியர்களோ திராவிட நாகரித்தை நாசம் செய்யவில்லை. இராவணனை அழித்த போதிலும் ஸ்ரீராமர் அவன் தம்பிக்கு மகுடாபிஷேகம் செய்து வைத்தார். பல தேவ பூஜைகளுக்கு ஆதாரமாயுள்ளது புராணங்களேயாகும். தேவர்கள் மனித சரீரத்தை யடைந்து அதற்கேற்ற கர்மங்களை நடத்திக் காண்பித்தார்களென்று நம்புகிறோம். அக்கர்மங்களைக் குறிக்கும் திருநாட்களையும் கொண்டாடுகிறோம். இவைகளுக்கெல்லாம் என்ன ஆதாரம்? இவைகளை ஏன் பின்பற்ற வேண்டுமென்றால், வயதில் முதிர்ந்தோர்கள் யுக்திவாதம், தர்க்கவாதம், நாஸ்திகவாதம் என்றுசொல்லி அதைத் தள்ளிவிடுகிறார்கள். புறப்பொருள்களைக்காண, வெளிக்கண் தேவையாயிருப்பதுபோல், மனப்பொருளைக்காண மனக்கண் அவசியமானது. அகண்ட இப்பூவுலகி லிருப்பவைகளெல்லாம் நன்மையைத்தரக்கூடியனவையாயிருந்தும், மனிதன் தனக்கு வேண்டியதைத் தானே பாடுபட்டுத் தேடிக்கொள்ள வேண்டும். உலகிலுள்ள சர்வ சாதாரணப் பொருள்களையடைய வேண்டுமானால், மனசு, புத்தி முதலானவைகளை உபயோகிக்க வேண்டியிருக்கையிலேயே தர்ம சம்பந்தமான காரியங்களைப்

பற்றி கேழ்ப்பானேன் ? எக்காலத்திலும் அக்கிரமமும் அநியாயமும் தர்மப் போர்வையைப் போர்த்திக்கொண்டே தானிருக்கும். அதைக்கண்டறிய புத்தியும் யுக்தியும் வேண்டும். முன்காலத்தில் செய்யப்பட்டு வந்த பொய்களைப் பற்றி கூறுவதினால் பயன் ஒன்றும் ஏற்படாது. இக்காலத்திலும் அங்ஙனமே செய்யப்பட்டுவருவதைக் கண்டுதான் மனங் கலங்குகிறது. பிற்காலத்தில் தன்னுடைய உபதேசங்களில் பொய்களைக் கலந்து விடுவார்கள் என்ற பயத்தினால் அல்லவோ மனு இதைக்கூறியிருக்கிறார்.

**यस्तर्केणाणुसतत्ते स धर्म वेद न इतरं ।**

யுக்திவாதத்தில் சிறந்து நிற்பதே வேதமாகும். அதற்கு மாறானவை வேதமாகாது. புத்த பகவானும் புத்தியையே சிரேஷ்டமென புகர்ந்துளார். ஸ்ரீசங்கரரும் அறிவை அனலெனவும், அறியாமையே எல்லாத் துக்கத்திற்குக் காரணமெனத் சொல்லியிருக்கிறார்.

“ஞானனமல்லது கதிகூடுமோ” என்றும் “ஞானப் பயிரதனை என் மனதில் நாட்டவேண்டு” மென்றும் இறைவனைத் தாயுமானவர் வேண்டுகிறார். யுக்தி வாதம் குன்றி விடுமேயானால் அறிவு அழிந்துவிடும். அத்துடன் அக உணர்வும் போய்விடும்.

சரீரபலம் படைத்த சிங்கமும் பலஹீனனான மனிதன் வயப்பட்டு பசுவைப்போலிருப்பதற்குக் காரணம் அவனுடைய யுக்தியேயல்லவா? யுக்திவாதத்திற்குஅடிப்படையாக இருப்பது அறிவு. இவ்வறிவு வளர்ந்தால் நாட்டில் ஒருவரை மற்றொருவர் ஏமாற்றுவது முடியாது. பிராமணர்கள், மற்றவர்கள் வேதத்தைக் கற்றால் தங்கள் பிழைப்புப்போவது

மன்னியில் கண்ணியம் கலந்துவிடுமென நினைத்து அறிவை மற்றவர்களுக்கு அறிவிக்க மறுத்தார்கள். அதனால் அடைபட்ட குளத்து ஜலத்தைப்போல் நாளடைவில் அவர்களிடமுள்ள அறிவும் அழிந்தது. அறிவின்மையால் நாட்டில் பற்பல அநியாயங்கள் தோன்றி மதத்தின் பெயரால் பல அநீதங்கள் விளையலாயின.

अविद्याय मन्तरे वर्त्तमानाः स्वयं धीराः पण्डितं मन्यमानाः
दन्द्रम्य माणाः परियन्ति मूढाः अन्धेनैव नीयमान यथाऽन्धाः ।

ஜனங்கள் அறிவின்மையான அகாதத்தில் அமிழ்ந்து, தங்களை அறிஞர்கள் என எண்ணிக்கொண்டு தீய வழிகளில் சென்று, குருடர்களைப் பற்றிய குருடர்கள் போலிருக்கின்றார்கள். ஆதலால் தேயமும் சமுகமும் முன்னேறவேண்டுமானால், மதத்தின் பெயரால் வழங்கப்பட்ட எந்நூல்களையும் நியாய நிலையுடன் ஆராய்ச்சி செய்யவேண்டும். தர்மத்தின் பெயரால் அநேக புராணங்களிருக்கின்றன. அவைகள் வேதங்களின் சாரமெனவும் சொல்லப்படுகின்றன. பரமேசுவரன், மானிடர்களின் மேன்மைக்காக மூவ்வுடிவாகத் தோன்றி, முத்தொழிலைச் செய்தாராம். மானிடர்களைப் போல் அவர் மூன்று வடிவங்களைத் தாங்கி சிற்றின்பங்களில் வாழ்ந்து மானிடர்களாகிய நாம்செய்வதற்கே அஞ்சும் பற்பல காரியங்களைச்செய்ததாக இப்புராணங்கள் கூறுகின்றன, இப்பொழுதிருந்துவரும் இருபத்திரண்டு மகா புராணங்களுள் கீழ்க்காணும் பதினெட்டும் வியாசரால் எழுதப்பட்டதென்பார்கள். எனவே அவைகள் சிறந்தவைகளாம் :—

I. பிரம்ம புராணங்களாவன :—

| | | | |
|---|---|---|---|
| 1. பிரம்மாண்ட | புராணம் | 12,000 | சுலோகம் |
| 2. பிரம்மவைவர்த்த | ,, | 18,000 | ,, |
| 3. மார்க்கண்ட | ,, | 9,000 | ,, |
| 4. வபிஸ்யாத | ,, | 14,000 | ,, |
| 5. வாமன | ,, | 10,000 | ,, |
| 6. பிரம்ம | ,, | 10,000 | ,, |
| | | 73,500 | |

II விஷ்ணுவைக் குறித்தவைகளாவன :—

| | | | |
|---|---|---|---|
| 7. விஷ்ணு | புராணம் | 23,000 | சுலோகங்கள் |
| 8. நாரத | ,, | 25,000 | ,, |
| 9. பாகவத | ,, | 18,000 | ,, |
| 10. கருட | ,, | 19,000 | ,, |
| 11. பத்ம | ,, | 35,000 | ,, |
| 12. வாரக | ,, | 24,000 | ,, |
| | | 1,44,000 | ,, |

III. சிவனைக்குறித்தவைகளாவன :—

| | | | |
|---|---|---|---|
| 13. மத்சய | புராணம் | 14,000 | ,, |
| 14. கூர்ம | ,, | 17,000 | ,, |
| 15. லிங்க | ,, | 11,000 | ,, |
| 16. பாஷ்ய | ,, | 24,000 | ,, |
| 17. ஸ்காந்த | ,, | 81,100 | ,, |
| 18. அக்னி | ,, | 15,400 | ,, |
| | | 1,62,500 | |

எனவே பதினெண் மகா புராணங்களிலுள்ள சுலோகங்களின் தொகை 3,80,000 ஆகும்.

இம்மகா புராணங்களில் சேராத மீதிபுராணங்களாவன :—(19) சிவ (20) வன்ஹி (21) பிரம்மவைவர்தம் (22) தேவீ பாகவதம், (23) ராமாயணம் (24) மகாபாரதம்.

உப புராணங்களாவன:—சனத்குமார, நரசிங்க, நாரஸ்ய, சிவ, துர்வாச, கபில, மானச, ஔஸனஸ், வருண, கலிக சம்பு, நந்தி, சூரிய, பராசர, ஆதித்ய, மகேசுர, பார்கவ, வசிஷ்ட, பிரம்மாண்ட, கூர்ம, ஆதி, முத்கல, கலிகி, பகிஷ்ட பிரஹதர்ம.

விஷ்ணு புராணம் கூறுவதுபோல் (அத் 6, சுலோ 14) வியாசர் ஒரே புராண சம்ஹிதையை எழுதி, தன் சீடனை லோமஹர்ஷனிடம் கொடுத்தார். சுவதி, அக்னிசாச, மித்திர, ஸங்கஸ்பாயனன், அக்ருதோபர்ணன், சாவணி என ஆறு சீடர்களிருந்தார்கள். இவர்களில் ஒவ்வொருவரும் ஒரு புராண சம்ஹிதையை இயற்றியதாகக் கூறப்படுகிறது.

இவைகள் நீங்கலாக பிரம்மாண்ட புராணம், அக்னி புராணம், ஸ்காந்த புராணம், பிரமம்வைவர்த்த புராணம் முதலானவைகளில் இருபத்திஐந்து மகாத்மியங்கள் இருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது.

இப்பொழுது மும்மூர்த்திகளின் மகிமையைப்பற்றி அவரவர்களுக் கேற்பட்ட புராணங்களைக் கொண்டு விளக்குவோம்:—

## சிவமகிமை

ஸ்ரீகிருஷ்ணன் ஒரு வருடகாலம் பரம சிவனை தவஞ் செய்தே பாசுபதாஸ்திரத்தைஅடைந்தார் (கூர்மபுராணம்34)

சிவனைத் தவிரபிறதேவர்களை உபாசனை செய்யும் அரசனும் நாடும் ரௌரவ நரகத்தை அடையும்.

சிவ பூஜையைத் தவிர்த்தவர்கள் கள்ளபுருடனை அடையும் ஸ்திரீயைப் போலாவார்களாம்.

*　*　*　*

பிரம்மதேவனுக்கும் மகா விஷ்ணுவிற்கும் ஏற்பட்ட கோரயுத்தம் பல வருடகாலம் முடியாமல் நடந்துவருகையில், சோதிர்மய லிங்கம் ஒன்று தோன்றி என் அடியையும் முடியையும் முதலில் கண்டறிபவர்களே ஜயித்தவர்களென்றது. உடனே இருவர்களும் அன்னபட்சி வடிவமும், வராக வடிவமும் எடுத்து மேலுங்கீழுமாக சென்று முடியையும் அடியையும் காணுமல், சிவனையே தலைவர் என வணங்கி ஏற்றுக் கொண்டார்கள். (சிவபுராணம், ஞான சம்ஹிதை அத்தியாயம்)

*　*　*　*

ஸ்ரீ கிருஷ்ணனும் உபமன்யு வினிடமிருந்து சிவமகிமை அறிந்து அவரைப் போற்றிப்பணிந்து அதன்பயனுக அவருடைய அருளுக்கு ஆளாகி வரங்களைப்பெற்றுச் சுக மடைந்தாராம்.

*　*　*　*

தேவாசுர யுத்தம் ஒரு சமயத்தில் முடிவை யடையாதது போல் காணப்பட்டது. அப்பொழுது சிவனைப் போற்றி அவருடைய அனுக்கிரகத்தைப் பெற்றுல் அசுரர்களை வெல்லலாம் என்று விஷ்ணுவிற்குத் தோன்றிற்று. அங்கனமே விஷ்ணு ஹிமாலயத்தை யடைந்து பூமலர்களினுல் சிவனைப் பூஜித்தார். மொத்த மலர்களில் ஒன்று குறையவே, தன் கண்ணென்றைப் பிடுங்கி பூஜை செய்தாராம். உடனே சிவபிரான் பிரத்தியட்சமாகி அவருக்குக் கண்ணைத் திருப்பிக்கொடுத்தது மன்னியில் சுதர்சனச் சக்கரத்தையும்

தந்தருளினர். அதை அணிந்த மாத்திரத்திலேயே அசுரர் களை வெல்லும் வலிமையைப் பெற்ருரும்.

*　　*　　*　　*

திருப்பாற் கடலில் சயனித்துக் கொண்டிருந்த மகா விஷ்ணுவைப் பிரம்மா அடைந்து நான் யாரைப் பூஜை செய்யவேண்டுமென்று வினவ, சிவலிங்க பூஜையே சிறந்ததென் ருரும்.

*　　*　　*　　*

ஸ்ரீ ராமபிரான் தன் பிரம்மஹத்தி தோஷத்தைப் போக்கடிக்க வேண்டி லிங்கஸ்தாபனஞ் செய்து பாப விமோசன மடைந்தாராம்.

*　　*　　*　　*

விஷ்ணு விற்கும் ததீசி மகருஷிக்கும் ஏற்பட்ட மகா யுத்தத்தில் சிவபக்தஞன மகரிஷியை ஜயிக்க முடியாததை யறிந்த மகா விஷ்ணு சிவபக்தஞக மாறிஞராம்.

*　　*　　*　　*

சுவேதமுனி பல வருடங்கள் ஒரு குகையிலிருந்து கொண்டு கடுந்தவம் மியற்றி வருகையில், அவருடைய உயிர் போகுந்தருவாயில் யமதர்மராஜன் பாசக்கயிற்றைப்போட்டு இழுத்தான். சிவபக்தஞன எனக்குச் சாவு ஏது என்று லிங்கத்தைப்பூஜித்த வண்ணமாகவே இருந்தார். அப் பொழுது பார்வதி பரமேசுரன் பிரத்தியட்சமாகி காலனி டைத்திலிருந்து அவரைக் காப்பாற்றிஞராம்.

## விஷ்ணு மகிமை

விஷ்ணுவை விட சிறந்தவரும் உயர்ந்தவர் உலகத் தில் இல்லை (பத்மபுராணம்)

விஷ்ணுவினலேயே எல்லோரும் மோக்ஷத்தை அடை கின்றூர்கள் (விஷ்ணு. புரா. அ : 9)

விஷ்ணுவைப் பூசை செய்யாதவன் இறந்தவனுக்குச் சமானமாவன் (வாமன புராணம் : அத் : 98 சு. 36)

விஷ்ணுவைத் தவிர வேறு தேவதையைப் பூசை செய்பவன் சண்டாளனுகின்றுன் (பத்மபுராணம். 25 அத்.)

மகாகதேவர் தவமிருந்து 6 விதமான முக்தியையும், 18 வித சித்திகளையும் ஸ்ரீ கிருஷ்ணனிடமிருந்து அடைந்தாராம். (பிரும்ம வை வர்த்த புராணம்)

* * * *

சிவபக்தனெருவன் வெகுகாலம் தவஞ்செய்ததற்கு மனம் இரங்கி சிவபிரான் அவனுக்குப் பிரத்தியட்சமாகி "உனக்குத்தேவையானவரங்களைத் தருவேன்" என்றுர். தன் கை பட்டவர்கள் கரியாகவேண்டும் என்று கேட்கவே அவரும் சரியென்று சொல்லிவிட்டார். உடனே அப்பக்தன் சிவன் தலையில் கையை வைத்து அவரைச் சாம்பலாக்கி பார்வதியை அபகரிக்க வெண்ணினன். சிவன் அவனிடமிருந்து தப்பவேண்டி மறைந்துகொள்ள இடம் இடமாகத் தேடித் திரிந்து கொண்டிருந்தார். அப்பொழுது தேவர்கள் மகாவிஷ்ணுவை அடைந்து சிவனைக் காப்பாற்றும்படி வேண்டினர். மகாவிஷ்ணு அவனை அடைந்து சந்தியா வந்தனம் செய்து வந்தவுடன் சிவனிருப்பிடத்தைக் காண்பிப்பதாகச் சொன்னர். அவன் அங்ஙனமே செய்ய தன்மேலேயே தன் கைப்படவே கரியானன். உடனே சிவன் விஷ்ணு தாசனுராம்.

* * * *

மகாவிஷ்ணு மோகினி அவதாரமெடுத்துத் தேவர்களைக் காப்பாற்றினது யாவரும் அறிந்த விஷயமே யாகும்.

* * * *

விஷ்ணுவைத் தவிர பிறதெய்வங்களை அறியாமையினால் பூஜை செய்பவர்கள் பாஷண்டர்களாக (இராட்சர்களாக) மாறுவார்கள். விஷ்ணுவினுடையதைத் தவிர மற்ற தெய்வங்களுடைய நிர்மாலியங்களை ஏற்றுக்கொள்ளக் கூடாது. சிவப்பிரசாதத்தைத் தின்ன பிராம்மணர்கள் சண்டாளர்களாக மாறுவது மன்னியில் பல ஆயிரங்கோடி கல்ப வருடங்கள் நாகத்திலிருப்பார்கள்.

(வி. புராணம். உத். காண்டம். 17-வது அத்.)

சூரியர்களிடமிருந்தும் (சூரிய பூஜை செய்பவர்களிடம்) கான பட்டவர்களிடமிருந்தும், சைவர்களிடமிருந்தும் சாக்தர்களிடமிருந்தும் விஷ்ணுபக்தர்கள் அன்னபானுதிகளை ஏற்றுக்கொள்ளக் கூடாது. சைவர்களுடனும் சாக்தர்களுடனும் அவர்கள் கூடிக்கலந்து உறவாடலாகாது. அவர்களிடமிருந்து வரும் எதையும் மலத்தைப்போல் தள்ளிவிடவேண்டும். [பத்மபுராணம் உத். காண்டம் 100-வது அத்.]

## திரிமூர்த்தி லீலைகள்

பிரம்மா தன் மக்களையே விரும்பினுர். அப்பொழுது அவர்களை சொன்னதாவது :—

(பாகவதம் 312.

नैतत् पूर्वैः कृतं त्वद्यन करिष्यति चापरे ।
यत्तु त्वं दुहितरं गच्छेरनिगृह्याङ्गजं प्रभुः ॥ பாகவதம்.3, 12.

யாவராலும் இதுவரையிலும் செய்யப்படாததும் இனிச் செய்யக்கூடாததுமான இக்காரியத்தை ஏன் செய்கிறீர்?

வாம: புரா: அத். 89.

तां दृष्ट्वायिमतां ब्रह्मा मथुनार्थे जुहावतां வாம புரா. அ49.

பெண்ணின் ரூபலாவண்யத்தைக் கண்டு பிரும்மா இச்சித்தாராம்.

* * * *

பார்வதியின் மணத்தைக் காணச்சென்றிருந்த பிரும்மாவிற்கு அவள் பாதங்களைக் கண்டவுடன் இந்திரிய ஸ்கலிதமாய் விட்டதாம். இதிலிருந்து தோன்றினவர்களே பாலகல்யாதிகளாம்.—வா. பு. தர்மசம்ஹிதை. அத். 10.

* * * *

ஸ்ரீ கிருஷ்ணன் ஆடுமாடுகளை மேய்க்கக் கானகத்திற்குச் சென்றிருக்கையில் பிரும்மா அவைகளைக் களவாடிச் சென்றுவிட்டாராம். பாகவதம்

* * * *

சாவித்திரியை விலக்கி கோபாலகன்னிகையுடன் கூடி யாகஞ் செய்யுங்கால், அவள் கோபமடைந்து 'உனக்குப் பூஜை யில்லாமல் போகக்கடவது' என்று பிரம்மாவைச்சபித்தாளாம்.—பத்ம புராணம். சிருஷ்டி காண்டம்.

* * * *

பொய் சொன்னதற்காகப் பூஜையில்லாமல் பிரும்மாவிற்கு ஆச்சுதாம்—(சிவபுராணம்)

## விஷ்ணு லீலை.

**तांबूलस्य विनोदैस्य वस्त्रालंकरणैः शुभैः ।**
**अथ बृंदारिका देवी सर्व भोग समन्विताः ॥**

பத்ம. புரா. காண் 2. அத் 15

மகாவிஷ்ணு ஜலந்தர ஸ்திரீயை அடைந்து, அவள் புருஷனைப் போலவே அவளுடன் கூடினாராம்.

*  *  *  *

ஒரு காலத்தில் விஷ்ணுவினிடம் நாரதரும் பிரும்மாவும் சென்றார். அவர் நாரதரைப் புஷ்கரத்தில் ஸ்னானஞ் செய்யும்படி கட்டளை யிட்டார். ஸ்னானஞ் செய்தவுடன் அவர் ஸ்திரீயாக மாறிவிட்டார். பிறகு அந்தஸ்திரீயுடன் ஒரு வருடகால மிருந்தாராம்.

*  *  *  *

**तत्क्षणात्तसरः पारे योषितां सविधेऽभवत् ।**
**सर्वलक्षण सम्पन्न योषिद्रूपाति विस्मिता ॥** மத். பு. 75, அ.

ரூபலாவணயத்திற் சிறந்த ஒரு பெண் அம்பரீஷருக்கு இருந்தாள். பர்வதமுனி, நாரதமுனி ஆகிய இருவரும் அவ்வரசனிடம் சென்று அவர் குமாரத்தியை வேண்டவே, அரசர் 'தனக்கிஷ்டமானவரை அடையும்படி' தன் மகளுக்கு உத்தரவளித்தார். விஷ்ணு பக்தியிற் மேம்பட்ட நாரதமுனி பர்வதமுனியின் முகத்தைக் குரங்காக மாற்றிவிடும்படி வேண்டினர். பர்வதமுனியும் நாரதமுனியின் முகத்தை அவ்விதமாகவே மாற்றும் படி கூறினர். சுயம்வர காலத்தில் நாரதர் யௌவன புருஷவேடம் பூண்டு அப்பெண்ணை அப

கரித்துச் சென்றார். பர்வதமுனி ஏமாற்றமடைந்து வெட்கித்துச் சென்றார்.

*   *   *   *

இலட்சுமி, கங்கை, சரஸ்வதி என மகாவிஷ்ணுவின் பத்தினிகள் மூவர். ஒரு சமயத்தில் கங்கையைக்கண்டு மகாவிஷ்ணுவும் அவரைக்கண்டு அவளும் முறையே சிரிப்பதைப் பார்த்த சரஸ்வதி மனம் வருந்தி கங்கையை நதியாக மாறிவிடுமாறு சாபமிட்டாள். உடனே மகாவிஷ்ணு பல மனைவிகளிருந்தால் அபவாதத்திற்கு ஆளாவோம் என்றறிந்து இலட்சுமி ஒருவளையே தனக்குரியவளாக வைத்துக்கொண்டு மற்ற இருவர்களையும் முறையே பிரும்மாவிற்கும் சிவனுக்கும் அளித்துவிட்டார்.

*   *   *   *

**शंख चूडस्य रूपेण जगाम तुलसी प्रति ।**
**गत्वा तस्यां मायावाच वीर्य धानं चकार सः ॥**

தே. பாக. அ 4, அ 23..

மகாதேவனுக்கும் சங்கசூடனுக்கும் உண்டான கடும் யுத்தத்தில் சங்கசூடனுடைய பத்னியின்கற்பழிந்தாலொழிய அவன் தோல்வி யடையமாட்டான் என்பதையறிந்த மகாவிஷ்ணு அவளுடைய கற்பைப்புருஷவேடம் பூண்டு அழித்தார்.

*   *   *   *

## மகாதேவ லீலைகள்

சனகாதிருஷிகள் ஒரு சமயம் சிவதரிசனார்த்தம்கைலாச பர்வத்தை அடைந்தார்கள். அப்பொழுது சிவபிரான் உமையுடன் உல்லாசமாகக் கூடிக் குலாவிக்கொண்டிருந்தாராம். இவர்களுடைய வரவை யறிந்த உமாதேவியார் வெட்கித்து தன் கணவனிடம் அதைத்தெரிவிக்கவே, அவர், "இனி இவ்வெல்லைக்குள் வருகிறவர்கள் பெண்ணாக மாறிவிடுவார்கள்" என ஆக்ஞாபித்தார். பின்னர் ஒரு சமயத்தில் அங்கு வந்த ஒரு அரசன் இச்சாபவிஷேத்தினால் ஸ்திரீயாக மாறிவிட்டான். இந்தஸ்திரீக்குப் பிறந்தவரே புரூரச்சக்ரவர்த்தியாம் தே. பாக. 1ஸ்க 18 அத்.

*　　*　　*　　*

பிரும்மஹத்தி மானிட வடிவமெடுத்து சிவனை அடைந்து, கபாலமாக மாறி அவரை விட்டகலாமல் பற்றிக்கொண்டே இருந்தது. அவர் அதிலிருந்து விடுதலையை அடையவேண்டி புண்ய நதிகளில் ஸ்னானஞ் செய்து எங்கு சென்றபோதிலும் அது நீங்கவில்லை. கடைசியில் விஷ்ணுவின் உபாசனையினாலேயே அது நீங்கிற்று. எல்லாம் வல்ல ஈசன் கொலைகளைப் புரிந்ததால் அவருக்கும் தோஷம் பற்றிற்றாம்.

*　　*　　*　　*

கோனிஷ கிரமண என்னும் கிராமத்தில் ஞானவான் என்னுமொரு இருஷி இருந்தார். அவர் அநேக கல்பகாலங்கள் விஷ்ணுவைக் குறித்துத் தவஞ்செய்தார். விஷ்ணுவைப் பூஜை செய்ய ஹரித்துவாரத்திலுள்ள தடாகமொன்றிலிருந்து தாமரை மலர்களைக் கொண்டுவருவது அவர் வழக்க

மர்யிருந்தது. ஆனால் அங்கு ஏதோ காரணமாக சிவன் சென்று அதைச் சாம்பலாக்கி விட்டார். சாம்பலாயிருப்பதைக் கண்ட விஷ்ணு பக்தர் "இதை எரித்தவன் அநேக துன்பங்களை அனுபவிப்பான்" எனச் சாபமளித்தார்.

வரா. புரா. 141 அத்.

* * * *

## புராணப் போதனைகள்.

சிவன் விஷ்ணுவிற்குச் சொல்வதாவது :— " நான் யாவற்றிற்கும் தலைவன். உன்னை நான் படைத்தேன், நானே ஒளி, நீயே இருள்."

கூர்ம. புரா. 9.

பிரளயகாலத்தில் பிரும்மாவும் விஷ்ணுவும் சண்டை செய்யும்பொழுது மாயலிங்கம்தோன்றி இருவர்களையும் தன்னைப்பணியச்செய்ததாம்.—லிங்கபுராணம் அத் : 18.

ஸ்ரீ சங்கரனையே விஷ்ணு முதலியவர்கள் பூசை செய்கிறார்கள். சிவ புராணம்.

சிவன் துக்கத்தை யடைந்தார். அவர் வடிவமான விஷ்ணுவும் துன்பத்திற்கு ஆளானார். பார்வதி இதன் சூட்சமத்தை அறிந்து அவர்களை அப்பக்தனிடம் சென்று மன்னிப்புக் கேட்கச் சொன்னார். அங்ஙனமே அவர்கள் செய்ய இருஷி மனமிரங்கி அவர்களை மன்னித்தார்.

* * * *

ஸ்ரீ கிருஷ்ணனின் மகனான அனிருத்தனுக்கும் பாணாசுரனுக்கும் பெரிய சண்டையொன்று நடந்தது. அனிருத்தன் தோற்றுப் போவதைக் கண்ட ஸ்ரீகிருஷ்ணன் அவன் உதவிக்குச் சென்றார். அங்கு சிவன் உதவி செய்வதைக் கண்டு அவருடன் யுத்தம் புரியலாயினர். மகாதே

வன் சீதள சுரத்தைப் பிரயோகஞ் செய்யவே விஷ்ணு தாபச் சுரத்தைப் பிரயோகஞ் செய்து தப்பித்தார். மகாதேவனைக் கீழே தள்ளி பாஞ்ச சன்ய சங்கைக் கர்ச்சனை செய்தார். பிறகு பார்வதியின் வேண்டுகோளுக்கு இணங்கி அவரைஎழுப்பினார். சிவன் உடனே எழுந்து அவரைத் துதிசெய்தார்.

பத். புரா. உத். கர். 250 அ

* * * *

ஒருகாலத்தில் பார்வதி சிவனை நோக்கி நீர் ஏன் சர்மம் பஸ்பம் முதலியவைகளை அணியவேண்டுமென வினவியதற்கு அவர் உரைத்ததாவது :— தைத்தியர்களின் தொந்திரவைப் பொறுக்க இயலாமல் எல்லோரும் ஸ்ரீவிஷ்ணுவை அடைந்து முறையிட்டார்கள். அவர் என்னை அழைத்து, பஸ்மம் சர்மம் இவைகளை அணிந்து அரக்கர்களைக் கைவசஞ்செய்யும்படி ஆக்ஞாபித்தார். அவ்விதமே நான் செய்ய அவர்கள் மதிமயங்கி தேவர்களால ஜயிக்கப்பட்டார்கள்.

பத்மபுராணம்

* * * *

மும்மூர்த்திகளிலிருந்து தனி அம்சமாக தேவி கருதப்படுகிறாள். அவளுக்கு உரித்தானதே தேவி பாகவதம். மும்மூர்த்திகளும் பெண் உருவங்களை யடைந்தவுடன் தேவியைத் தோத்திரம் செய்ததாகவும், அதன் பயனாக இழந்த வடிவங்களைத் திரும்பப் பெற்றதாகவும் கூறுகிறது. தே. பா. கண் 3. அத் 3.

* * * *

இராவணனை நான் எங்ஙனம் வெல்லுவேன் என்று ஸ்ரீராமர் கவலையுடனிருக்கும் பொழுது நாரதர் தோன்றி

கூறினதாவது:— "நீர் ஏன்கவலைப்படவேண்டும்? நவராத்திரியை நினைத்து தேவியைப்பூஜித்தால் நீ ஜயம் பெறுவாய்" என்றார். அங்ஙனமே ராமர் செய்ய ஜயங்கிடைத்தது.

தே. பா. கண் 3. அத் 3.

சகல தேவர்களைக் காட்டிலும் தேவி சிறந்தவளாம்! மதுகைடபனுடன் மகாவிஷ்ணு சண்டை செய்து அவனைச் சயித்தத்திற்குக் காரணம் தேவி பூஜையினால் தானும் என்று தேவி பாகவதம் கூறுகிறது.

இதுவரையில் நாம் கூறிவந்ததிலிருந்து புராணங்கள், அவைகளுடைய பிரிவினைகள், அவைகளுடைய தெய்வங்கள், அத்தெய்வங்களுடைய குணகுணங்கள் ஆகியவைகளெல்லாம் ஒருவாறு விளங்கியிருக்கும். புராணங்கள் முறையே அவையவைகளுக்குரிய தேவர்களைப் போற்றியும் புகழ்ந்தும் மற்ற தேவர்களைத்தூற்றியும் ஏசியுமிருக்கிறது. நாம் மேற் கூறின உதாரணங்களிலிருந்து இது நன்குவிளங்கும். இப்புராணத்தெய்வங்கள் தங்களுடைய எண்ணங்களும் காரியங்களும் கைகூடி சித்திபெற வேண்டி எவ்வித அடாத செய்கைகளையும் செய்து நீச உபாயங்களையும் கையாண்டிருக்கிறதென்பது நன்கு விளங்கும். ஒரு புராண தெய்வம் பிற புராண தெய்வத்தைத் தன்னுடைய அடிமையாகவும், ஒதுக்கப்பட்டவனாகவும் காண்பித்திருக்கிறது. இவைகளைப்பார்க்கும் பொழுது தொன்று தொட்டு நம்முடைய தர்மத்தைக் களங்கமில்லாமல் காப்பாற்றிக்கொண்டு வரும் வேதங்களுடைய ஞாபகம் வருகிறது.

அவைகள் கூறுவதாவது :—

हिरण्यगर्भः समवर्तताग्रे भूतस्य जातः पतिरेक आसीत् ।
स दाधार पृथिवीं द्यामुतेमां कस्मै देवाय हविषाविधेम ॥

பிரபஞ்சத்திலுள்ள எல்லாப் பொருள்களின் ஈசன் ஒருவனே யாகும்.

अशब्द पस्पर्शमरूपमव्यं तथाऽरसं नित्यमगन्ध वच्चयत ।
अनाद्यनन्तं महत परं ध्रुवं निचाम्य तं मृत्युमुखत्प्रमुच्यते ॥

கடோ. 5.

தேச காலம், திக்குதிசை, பந்த மோட்சம், ஸ்பர்சத் தோற்றம், ஆதி யந்தம், அகம் புறம் இவைகளிலிருந்து மீறினவரே கடவுள். வேதத்திற்கும் புராணங்களுக்குமுள்ள சிற்சில வித்தியாசங்களைக் கூறுவோம்.—

(1) வேதம் யுக்திக்கும் புத்திக்கும் ஏற்ற கடவுளாலருளப்பட்டது: பல தேவ பூஜைகளைக் கண்டித்து ஒரே தெய்வ பூஜையைப் போற்றுகிறது. புராணங்களோ மனிதர்களாலெழுதப்பட்டது, பலதேவ பூஜைகளைப் போற்றுகிறது, யுக்தி, புத்தி, நியாயம் இவைகளுக்கு விரோதமான சட உபாசனையைச் சிறப்பிக்கின்றது, மூடபக்தியைப் புண்ணியமெனப் புகழுகிறது, ஞான உபாசனையைப் புறக்கணித்து, நாமோச்சாரணை, தீர்த்த ஸ்நாநம், முதலியவைகளினாலேயே முக்தியுண்டென்கிறது. பிறப்பினாலேயே உயர்வு தாழ்வைக் கற்பித்து, ஒருவனுடைய கர்மங்களினால் மற்றவனுடைய கர்மங்களின் பலாபலன்களை மாற்றலாமென்கிறது. வேதத்தில் அவன் அகில மெல்லாம் நிறைந்துள்ளானாகையினால் அவனுக்குப் பிரதிநிதி அவசியமில்லையெனவும், இறப்பன்னியிலிருக்கிறவனாகையினால் அவனுக்கு அழிவு இல்லையெனவும் மானிடர்களில் யாதொரு பேதமுமில்லை யெனவும், நான்கு ஆசிரமங்களைச் சிறப்பித்தும், மதுமாம்சங்களை உட்கொள்ளுவது தீமை எனவும், போதிக்கிறது. புராணங்களோ

அவருக்குப்பிரதிநிதியும் தூதனும்அவசியமெனவும், தீட்சை பெற்றவன் பிராமணன் எனவும், நம்பினவனே சிறந்தவன் எனவும், பால்ய விவாகமே உசிதமெனவும், கூறுகிறது.

(2) பெரியோர்களின் சேர்க்கையும், ஆப்தர்களின் நட்புமே தீர்த்தமென உரைக்கின்றது. ஆனால் புராணங்கள், ஸ்னானதிகளைச் செய்வதும், கல்லரைகளைத் தரிசிப்பதும், யாத்திரை செய்வதும் தீர்த்தமென உரைக்கிறது.

(3) வேதங்கள் இயற்கைகேற்ற நியமங்களையே நோன்பென்கிறது. ஆனால் புராணங்கள், உபவாசமிருப்பதும் கண் விழிப்பதும், தலை தாடிமயிரை வளர்த்துக் கொள்வதும் விருதமெனக் கூறுகிறது.

(4) வேதக்கடவுள் சர்வசக்திமான், சர்வஞ்ஞர் நிராகார், புனிதமானவர், அனந்தர் தயாளு அமரர். புராண ஈசுவரன் மானிடவடிவமுடையவர், அரக்கர்களை அழிக்க அவதாரஞ் செய்பவர், தன்பணிகளைச் செய்துகொள்ள பிரதிநிதிகளையே வேண்டுபவர், சுவர்க்க வாசமுடையவர், அநேகம் பெண்களை அடைந்துள்ளவர்.

(5) ஒருவனுக்கு ஒருத்தியும், ஒருத்திக்கு ஒருவனுமே வேத விதியாகும். பல மனைவிகளும், பல புருஷர்களும் புராண தர்மமாய்க் காணப்படுகிறது.

(6) வேத விமலன் யாவரிடமும் நேர்மையாக நடந்து கொள்ளுபவர்; புராண ஈசன் வஞ்சகர்களுக்கு வஞ்சனைகளைச் செய்கின்றவர்.

(7) வேதத்தில் சூரியன் சக்கிர வடிவமெனவும், சுற்றுபவன் எனவும் சொல்லியுள்ளது; ஆனால் புராணங்களில் சூரியன் மடிக்கப் படுவதாகவும் மலைகள் பறப்பதாகவும் இருக்கிறது.

(8) வேத ஈசுவர ஸ்வரூபம் சாந்தி வடிவம்; புராண ஈசுவரர் சண்டைக்காரர்.

(9) வேத ஈசுவரன் செயலுக்கேற்ற பயனை அளிப்பவர்; புராணக் கடவுள் பயந்தவன், நம்பிக்கையுள்ளவன், மன்னிப்புக் கேட்பவனுக்கு மோட்சத்தை அளிப்பவர்.

(10) வேதத்தில் சுவர்க்கம், நரகம் எனத் தனி இடங்கள் இல்லை; புராண ஈசன், எல்லா இன்பங்களும் நிறைந்த இடத்தையோ அல்லது அனலை அடைந்துள்ள நரகத்தையோ அருளுகிறார்.

(11) வேத ஈசுவரன் பாபமன்னிப்பு அளிப்பதில்லை; புராண ஈசனே பாபத்தை மன்னிக்கிறார்.

(12) இயற்கையோடு இயைந்தவரே வேத ஈசனாகும்; புராணக் கடவுளுக்கு மேன்மையிலும் தாழ்மையிலும் நம்பிக்கையுண்டு.

(13) வேத ஈசுவரன் யாவருக்கும் சமநிலையை அளிக்கின்றவர்; புராண தேவர் இஷ்டப்பட்டவர்களைக் கெட்ட வழியில் கலக்குகின்றவர்.

(14) வேத ஈசன் யாவருக்கும் நியாயம் வழங்குகின்றவர்; புராணதேவர் பக்தி பாராட்டாதவனுக்குத் துன்பம் விளைவிக்கின்றவர்.

(15) வேத ஈசுவரன் யாவருக்கும் வழிகாட்டுகின்றவர்; புராண ஈசுவரன் இஷ்டப்பட்ட வர்களுக்கே வழிகாட்டுகின்றவர்.

(16) வேதத்தில் வையகத்திலுள்ள யாவும் புனிதமானவைகள்; புராணங்களில் சில இடங்களும் கற்களுமே புனிதமானவைகள்.

புராணங்களைச் சுற்றியே மும்மூர்த்திகள் உயிர்வாழ்கின்றன. அவைகளின் உண்மையை அறியவேண்டுமென்றே இந்நூலைத் தொகுத்தெழுதியுள்ளேன். புராணங்களைப் பழிக்கவேண்டுமென்பது என்னுடைய கருத்தல்ல. ஏனெனில் முரண்ணன விஷயங்களைக் கொண்ட அவைகளே ஒன்றையொன்று பழித்துக் கொள்ளுகின்றன. புராணம் என்றால் பழையது என்று பொருள். பழைய சரித்தங்களைக் கூறும் நூலே புராணங்களாகும். இவ்வித புராணங்கள் வேதங்களுக்கடுத்த படியாகும். சரித்திர சம்பந்தமான இவ்வித புராணங்களைப்பற்றி சாந்தோக்ய உபநிடதம், சதபத பிராம்மணம் முதலானவைகளில் கூறப்பட்டிருக்கின்றன. அமரகோசம் கூறுவதேபோல் இவைகளில் காணப்படும் விஷயங்களாவன:— சிருஷ்டி விமரிசை, அதன் தத்துவம், பஞ்சங்கள், பெயர்பெற்ற பெரியோர்களின் வாழ்க்கை. இதனுலேயே தான் "வேதானும் வேத" என்ற பெயருக்குப் பொருள் கூறும்பொழுது சங்கராசாரியார் "பாரதத்தையும்" (பாரதவம்ச வாலாற்றையும்) சேர்த்திருக்கிறார். புராணங்களைப் போதிக்கும் வேலை மகருஷி, முனி, முதலானவர்களுக் களிக்கப்படாமல், அவர்களுக்குக் கீழ்ப்பட்ட "ஸூத" வகுப்பைச்சேர்ந்த லோமஹர்ஷன், உக்கிரசிரபன், சுமந்தன், வைசம்பாயனர் முதலானவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. எனவே புராணங்களின் ஆசிரியர் ஒருவரே யாகமாட்டார். பிடிவாதம் பட்சபாதம் இவைகளின் வயப்பட்ட சிலர் இப்புண்ய கைங்கரியத்தைச் செய்திருக்க வேண்டும். பொய்ப் புராணங்களையும் அவைகள் போதிக்கும் தெய்வங்களையும் கழித்துவிட்டால் ஏதோ சிலவைகள் நமக்கு உபயோகமாகும். வேதங்களையும் அவைகளுடைய

த்னிச்சிறப்பையும், புராணங்களையும் ஒளிமறைவின்றி எடுத்துக்காண்பித்த தற்காலத்திய பெரியார் ருஷி தயாணந்தரேயாவர். ஏனைய அரசாங்கங்கள் அஞ்ஞானத்திலகப்பட்டுக்கொண்டு அந்தகாரத்திலிருந்த சமயத்தில் எல்லாத்துறைகளிலும் சிறப்புற்றிருந்த இந்திய நாட்டின் சரித்திரத்தைச் செவ்வனே புராணங்கள் கூறியிருந்தால் எத்துணை நன்றாயிருக்கும்?

ஓம் சாந்தி சாந்திஹி சாந்திஹி

எம். ஆர். ஜம்புநாதன்

குறிப்பு:— இதனைத் தொகுத்தெழுதுவதில் எனக்கு வழிக்காட்டியாயிருந்த ஸ்ரீ சிவசங்கர சர்மாவிற்கும், தனது வாரப் பத்திரிகையாகிய "லோகோபகாரியில்" வெளியிட்ட இதைப் புத்தக ரூபமாக பதிப்பிக்க அநுமதித்த அதன் ஆசிரியர் ஸ்ரீ. ப. சு. நெல்லையப்பப் பிள்ளையவர்களுக்கும் எனது வந்தனம் உரியதாகுக.

எம். ஆர். ஜ.



# திரிமூர்த்தி உண்மை

## முதல் அத்தியாயம்.

3847

### பிரும்ம விளக்கம்.

यां मेधां देवगणाः पितरश्चोपासते ।
तया मामद्य मेधयाऽग्ने मेधाविनं कुरु स्वाहा ॥ யஜு. 32, 14.

तेजोऽसि तेजो मयि धेहि। वीर्यमसि वीर्यं मयि धेहि। बलमसि बलं मयि धेहि। ओजोऽस्योजो मयि धेहि। मन्युरसि मन्युं मयि धेहि सहोऽसि सहो मयि धेहि ॥ யஜு. 20 9.

ஓ! அக்னியே (அதாவது ஒளி ரூபியான ஈசுவரனே) என்பால் உனது கருணையைச் செலுத்துவாய். உனது பேரொளியைத் தந்து என்னைப் பிரகாசிக்கச் செய்வாய். நீ எல்லையற்ற சக்தியையுடையாய்; எனக்கு அச்சக்தியைத் தந்தருள்வாய். நீ பெரும் வலிமையையுடைய தோளினை யுடையாய்; எனது பலமற்ற தோளினை, உனது பலத்தால் அலங்கரிப்பாய். நீ எல்லாம் வல்ல பரம்பொருள்; உனது வல்லமையை எனக்கு அளிப்பாய். தூய்மை அற்றவையைக் காணுங்கால் கோபவெறி கொள்வாய்; எனக்கும் அவ்வெறியைத் தந்திடுவாய். புகழிலும் நிந்தையிலும் நீ கலவாதவன்; என்னை அங்ஙனம் இருக்கச்செய்வாய். உன்னை மறப்போனை

யும், நிந்திப்போனையும், பொருத்தருளும் பெருந்தகையான் நீ. அப்பெருங் குணத்தை யான் பெறும் வழியை எனக் களிப்பாய்.

येन कर्माण्यपसो मनीषिणो यज्ञे कृण्वन्ति विदथेषु धीराः।
यदपूर्वं यक्षमन्तः प्रजानां तन्मे मनः शिवसङ्कल्पमस्तु॥

யஜு. 34, 2.

எங்கும் வியாபித்துள்ளோனே! சலன சக்தியின் பீடமாயுள்ள என் மனம்-கல்விப்பயிற்சியும் தர்மப்பயிற்சியுமுள்ளோருக்கு, யக்ஞபூமியிலும் போர்முனையிலும், நற்காரியத்தைச் செய்ய போதிய திடத்தையும், பெருங்குணத்தையும் தரக்கூடியது-தீமையை யொழிக்கவும் நற்கருமத்தைச் செய்யவும் தூண்டுகோலாகட்டும்.

यत्प्रज्ञानमुत चेतो धृतिश्च यज्ज्योतिरन्तरमृतं प्रजासु।
यस्मान्नऋते किंचन कर्म क्रियते तन्मे मनः शिवसङ्कल्पमस्तु॥

யஜு. 34, 3.

பேரறிவிற்குக் களஞ்சியமாயும், பகுத்தறியும் தன்மைக்கு இருப்பிடமாயும், இந்திரியாதி குணங்களின் ஒளியாயும், அழிவற்றதாயும், மனிதன் செய்யும் ஒவ்வொரு காரியத்திற்கும் மூல வஸ்துவாயும், இருக்கும் எனது மனம் தூய்மைப் பெறட்டும். தூய்மையற்றதை விலக்கட்டும்.

கற்பகோடி காலமாய் காற்று இருந்து வருகிறது. அதற்கு நாசமென்பது கிடையாது. காற்றன்னியில் நாம் உயிர் வாழமுடியாது. காற்றைப் பல திசைகளிலும் பரப்பி அலையச்செய்வது சூரிய கிரணமேயாகும். இதனாலேயே

இதைச் சூரிய மகனெனவும் கூறுவதுண்டு. காற்றினலேயே சப்தம் ஒலிக்கிறது. அதன்னியில் சப்தமிராது. உதாரணமாக நிசப்தமானவிடத்தில் பூங்காற்று வீசும்பொழுது நீர் ஓடைகளிலும் மூங்கிற் புதர்களிலும் உண்டாகும் சப்தத்தைக் கேட்டு மனமுருகாதவர் உண்டோ? பல திசைகளிலும் பரவுகிறபடியினல் காற்றை நான் முகனெனவும் சொல்லுவார்கள். சப்தத்தைக் கேட்கக் கருவியாய் பிரயோசனப்படுவது காற்றேயாகும். அதன்னியில் செவியும் புலனுகாது; மொழிகளை உச்சரிக்கவும் இயலாது; பிராணனுக்கு ஆதாரம் காற்றேயாம். அகக்காற்றை நாவன்மை விளக்கினல் புறக்காற்றை அது இழுக்கின்றது. தன் காற்றையே தான் இழுத்துக் கொள்ளுகிறபடியினல் தகப்பன் தன் பெண்ணை இழுத்தான் என்றூர்கள். இயற்கை விந்தையை விளக்க வேண்டி கவிகள் நான்முகப் பிரும்மா தன் பெண்ணையே மணந்தார் என்றூர்கள். ஓய்வு என்பது என்று அறியாமல் எக்காலமும் எங்கும் பரவிக்கொண்டே யாவற்றையும் அலையச்செய்யும் காற்றுக்கு மாதரீசுான் என்ற பெயருண்டு. மாதா என்றால் நிர்மாணிப்பவன், சிருஷ்டி செய்பவன் என்று பொருள். அக உணர்வு, புற உணர்வு இவைகளைச் சிருஷ்டிக்கிற இக்காற்றிற்கே தாதா விதாதா சிருஷ்டா என்றபெயர்களுண்டு. எனவே காற்றே பிரும்மாவாம்.

## 2. பிரும்ம நாமம்.

ருத்விக், விஷ்ணு, ஆதித்தியதன், சூரியன், அக்னி வாயு, நதி, உஷை, அகோராத்திரம், பூமி முதலிய பெயர்களினல் தேவதைகள் வேதத்தில் விளக்கப்பட்டிருக்கின்றன. அப்படி பிரும்மாவின் பெயரைத் தேவதையாக

எந்த மந்திரத்திலும் விளக்கப்படவில்லை. வேதத்தில் இந்த பிரும்ம சப்தம், பரமான்மா, தபஸ்வி, யாகஞ்செய்பவன் முதலியவர்களைக் குறிப்பவர்களுக்கே வருகின்றன. எவ்விடத்திலும் தேவதை என்னும் பெயரை விளக்கவில்லை. விஷ்ணு, இந்திரன், வாயு, மித்திரன், அரியமா, வருணன், ஆதித்தியன், ஆகாசம், பூமி, உருத்திரன் முதலிய தேவதைகளின் துதி பிரார்த்தனை அடிக்கடி காணப்பட்ட போதிலும் பிரும்மாவிற்கு ஒரு துதியும் பிராத்தனையும் காணப்படவில்லை. ஆனால் பிரும்ம சப்தம் அடிக்கடி உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது. இதற்கு உதாரணம் :—

तत्त्वायामि ब्रह्मणा वन्दमानः । யஜு 18, 49.

सोमानं स्वरणं कृणुहि ब्रह्मणस्पते । யஜு 3, 28.

इदं मे ब्रह्म च क्षत्रं चोभे श्रियमश्नुताम् । யஜு 32, 16.

इदं जनासो विदथ महद्ब्रह्म वदिष्यति । அத. 1, 32.

अतीव यो मरुतो मन्येत नो ब्रह्म वा योनिन्दिवत् क्रियमाणम् ।

तपूंषि तस्मै वृजिनानि सन्तु ब्रह्मद्विषं द्यौरभिसंतपाति । அத. 1,2,12

ब्रह्म यज्ञानं प्रथमं पुरस्तात् । அத். 4, 11.

तोभिर्ब्रह्माविध्याति देवपीयून् हृद्बलैर्धनुर्भिर्देवजूते । அத. 1, 5, 8.

ब्रह्माणंयत्रहिंसन्ति तद्राष्ट्रंहन्तिदुच्छुना । அத. 8, 16, 12.

यद्ब्रह्माभिर्यदृषिभिर्यद्देवैर्विदितंपुरा ।

यद्भूतं भव्यमासन् वत तेना ते वारये विषयम् । அத.3,11,1.

ஆண்பாலில் பிரும்மா வெனவும்,ஒன்றன்பாலில் பிரும்ம மெனவும் படும். ஆனால் இது பொதுப்பால். வேதத்தில் இது இரண்டு பாலிலும் உபயோகஞ் செய்யப்பட்டிருக்கின்றன. பிற்கால வடமொழி இலக்கியத்தில் வேதம், தத்துவம், தபசு, பரமான்மாவில் ஒன்றன்பாலாகவும், பிராமணன், பிரஜாபதியில் ஆண்பாலாகவும் உபயோகஞ் செய்யப்பட்டிருக்கின்றது. இப்பொழுது ஈசுவரனைப் பிரும்மா வென்றும் பிரும்மாவைத் தனி தேவனென்றும் அறியப்பட்டு வருகிறது. ஈசுவரன் எதையும் விடப்பெரிய பொருள். இது தான் அவன் சிறப்பு. வேதமும் பெரிய பொருளே. அதனால் அதுவும் பிரும்மந்தான். வேதத்தைப் படிப்பவன் பரமான்மாவை அறிந்தவனாகிறபடியால் அவனும் பிரும்மா தான். தபசு முதலியவைகளுக்கும் பிரும்மாவெனப் பெயர் உண்டு. வாயுவிற்கும் இப் பெயரைவைக்கக் கூடும். கற்பிக்கப்பட்ட தேவதைக்குப் பிரும்மா வென்று கருதி யிருக்கலாம். சிருஷ்டித் தலைவர் எனக் கருதினால் பெரியவராய் வைத்தல் அவசியமல்லவா? பிரும்ம ஸ்தானம் யாவற்றையும் விட உயர்ந்த படியால் அதையே வைத்திருக்கலாம்.

## 3. பிரும்மாவும் உருத்விக்கும்.

யாகஞ் செய்பவனுக்கே பிரும்மா என்னும் பெயரிருந்தது. பிரும்மா சிருஷ்டி செய்பவர். வேதமன்னியில் அறிவில்லை. அதனால் அதன் ஆசிரியரும் பிரும்மாவெனப்படுகிறார். வேதமறிந்தவன் பிரகிருதி விளக்கங்களின் சகாயத்தினால் காரியங்களைச்செய்தல் கூடும். வைதீக பாஷையில் உருத்விக்கு என்னும் பெயருக்குப் பிரும்மா வெனவே விளக்கமா யிருக்கிறது. பதார்த்தங்களுக்குப்

பேர் வைப்பதற்கு அறிவு முதிர்ச்சியும் வேத ஞானமும் அவசியமானபடியால் அக் கற்பனை தேவதையைப் பிரும்மாவாக கருதியுள்ளார்கள். யாகத்திற்கு வேண்டிய சாமக்கிரியைகளைத் தயார் செய்பவனைப்போல் உலகத்திலிருக்கும் பதார்த்தங்களை வேத அறிவினால் பிரும்மா சிருஷ்டிக்கிறார். இதனாலேயே காற்று தேவதை பிரும்ம பட்டம்பெற்றது.

## 4. பிரும்மாவின் உற்பத்தியும் சதுர் முகமும்.

उदप्लुतं विश्वमिदं तदासीत् यन्निद्रया मीलितदृङ् न्यमीलयत् ।
अहीन्द्रतल्पेऽधिशयान एकः कृतक्षणः स्वात्मरतावनीः ॥
तस्यात्मा-सूक्ष्माभिनिविष्टदृष्टेरन्तर्गतोऽर्थो रजसा तनीयान् ।
गुणेनकालानुगतेन विद्धः शुष्यंस्तदाभिद्यतनाभिदेशात् ॥
स पद्मकोशः सहवोदतिष्ठत् कालेन कर्म्मप्रतिबोधितेन ।
स्वरोचिषा तत्सलिलं विशालं विद्योतयन्नर्कइवात्मयोनिः ॥
तस्मिन् स्वयं वेदमयोविधाता स्वयंभुवं यस्म वदन्ति सोऽभूत ।
परिक्रमन् व्योम्नि निवृत्तनेत्र श्चात्वारि लेभेऽनुदिशं मुखानि ॥

பாகவதம்.

நான்கு வேதங்களை முகமாகக் கொண்டவனுக்கே சதுர்முகனெனப்பெயர். சதுர்முகம் என்பதை நான்கு முகமெனவே கற்பனை செய்தார்கள்.

एतस्मिन्नन्तर तत्र सस्त्रीकाश्च चतुर्मुखः । पद्मनाभे नाभिपद्मात्
निःससार महामुने॥ कमण्डलधरः श्रीमान् तपस्वी ज्ञानिनां-
वरः

चतुर्मुखैस्तं तुष्टाव प्रज्वलन ब्रह्म तेजसा ॥ तन्नाभिकमले ब्रह्मा बभूव कमलोद्भवः। सम्भूय पद्मदण्डेच बभ्राम युग-लक्षकम् ॥ नान्तंजगाम दण्डस्य पद्मनालस्य पद्मजः ॥

கடவுள் உலகத்தைச் சிருஷ்டித்தவுடன் அனந்த சயனஞ் செய்தார். சில காலத்திற்குப் பிறகு அவர் தொப்புளிலிருந்து கமலம் ஒன்று கிளம்பியது. சூரியனைப்போல் பரந்துள்ள ஜலத்தில் பிரகாசித்தது. அதிலிருந்து வேத மய பிரும்மா உற்பத்தியானார். அதற்கே சுயம்பூ வெனப்பெயர். ஆகாயத்தில் கிளம்பும் போதே நான்கு திசைகளையும் நோக்க நான்கு முகங்களுண்டாச்சுது.

நாராயணனின் நாபியிலிருந்து ஸ்திரீயுடன் கூடின பிரும்மா நான்முகனுய்த் தோன்றின தாகவும், உடனே கடவுளைப் பிரார்த்தித்தாகவும் ஆயிரக்கணக்கான யுகங்கள் வரையில் சுற்றித்திரிந்ததாகவும் தேவிபாகவதம் கூறுகிறது.

ஆகாசத்தின் பெயர் சமுத்திரம். சூரிய கிரணத்திற்குக் கமலத்தண்டு எனப்பெயர். விஷ்ணு (சூரியன்) சமுத்திரத்தில் (ஆகாசத்தில்)சயனஞ் செய்து கொண்டிருக்கிறார். அவரிடமிருந்து கிரண ரூபமான கமலத்தண்டானது சமுத்திரத்தில் (ஆகாசத்தில்) கிளம்பியது. அதாவது சூரியனின் உஷ்ணமானது ஆகாசத்தில் பரவ ஆரம்பித்தது. உஷ்ணத்தின் பரவுதலைக் கமலம் மலருகிறது எனப்படுகின்றது. உஷ்ணத்திலிருந்து உற்பத்தியானது என்ன? வாயு. நான்கு திசைகளிலும் பரவினபடியினால் சதுர்முக மெனப்பட்டது. விஷ்ணுவினது கையும் சிவனது கண்ணும் பிரும்மாவினது முகமும் சிறப்பித்துச் சொல்லப்பட்டிருக்கிறதைக் கவனிக்கவும். பிரும்மாவிற்கு முகத்தை முக்கியமாகக் கருதுவ

தற்குக் காரணமுண்டு. வாயு எங்கும் பரவி யுள்ளது. கண்ணால் காண முடியாதது. சூரியன கிரணத்தைப் போல் இதில் ஒன்று மில்லை. அக்னி ரூபமான ஒளியும் இதில் இல்லை. எத்திசையிலும் வாயு வீசும் வலிமையுடையதாதலால் நான்கு திசைகளிலும் முகமுள்ளதெனக் கருதி அதன் குண விசேஷங்களை இதில் ஆரோபணஞ் செய்து விட்டார்கள்.

## 5. பிரும்மாவும் மகளும்

**वाचं दुहितरं तन्वीं स्वयंभूर्हरतीं मनः। अकामां चकमे क्षत्तः सकाम इति नः श्रुतम् ॥ तमधर्म्मे कृतमतिं विलोक्य पितरं सुताः। मरीचिमुख्या मुनयो विस्रम्भात्प्रत्यबोधयन ॥ नैतत्पूर्वैः कृतं त्वद्य न करिष्यन्ति ये परे। यः स्वां दुहितरं गच्छे दनिगृह्यांगजं प्रभुः ॥ तेजीयसामपिह्येतन्नसुश्लोक्य जगद्गुरो। यद्वृत्तमनुतिष्ठन वै लोकः क्षेमाय कल्पते ॥ तस्मै तमोभगवते यइदंस्वेन रोचिषा। आत्मस्थं व्यंजयामास स धर्म्मं पातुमर्हति** ஸ்ரீமத் பாகவதம்.

மகாபாகவதம் 3-வது படலத்தில் காணப்படும் விதுர, மைத்திரேய சம்பாஷணை கவனிக்கத் தகுந்தது. பிரம்மா சரஸ்வதியைச் சிருஷ்டித்த பின்னர் மனதிலுண்டான காம விகாரத்தினுல் தன் பெண் என்றும் நினையாது அவளை இச்சித்தார். முனீசுரர்கள் இந்த அதர்மத்தைக் காணச்சகியாது, தங்களது தந்தையிடம் போய் இது அழகல்ல வென்றும், சிருஷ்டி கர்த்தா தர்மத்தைப் பரிபாலனம் செய்யவேண்டு

மென்றும் முறையிட்டார்கள். பிரம்மா லஜ்ஜையடைந்தார். இவ் விஷயத்தை விளக்கும் விக்கிரஹங்கள், புஷ்கரம் என்னு மிடத்தில் இருக்கின்றன.

பிரும்மா இத்தகைய செயலைச்செய்தாரா? இல்லை. உருவுடன் கூடிய எதையும் பிரும்மா என்னும் பதம் குறிப்பிடவில்லை. பிரம்மா என்னும் பதம் குறிப்பது காற்றேயாகும். வாக்கைப் பிரும்மா உற்பத்தி செய்தார். வாக்கிற்கு வடமொழியில் பாரதி, கிர், வாக் வாணி, சரஸ்வதி என்ற பெயர்கள் உண்டு. பிரம்மா சரஸ்வதியை விலக்கவில்லை. பிரும்மாவினால் விலக்கப்பட்டது மானிட வாக்கு. அவருடைய உண்மையான பத்தினி நாவன்மை என்னும் சரஸ்வதி தேவிதான். நாவன்மையானது வாயுவினால் தான் விளக்கமாகின்றது. இதற்கிருப்பிடம் வாயுதான். உட்காற்றினால் நாவன்மை விளக்கமாகிறது. புறக்காற்றினால் வாக்கு வெளிப்படுகிறது. அகக்காற்று இல்லையானால் அதன் உற்பத்தியும் இல்லை. அகக்காற்றும், புறக்காற்றும் ஒன்று தான். வாயு ஒரு பெருந் தேவதை தான். வெகு அழகுள்ள மோகினியான பேச்சை (வாணி) கொண்டிருக்கிறது. வாணியானது காற்றிலுண்டாய் காற்றிலேயே மறைகின்றது. வாயுவுக்குப் பெண்ணும் இல்லை; தகப்பனும் இல்லை; இது நாவன்மை (சரஸ்வதி) யின் விளக்கங்களாகும். வாயுவின் இடத்தில் பிரும்மத்தைக் கற்பித்தபடியால் அதன் குணத்தையும் அதில் ஏற்படுத்தினார்கள் போலும்.

## 6. காயத்ரீயும் சாவித்திரியும்

**पवित्ररूपा सावित्री गायत्री ब्रह्मणः प्रिया ।** தேவி பாகவதம்.

**सावित्री वामपार्श्वस्था दक्षिणस्था सरस्वती ।** காளிபுராணம்.

शतरूपा च सा ख्याता सावित्री च निगद्यते ।
सरस्वत्यथ गायत्री ब्रह्माणी च परन्तप ॥ மத்ஸ. புரா. 3.

மேலே கூறப்பட்ட புராண சுலோகத்தால் பிரும்மாவிற்குச் சாவித்திரி காயத்ரீ என இருஸ்திரீகள் யிருப்பதாகத் தெரிகின்றது. சாவித்திரியைக் காயத்திரீ என்றும் அழைப்பார்கள்.

त्रिभ्य एव तु वेदेभ्यः पादंपादमदूदुहत ।
तदित्यृचोऽस्याः सावित्र्याः परमेष्ठीप्रजापतिः ॥ மனு. 2.
ओङ्कारपूर्विकास्तिस्रोमहाव्याहृतयोऽव्ययाः ।
त्रिपदाचैव सावित्री विज्ञेयं ब्राह्मणोमुखम् । மனு. 1, 8.
एकाक्षरं परंब्रह्म प्राणायामाः परन्तपः ।

மனு ஸ்மிருதியில் காயத்திரீயின் பெயர் சாவித்திரி என்று கூறியிருக்கிறது. 'தத்சவிதுர்வ ரேணீயம்' என்னும் இருக்கின்ற விஷயத்தில் எங்கும் சாவித்திரியையே உபயோகப்படுத்தியிருக்கிறார்கள். இருக்கின் தேவதை சாவித்ரி. சவிதையை தேவதையாக உடையது சாவித்திரி. புராணம் இக்கருத்துக் கொண்டதல்ல; சூரிய சக்திக்குச் சாவித்திரி யெனப் பெயர். "சவிது: சூரியஸ்யேயம் சாவித்திரி" முதலில் சூரிய சக்தி யென்றே அதன் உரையாயிருந்தது. புராணஞ் செய்தவர்கள் நாளடைவில் இதன் பொருளை விபரீதமாக்கிவிட்டனர். பிராம்மணத்திலும் மனுஸ்மிருதியிலும் காயத்திரியையும் சாவித்திரியையும் ஏகார்த்த பதமாகவே உபயோகஞ் செய்திபட்டிருக்கிறது.

## 7. காயத்திரியினுடன் விவாகம்

**इह मे नकृतं किञ्चित् द्वारे वै मण्डनं मया। भित्या वै चित्रकर्म्माणि स्वस्तिकं प्राङ्गणे नतु। लक्ष्मीर्नाद्यापि आयाता सतीनैवेहदृश्यते। महताऽऽग्रहेणाऽऽहूता शक्राणीनाऽऽगता-स्त्विह। मेधाश्रद्धा विभूतिश्च अनुसूया धृतिःक्षमा। गंगासरस्-वती चैवनाद्याऽऽगच्छन्ति कन्यकाः। ब्रूहिगत्वविरञ्चिं तं तिष्ठता-वन्मुहूतकम्। सर्वाभिः सहिताचाहमागच्छामित्वरान्विता।**

பத்ம புராணம் சிருஷ்டி காண்டம் 16-வது அத்தியாயத்தின் கதையாவது :—தனது வேலை முடிந்ததும் பிரும்மா சாவித்திரியை அழைப்பதற்குத் தூது தனுப்பினார். "எனக்கு வேலையோ அதிகம். லக்ஷ்மி பார்வதி முதலானோர் வரவில்லை. இந்திராணியும் வரவில்லை; சிரத்தை, விபிருதி, கங்கை சரஸ்வதி முதலானவர்களும் வரவில்லை. ஒரு முகூர்த்தம் தாமதிக்க வேண்டும் என்று பிரும்மாவிடம் சொல்லுமாறு சாவித்ரி தூதனுக்குப் பதிலளித்தாள். இது கேட்ட பிரும்மா வெகுண்டு என் நிமித்தம் வேறு பத்தினியைத் தேடுவாயாக என்றார். தேவேந்திரன் ஒரு கோபிகையை கொணர்ந்தான். விஷ்ணு சீக்கிரம் காந்தர்வ விவாகம் செய்து கொள் என்றார். பிரும்மாவும் அதற்கிணங்கி அப்படியே செய்தார். பிறகு சாவித்திரி கோபமடையவே பிரும்மாவின் யக்ஞம் தடைப்பட்டது. அதன்மேல் தேவர்கள் வேண்ட சாவித்ரி மனமிசையவே, யாகமும் நடக்க வாரம்பித்தது. அப்பொழுது பிரும்மா சரஸ்வதியைப்பார்த்து சொன்னதாவது:—பிரியே! சாவித்ரி உன் தாசி. நான் உன்

ஆதீனத்தில் எப்பொழுதும் இருக்கிறேன். உன் கட்டளைகளை நிறைவேற்ற காற்றுக்கொண்டிருக்கிறேன்.'' இதைக்கேட்ட சாவித்ரிக்கு அவமானமாய்விட்டது.

8 சாவித்திரி கதையின் தத்துவம்.

तत्राऽऽयताचसादेवी सावित्री ब्रह्मणः प्रिया। सावित्रीं संमुखीं दृष्ट्वा सर्वलोकपितामहः। गायत्र्यासहितोब्रह्मा इदं वचनमब्रवीत्। एषादेवीकर्वकरी अहंतेवशगःस्थितः। मामादिशवरारोहे यत्तु कार्य्यमयात्विह। एवमुक्तातुसावित्री स्वयं देवेन ब्रह्मणा। अपयाऽधोमुखी देवी न वक्तुं किञ्चिदिच्छति। पादयोःपतिता तस्या गायत्री ब्रह्मचोदिता। इत्यादि। सृष्टिखण्ड अध्याय २६।

பிரும்மாவின் மனைவி சாவித்திரி; ''சவிது: சூர்யஸ்ய இயம்'' சூரிய சக்திக்குச் சாவித்திரி யெனப் பெயர். சூரிய உஷ்ணத்தைக் கிரகிக்கவேண்டும். சூரிய உஷ்ணம் சூரியனிட மிருந்தே உற்பத்தி யாகின்றது. எனவே அதைச் சூரியனின், பெண் எனக்கொள்ளலாம். சூரியன் உஷ்ண ரூபமான சாவித்திரியை வாயுவிற்குக் கொடுக்கிறான். சாவித்திரியை அடைந்து வாயுதேவன் சக்தி ஐசுவரியத்துடன் உலகத்தைச் சிருஷ்டி செய்கிறான். உஷ்ண ரூபமான சாவித்திரியின் உதவியில்லாமல் வாயு தேவனால் ஒன்றும் செய்ய இயலாது.

முதலில் வாயுவா, சூரியனா என்று பார்ப்போம்? முதல் ஆகாசமும், ஆகாசத்திலிருந்து வாயுவும், வாயுவிலிருந்து அக்னியும், அக்னியிலிருந்து ஜலம் முதலியவைகளும் உண்

டான அக்னி மொழியால் சூரியன் முதலியவைகளை அறிய வேண்டும்; இக்கிரமத்தால் சூரியனின் காரணம் வாயுவாகின்றது; வாயுவிற்குக் காரணம் சூரியனல்ல. வாயுவே முக்கியம். சூரியனது உஷ்ணத்தால் வாயு விருத்தி யாவது போல் தோன்றுகிறன.

சூரிய உஷ்ணத்தால் வாயு இலேசாகின்றது. வாயுவில் இருக்கும் ஜலத்துளிகளை அது உலர்த்தி விடுகின்றது. வாயுவை அசையச்செய்கிறது சூரியன் தான் என்று தோன்றுகிறது. வாயு மண்டலம் பூமியின் சிறிது உயரம் வரை அளாவி நிற்கின்றது; அதுவும் ஒரு தேவதை. அசையா சுபாவத்தினுல் அப்படியே நிற்கின்றது. ஆனுல் சூரியனின் உஷ்ணமாகிற சாவித்திரியை அடைந்தவுடன் ஓடுகின்றது; வாயுவில் சப்தத்தை உண்டாக்கும் ஒரு சக்தியுண்டு; அச்சக்தியைத் தான் சரஸ்வதி யென்பார்கள்; இக்காரணத்தினுலேயே சரஸ்வதி சிறந்த சக்தியாயும், சாவித்திரி சாதாரண சக்தியாயும் காணப்படுகிறுர்கள். இதுவே சரஸ்வதி சிறந்த மனைவியாவதற்கும் சாவித்திரி சாதாரண மனைவி யாவதற்கும் காரணமாகின்றன.

## 9. பிரும்மாவும் சரஸ்வதியும்.

**ब्राह्मी तु भारती भाषा-गीर्वाग्वाणी सरस्वती ।**
**व्याहार उक्तिर्लपितं भाषितं वचनं वचः ।** அமரகோசம்

விஷ்ணுவிற்கு இலக்ஷ்மியைப் போலும், மகாதேவனுக்குப் பார்வதியைப் போலும் பிரும்மாவிற்குச் சரஸ்வதி ஏற்பட்டுள்ளது. வாயுவின் சிறந்த குணம் சப்தத்தை உற்பத்தி செய்வது என்றேம். வாயு வன்னியில் சப்தம் தோன்றுது. சப்தத்தின் பெயரே சரஸ்வதி.

சுலோகங்கள், தாரை, இலா, கௌ, கௌரி, காந்தர்வீ, கபீராமன்தரா, மந்திராஜனி, வாசி, வாணி, வாணீசீ, வாண்: பவி: பாரதி, தமனி, நாளீ மேனி: மேனு, சூர்யா, சரஸ்வதி முதலியவைகளெல்லாம் நாவன்மைக்கே பெயர். இதில் சரஸ்வதி, இலா, பாரதி முதலிய பெயர்கள் உட்பட்டிருக்கின்றன.

வேதத்தில் "சரஸ்வதி" மொழி "நதி" "வாணி" முதலிய உரைகளிலும் உபயோகப் படுகின்றது.

சத்தியத்துடன் கூடிய இனிய மொழிக்கு மரியாதை இல்லாத தேசமே கிடையாதெனலாம். "வாஜோபி" பலவிதமான சங்கீதக் கருவிகளுக்குப் பெயர். இக்கருவிகளின் இனிய ஓசையுடன் (சரஸ்வதி)சரசவாணி, புனிதமான வேதவாக்கையும்அதற்குச் சரியான இனிய ஓசையும் (ந) நம் அந்தக்கரணங்களையும் (பாவகா) புனித மாக்குகின்றது. சரஸ்வதி எங்ஙனமுள்ளவள் ? (வாஜினிவதீ) இயல்பிலேயே இராகம் தாளம் உடையவளாய், (தியாசது,) அதி வேகமாய் புத்தியில் பிரவேசஞ் செய்பவளாய் (யக்ஞம்) பரமாத்மாவின் (வஷ்டு) இஷ்டத்தை செய்பவளாயிருக்கிறாள். இரம்மியமான சங்கீதம் உபதேச முதலியவைகளைக் கேட்கும் பொழுது நாம் அனுபவியாத ஒரு மனோ நிலையை அடைகிறோம்.

(வாணீ) அச்சமயத்தில் உண்மை, யாகவே ஈசுவரனால் இழுக்கப்படுகிறோம்; இதைவிட அந்தக் காரணத்தைப் புனிதஞ்செய்வது யாது ? இதை எப்பொழுது அடையலாம்? (தியாவசு) புத்தியில் பூர்ணமாய் அது நுழையும் பொழுது அனுபவிக்கலாம் ; அதாவது பேசுவதையும் பாடுவதையும் யாவரு மறியுமாறு செய்தல் வேண்டும் ; வேதம் மறுபடியும் உபதேசஞ் செய்வது யாதெனில்:—உன்னால் கோரப்படும் இக்கடவுளான அன்பு மொழியானது உனக்கு

எப்பொழுதும் மேன்மையும் சுகத்தையும் அளிக்கும் ? இது தான் அதன் பெரும் பயன்; இப்படியே இதன் உட்கருத்தை அறியவும். அடியில் வருமாறும் அதைத் தெரிந்து கொள்ளலாம் (ந:) மானிடர்களுக்கு (சரஸ்வதி) மொழியானது சத்தியத்துடன் கலந்து இருத்தல் வேண்டும். (வாஜோபி:) வாஜ-கதி-ஞானம் "பஜவிரஜகதௌ" ஏனெனில் சரஸ்வதி தானகவே ஞானவதி; மொழி பிரயோகத்தினலேயே நன்மை தீமை தெரிகின்றது. இதுவே ஞானத்தின் காரணம். இயல்பிலேயே ஞானக் களஞ்சியமென நாவன்மையைக் கூறலாம். (தியாவசு:) ஞானத்திலேயே அதன்வாசம்; மொழியிலேயே ஞானம் எப்பொழுதும் மிதந்து கொண்டு இருக்கின்றது. அந்த வாணியானது (யக்ஞம்-வஷ்டு) யக்ஞமாகிற பரமாத்மாவின் இச்சையைப் பூர்ணமாகச் செய்யட்டும் (சுநுரு தாநாம்) அன்பு, ஆதாரவுடன் கூடிய வார்த்தைகளை (சோதயத்ரீ) பிரேரணை செய்யும் (சுமதீனம்) நுண்ணிய அறிவுள்ள புருஷர்களுக்கு (சேதனதீ) உயிரைக் கொடுப்பது (சரஸ்வதி) நாவன்மை யாகும். (யகஞம்) கோரத்தகுந்த அந்தப் பரமான்மாவிற்கு, அல்லது பற்பல யக்ஞங்களுக்கு (ததே) அடிவாரம் போல் இருக்கின்றது. அதாவது அன்பும் ஆதரவுடன் கூடிய மொழிகள் எப்பொழுதும் அறிவாளிகளின் அசைவிற்குக் காரணமாயிருக்கின்றன. இதனல் தான் பரமான்மாவைத் துதிசெய்ய இயலுகின்றது; உண்மையான கர்மங்களின் அச்சாணிபோல் இருந்து கொண்டு யாக முதலிய நற்காரியங்களுக்குச் சூசிகையாயிருக்கின்றது.

इला सरस्वती मही तिस्रोदेवीर्मयोभुवः ।
बर्हिः सीदन्त्वास्रिधः । இரு. 1, 25, 7.

இலை, சரஸ்வதி, மகீ, இம்மூன்றும் இனிய பெயர்கள். இதன் விளக்கத்தைத் சங்கீதசாஸ்திரத்தில் பார்க்கலாம். மூன்று விதமாய்ப் பிரகாசிக்கும் மொழிகள் சுகத்தைத் தருகின்றன; இம் மூன்று விதமான மொழிகள் (பர்ஹி:) என்னுடைய ஹிருதய ரூபமான ஆசனத்தில் (பதிந்து) விளங்கட்டும்; இம்மூன்றும் சாதாரணமாகத் தேவியென்றே அழைக்கப்படுகின்றன. எங்குங்காணுத ஒரு உற்சாகத்தை அளித்து ஆனந்த ஐக்கிய முண்டாக்குகிறபடியால் தேவியை அடை மொழியாகக் கொண்டிருக்கிறது.

## 10. சரசுவதி முதலிய பெயர்கள்.

**शुचिर्देवेष्वर्पिता होत्रा मरुत्सु भारती ।**
**इला सरस्वती मही बर्हिः सीदन्तु यज्ञियाः ।**

(மருத்சு - தேவேஷு) பல துளிகள் வாயு தேவியினிடம் (அர்பிதா) அடங்கி யிருக்கின்றன. மருத் மொழியினுல் ஏழு இராகங்க என அறியவும். இவ்வளவு இராகங்களோடு கூடிய மொழியானது ஹோம முதலியவைகளுக்கும் யோக்கியமாகின்றது. இம்மொழிகளாகிற பாரதி, இலை, சரசுவதி ஹிருதய ரூபமான ஆசனத்தில் (சதிந்து) அமரட்டும். இம்மூன்றும் (யஞ்ஞியா:) ஈசுவர ஐக்கியமோ அல்லது யாகச் செய்கையோ என்கிருர் சாயனர்.

**भारतीले सरस्वती या वः सर्वाउपब्रुवे ।**
**ता नश्चोदयत श्रिये ।**

பாரதியே! இலையே! சரசுவதியே (யா: வ: சர்வா :) உங்கள் எல்லோரையும் (உபப்புருவே) வணங்குகிறேன் (தா:) (ந:) எங்களின் மேன்மையை (சோதயிதா) காப்பாற்

றவும். உயிரில்லாததை உயிருள்ளதுபோல் அழைப்பது கவிகளின் சுதந்திரமாகும். கஷ்டப்பட்டு படித்தும் மனதில் பாடம் பதியாமலிருந்தால் சோர்ந்து ஏ புஸ்தகமே! கிருபை செய்து எனக்கு வரச்செய்வாயாக! என்று சொல்வது வழக்கம். இதிலிருந்து புத்தகத்தை உயிருள்ள வஸ்து என்று எண்ணக்கூடாது. இம்மாதிரியே வேதத்திலிருப்பதையும் அறியவேண்டும்.

முன் சுலோகத்தைப் போலவே இதையும் அறிந்து கொள்ளவும். அநேக இருக்குக்களில் இடா, பாரதி, சரஸ்வதி என மூன்று பெயர்களும் ஒன்றாக வருகின்றன.

(பாரதி) சூரியன் (ந:யக்ஞம்) எங்களுயை யாகத்தைப் பூர்த்தி செய்யட்டும். சரஸ்வதி வாக்கானது (ருத்திரை:) உருத்திரர்களுடன் (ந:) எங்களுடைய யாகத்தை (ஆவீத்) இரட்சிக்கட்டும். (உபஹூதா) நன்றாய் அப்பியாசஞ் செய்யப்பட்ட (இடா) இலை (வசுபி:) வசுக்களுடன் (சஜோஷ:) அன்புள்ளதாக ஆகட்டும். (ந:-யக்ஞம்) எங்களுடைய யாகத்தில் (அபதேஷு) வாயு முதலான தேவர்களை (வக்த) அமரச் செய்யட்டும்.

आ भारती भारतीभिः सजोषा इला देवै र्मनुष्येभिरग्निः ।
सरस्वती सारस्वतेभिरर्वाहिं रेदं सदन्तु ।
भारतीयवमानस्य सरस्वतीलामही इमंनोयज्ञमागमन् तिस्रोदेवीः सुवेशसः ।
आदित्यैर्नो भारती वष्टु यज्ञं सरस्वती सह रुद्रैर्न आवीत् ।
इडोपहूता वसुभिः सजोषा यज्ञनो देवी स्मृतेषु वत्त । யஜு 29, 8.

சூரிய சம்பந்தம், உருத்திர சம்பந்தம், வசுசம்பந்தம், என மூன்று விதமாக வார்த்தை பிரிக்கப்பட்டிருப்பது இதிலிருந்து வெளியாகும். அதாவதுசாமவேத தேவதை சூரியன். வாயுவின் பெயர் உருத்திரன். யஜுர் வேதம் வாயு சம்பந்தமும், இருக்குவேதம் அக்கினி சம்பந்தமுமானது. சாமவேத சம்பந்தமான இராகத்திற்குப் பாரதி எனப்பெயர். யஜுர் வேத சம்பந்தமான மொழிக்குச் சரஸ்வதி யெனப் பெயர். இருக்வேத சேர்க்கையானமொழிக்கு இடா யெனப் பெயர். இம்மூன்றிலும் அடங்கியது அதர்வ வேதம். உண்மையாய், சூரியன், காற்று, உஷ்ணம் ஆகிய தத்துவங்களிலுலேயே மொழியானது மலருகின்றது. அவரவர்கள் யோக்கியதைக்குத்தக்கவாறு பிரும்மச்சாரிகளிலும் ஆதித்தியன், ருத்திரன், வசு என மூன்று வகை உண்டு. முறையே அவர்கள் பாரதி சரசுவதி இலை யெனப்படுவார்கள். அவரவர்களின் சக்திக்கேற்றவாறு அவரவர்களின் யாகங்கள் சிறப்படைகின்றன.

देवीस्तिस्रस्तिस्रोदेवीः पतिमिन्द्रमवर्धयन् ।
अस्पृक्षद भारती दिवं रुद्रैर्यज्ञं सरस्वती ॥
इडावसुमाति गृहान् वसुवने वसुधयस्य व्यन्तु यज । யஜு 28,18.

பாரதி, சரசுவதி இடா ஆகிய இம் மூன்று தேவிகளும், புருஷனை அதாவது பாதுகாக்கும் இந்திரனை உற்சாகப் படுத்துகின்றன. இந்திர மொழிக்குப் பரமான்மா வென்று அறிந்து கொள்ள வேண்டும். இருக்கு, யஜுர், சாமமாகிற மூன்று மொழிகளும் ஈசுவரனையே துதி செய்கின்றன. வேதத்தின் புருஷன் கடவுளே. ஜீவான்மாவிலும் இச் சேர்க்கை யுண்டு. ஜீவான்மா இல்லையேல் இதை உச்சரிப்பவர்யார்? உண்மையாய்

ஜீவான்மாவும் இதில் ஆனந்த மடைகிறுன். காலையிலும் மாலையிலும் பகலிலும் ருக்வேதாதிகளுடன் உச்சாரணை செய்து ஹோமம் செய்வதின் பயன் இதில் விளக்கப்பட்டிருக்கிறது.

**होता यत्तत् तिस्रोदेवीर्नभेषजं त्रयस्त्रिधावो अपस इडा सरस्वती भारती महीः । इन्द्रपत्नीर्हविष्मतीर्व्यन्त्वाज्यस्य होतर्यज ।** யஜு 28, 8.

இங்கும் பாரதி, சரஸ்வதி இலை இந்திர பத்னி யென்றே சொல்லப்பட்டிருக்கிறது. இந்திரனைக்காப் பாற்றுகிறவளாகையினுல் இந்திர பத்தினி ஆகிருள். மகீதரரின் விளக்கமும் இதை யொட்டியே இருக்கிறது. வேதமில்லாமல் கடவுளை நிரூபிப்பது கடினமான காரியமாகும். வேத மொழிக்கும் இந்திரன்மனைவி என்று பெயர். இந்திரன் எதற்கு இரட்சகனே அதற்கும் இந்திர பத்தினி எனப் பெயர். விசுவேதேவருடன் சாதாரணமாய் சரஸ்வதி மொழியே அதிகமாக வருகின்றது. சரஸ்வதி சேர்க்கையுள்ள சில ருக்குக்களை எடுத்து ஆராய்வோம்.

**पावमानीर्यो अध्येत्यृषिभिः संभृतं रसम् ।**
**तस्मै सरस्वती दुहे क्षीरं सर्पिर्मधूदकम् ।**

(ரசம்) பரமான்மாவின் சேர்கையான விஞ்ஞான இரசம் (சம்புருதம்) நிறைந்துள்ள (பாவப் பிராணி:) அந்தக்கரணத்தைப் புனிதமாக்கும் மொழியை (ய:) எந்த ஞானிகள் படிக்கவும் யோசனையும் செய்கிருர்களோ, அவர்களின் நிமித்தம் அம்மொழியானது பாலையும் நெய்யையும் தேனையும் தருகின்றது. அதாவது வேதத்தைக் கற்ற அறிவாளர்களாலெழுதப்பட்ட நூல் அறிவை விளக்கி நன்மையை விளைவிக்கிறது.

## 11. சாஸ்வதி நதி

**इयं शुष्मेभि र्बिसखा इवारुजत् सानु गिरीणां तविषेभि-रूर्मिभिः । पारावतघ्नी यबसे सुवृक्तिभिः सरस्वती माविवासेन धीतिभिः ॥** ருக். 6, 61,

(இயம்—சரஸ்வதி) மெல்லிய இந்நதியானது மலையையும் மழுங்கச்செய்கிறது. இதிலிருந்து நாம் தப்பவழிதேட வேண்டும்,

**प्र क्षोदसा धायसा सस्र एषा सरस्वती धरुणमायसी पूः । प्र वाबधाना रथ्येव याति विश्वाअपो महिना सिन्धुरन्याः ।** 7,8,55.

இச் சரஸ்வதி நதியானது வெகு வேகமாய்ப் பாய்ந்து கொண்டிருக்கிறது.(ஆயசி—புன:) இரும்பினல் கட்டப்பட்ட நகரத்தைப் போல் இதுபாய்கிறது. வெகு வேகத்துடன் பாயும் சரஸ்வதியானது பிற நதிகளைப்பாதிக்கின்றது. இரதம் போல் நகர்ந்து பாகன் சிறிய கொடி முதலியவைகளை அழித்துத் தன் வழிசெலுத்துவது போல் சிறிய ஆறுகளை அழித்துப் பாய்கின்றது. "அப்" என்னும் வர்த்தைக்கு நதி என்று அறிந்துகொள்ளவும். நதிகள் ஜீவராசிகளின் வாழ்க்கைக்கு இன்றியைமயா தவைகளாகும்.

**पञ्च नद्यः सरस्वती मपि यन्ति सस्रोतसः । सरस्वती तु पञ्चधा सो देशेऽभवत् सरित् ।** யஜு 34, 11.

சம பலமுள்ள ஐந்து நதிகள் ஒன்று சேர்ந்து பெரு நதியாக மாறுவதே சரஸ்வதி. இவ்வைந்து என்பது அநேக

நதிகளைக் குறிக்கின்றது. ஒரு நதியில் அநேகம் சிற்ருறுகள் பாய்ந்து பெரு நதி என்ற பெயரையும் அடைகின்றது. ஐந்து இந்திரியங்களும் நதி போல் ஆகின்றன.

## 12. சரஸ்வதி என்னும் மொழி.

சரஸ்வதி, சரயு, கங்கை, யமுனை, சுதுதிரி, பருஷ்ணி அசிக்ரி விதஸ்தை முதலிய பெயர்கள் வேதத்தில் அடிக்கடி வருகின்றன. அதற்கு அங்கு நதி என உரையில்லை. குணத்தைக் குறிக்கும் மொழிகளேயாகும் அவைகள். சிருஷ்டியின் முதலில் பதார்த்த குணங்களை அறிந்து அங்ஙனமே அழைத்தார்கள். அப்பதார்த்த குணங்கள் வேத விளக்கத்திலும் வெளியாகின்றன. சிவன், இராமன், கிருஷ்ணன், கங்கை முதலிய பெயர்களில் நமக்கு அதிகப் பழக்கம் எதில் இருக்கின்றதோ, அதையே குழந்தைகளின் பெயராக வைக்கின்ருேம். ஆதி காலத்தில் வைதிக தர்மமே எங்கும் பரவியிருந்தபடியால் அப்பெயர்களே அதிகமாக உபயோகிக்கப்பட்டன. வேதத்தில் நதிகளின்குணத்தைக் குறிப்பதற்குச் சரஸ்வதி, சிந்து, சரயு முதலிய பெயர்கள் உண்டு. தம் தம் தேசத்தின் நதியையும் அப்படியே பெயரிட்டார்கள். வேதத்தின் உண்மை அறிவு மறைந்தவுடன் அதன் சரியான தத்துவ ஞானமும் குன்றிற்று. வேதத்தில் அநித்தியமான பொருள்களின் பெயர் ஒன்ருவது கிடையாது.

## 13. வேதத்தில் நதிவருணனை.

ஜலத்தின் அவசியத்தை எடுத்துக் கூறவேண்டுவதில்லை. ஜலம் இல்லையேல் உலகம் ஏது? ஜலத்திற்குக் காரணமான

தேவனைத் துதியாது நதிகளைத் துதிப்பது அஞ்ஞான மல்லவா ?

अहभूमि मददामार्य्यापाहं वृष्टिं दाशुषे मर्त्याय ।
अहमपो अनयं वावशाना मम देवास अनुकेतमायन् ।

ருக். 4, 26, 2.

மனிதர்களே! நான் நீங்கள் வாழ்வதற்குப் பூமியைத் தருகிறேன். மழையையும் தருகிறேன். சப்தத்துடன் கூடிய ஜலத் துளிகளை அளிக்கிறேன். அக்னி, வாயு, சூரியன் முதலிய தேவர்கள் என் சங்கற்பத்திற்கு உட்பட்டவர்களே!

अहं गर्भमदधामोषधीष्वहं विश्वेषु भुवनेष्वन्तः ।
अहं प्रजाअजनयं पृथिव्या महं जनिभ्यो अपरीषु पुत्रान् ।

ருக். 10, 183, 3.

நான் புற்பூண்டு ஓஷதிகளில் கர்ப்பத்தை நிலைக்கச் செய்கிறேன். எல்லா உலகங்களுக்கும் நடுவில் எங்கும் பரவி யிருக்கிறேன். பூமியின் மேல் ஜனங்களை உற்பத்தி செய்கிறேன். என்னுடைய நிர்மாண சக்தியினால் சந்தானோற்பத்தியையுஞ் செய்கிறேன்என்று இருக் வேதம்கூறுகின்றது. ஈசுவரனை விட்டு நாம் இப்போது நதிமுதலிய சட பதார்த்தங்களையே பூஜைசெய்கிறோம். என்ன அறியாமை?

## 14. கல்விக் களஞ்சியம்.

கல்விக்கிருப்பிடமாய் சரஸ்வதி எங்ஙனமானாள் ? கல்விக்கும், மொழிக்கும் சரஸ்வதி எனப் பெயருண்டு என்று வேதவிளக்கத்திலிருந்து அறிந்துகொண்டோம். கல்வி

மானுக்கு உயர்ந்த நிலை ஆதியிலும் இருந்தது. இப்பொழுதும் உளது. சிற்றரசர்கள் யாகம் செய்யுங்கால் கற்றவர்களான பெரியோர்கள் சிம்மாசனத்தில் அமர்ந்து கொண்டு உபதேசஞ் செய்வார்கள். ராஜ ராஜர்கள் படித்தவனைப் பணிந்தார்கள். படித்தவனிடம் கல்வி தேவதையாகிய சரஸ்வதி இருப்பதாகக் கண்டு அத்தேவதையைப் பூஜை செய்யத் தொடங்கினார்கள்.

## 15. சரஸ்வதியும் அமரகோசமும்.

அமரகோசத்தில் விஷ்ணு, சிவன் என்னும் பதங்களை உபயோகிக்குமிடங்களில் லக்ஷ்மி பார்வதி என்னும் பதங்களும் முறையே ஆளப்பட்டிருக்கின்றன. ஆனால் பிரும்மாவினோடு எங்கும் சரஸ்வதியாவது, காயத்திரியாவது, சாவித்திரியாவது சேர்க்கப்படவில்லை. பிரும்மாவின் மனைவியைப் பற்றியோ சக்தியைப் பற்றியோ ஒரு வார்த்தையுமில்லை. அமரசிங்கன் காலம் வரைப் பிரும்மாவிற்குச் சரஸ்வதியைக் கற்பனை செய்யப்படவில்லை என்று இதிலிருந்து புலனாகும். புராணங்களில் சிற்சில இடங்களில் சரஸ்வதியை விஷ்ணு மனைவியாகவும் சொல்லப்பட்டிருக்கிறது.

सरस्वती दृषद्वत्योर्देवनद्योर्यदन्तरम् ।
तं देवनिर्मितं देशं ब्रह्मावर्तं प्रचक्षते ॥ மனு

பிராம்மண முதலிய கிரந்தங்களில் சரஸ்வதியின் இருகரைகளின் வருணனைக் காணப்படுகின்றது. இதன் ஓரங்களிலேயே இருஷிகள் வசித்து வந்தார்கள். இப்பொழுது சரஸ்வதி நதியின் கதி அலங்கோலமாய் விட்டது.

## 16. சரஸ்வதி சூக்தம்.

இருக் வேதத்தி லுள்ள சரஸ்வதியைக் குறித்த அதிகாரத்தில் இதைப் பற்றின ருக்குகள் பல இருக்கின்றன. அதர்வவேதத்திலும் இதைக் குறித்து அநேக அதிகாரங்கள் இருக்கின்றன.

## 17. பிரும்மாவும் அவர் வாகனமும்.

லௌகிக, வைதிக பாஷைகளில் சூரியனுக்கு ஹம்சம் (அன்னபட்சி) எனப் பெயர் ஒன்று உண்டு. பானுஹம்சன், சகசிராம்சன், தபனன், சவிதை, ரவி முதலியவைகள் சூரியனின் பெயர்களாகும். முன்விளக்கியது போல் சூரிய உஷ்ணத்தினுல்காற்று பரவிக் கிளம்புகின்றது. இதனுல் சூரியன் வாகனமாகிறுன். காற்று ஒரு இடத்தில் சேர்ந்திருப்பதாக வைத்துக் கொள்ளுங்கள். சூரிய கிரணங்களினுல் அது அசைய ஆரம்பிக்கின்றது. அப்பொழுது அதன் இடத்தை விட்டு அங்கும் இங்கும் பரவுகின்றது. இது சூரியனுல் செய்யப்பட்ட காற்றின் வாகனமாகின்றது. இதனுல் காற்றின் வாகனம் சூரியன் என விளங்கும். காற்றை விளக்கச் சரீரத்துடன் கூடின தேவனைக் கற்பிக்கும்பொழுது அவனுக்கேற்ற வாகனத்தையும் சிருஷ்டிப்பது சகஜமேயன்றே? ‘ஹம்சன்’ என்பது சூரியனுக்கும் பட்சிக்கும் உண்டான பொதுமொழி. காற்றுக்குக் கற்பனையான பிரும்மாவில் அவருடைய வாகனத்தையும் ஹம்ச பட்சி எனக்கற்பிக்கப்பட்டது. ஹம்சபட்சிக்குப் பாலிலிருந்து ஜலத்தைப் பிரிக்கும் சக்தி உண்டு. அப்படியே சூரியனுக்கும் பூமி முதலியவைகளில் கலந்திருக்கும் ஜலத்தைப் பிரித்து இழுக்கும் சக்தி உண்டு.

## 18. பிரும்மாவின் இடமும் புஷ்கரமும்.

விஷ்ணுவின் இருப்பிடம் திருப்பாற்கடல்; உருத்திரனின் வாழ்க்கை ஸ்தலம் கைலாச பர்வதம்; பிரும்மாவின் இடமோ குறிப்பிடப்படவில்லை. ஏன்? காரணம் வாயு தான். வாயுவிற்குக் குறிப்பிட்ட ஓர் இடமில்லை. எப்பொழுதும் ஆகாயத்திலேயே பரவி யிருக்கின்றது. அதற்கு ஓய்வு ஒரு கணமுமில்லை. கமலத்தில் அமர்ந்து சிருஷ்டி செய்கிறார் என்பதும் புராணம். கமலத்தின் மற்றொரு பெயர் புஷ்கரம். பிஸ், பிரசூனம், இராஜீபம், புஸ்கரம், அம்புரோஹன் முதலானவைகள் புஷ்கரத்தின் பெயர்கள். ஆகாசத்தையும் புஷ் என்பார்கள்.

**उतासि मैत्रावरुणो वसिष्ठोर्वश्या ब्रह्मन् मनसोऽधिजातः।**
**द्रप्संस्कन्नं ब्रह्मणा दैव्येन विश्वेदेवाः पुष्करेत्वाददन्तः।**

ருக். 8, 35, 11.

இதை விளக்கும் பொழுது பாஸ்கராசாரியார் புஷ்கரத்தை ஆகாசமென்று கூறியிருக்கிறார். சிருஷ்டிக்கேற்ற இடமும் பிரும்மாவின் இருப்பிடமும் ஆகாயமென்பதை சற்று யோசியுங்கள். காற்று எப்பொழுதும் ஆகாயத்தில் உலாவுகின்து. காற்றின் கற்பனையிலுள்ள புஷ்கரம் கமலத்தில் இருக்கிறது. இக் காரணத்தினாலேயே பிரும்மாவின் இருப்பிடம் பத்மமெனப்படுகிறது.

## 19. பிரும்மாவும் அகண்ட இரவும்.

பிரும்ம தினமே பெரிய தினமென வழங்குகின்றது. ஒரு கற்பம் ஒரு தினமாம். பிரும்மா விழிப்புக்காலம் சிருஷ்டியும், அவர் தூங்குங்காலம் பிரளயமுமாகும். அவர் விழித்

திருக்கும் வரை சிருஷ்டி செய்து கொண்டே யிருக்கிறார். தூங்குங்கால் சிருஷ்டி நின்றுவிடுகின்றது. இக்குணத்திற்குங் காரணம் வாயுதான். சிருட்டி காலம் வரை காற்றும் அயர்வதில்லை. காற்று நித்திரையை அடையுங்கால் ஜீவனும் பிரளயத்தை அடைகின்றது. சூரியன் மறைகிறான். நெருப்பு அணைகிறது. காற்றோ நிற்பதில்லை. அது எக்காலமும் விழித்துக் கொண்டிருப்பதால் தூக்கமடையுங்கால் வெகு காலம் தூங்குகின்றது. இதனால் தான் காற்றுக்கு ஆதாரமான பிரும்ம தினத்தைப் பெருந்தினம் என்கிறோம். எல்லா தேவதைகளுக்கும் அந்திப்பொழுது உண்டு. ஆனால் காற்றிற்கோ இல்லை. இதனால்தான் இதற்கு அஸ்தமனமாகாத தேவதை என்று பெயர்.

## 20. பிரும்மா என்னும் ரிஷி.

**तद्धैतद ब्रह्मा प्रजापतय उवाच । प्रजापतिर्मनवे । मनुः प्रजाभ्यः ।**

சா. 3, 4.

**तुरः कावषेय । प्रजापतिः ब्रह्मणः ।** பிரு 3, 6, 4.

பிரும்மா வானவர் இந்த ஞானத்தைப் பிரஜாபதிபதிக்கு உரைத்தார். அவர் மனுவிற்கு உரைத்தார். மனு பிரஜைகளுக்கு அளித்தார். இதனால் பிரும்மா என்னும் ரிஷி இருந்ததாகக்கொண்டு அறிஞர்கள் இவ்விதம் கற்பித்தார்கள்.

**ब्रह्मा देवानां प्रथमः सम्बभूव विश्वस्य कर्त्ता भुवनस्य गोप्ता । स ब्रह्म विद्यां सर्व विद्या प्रतिष्ठा मथर्वायज्येष्ठपुत्राय प्राह ।**

முண்டகோ

## 21. பிரும்மாவும் அவர் பூஜையும்.

பிரும்மாவிற்குப் பூஜை கூடாதெனப் புராணம் சொல்லுகிறதாம். இதற்குக் காரணம் தன் பெண்மேல் ஆசை வைத்ததினால் பூஜைக்கு அவர் அருகரல்ல என்பது ஒன்று. மகா தேவரிடம் பொய் சொன்ன படியால் என்பது மற்றொன்று? உருவற்ற பிரும்மா எப்படிப் பெண்ணைக் காதலிக்கக்கூடும். தேவதைகளைக் கற்பனை செய்தகாலம் ஜெயின மதம் நாடெங்கும் பரவியிருந்த காலமேயாகும். அவர்கள் தங்களுடைய தீர்த்தங்கரர்களுக்கு (ஆசாரியர்களுக்கு) பிராணனை ஊதிப் பூஜை செய்து வந்தார்கள்; ஆனால் பிரும்மாவிற்குப் பிராணனை ஊதுவது இயலாததாகிவிட்டது. ஏனெனில் அவர் தானாகவே பிராண ரூபமுடையவர். காற்றானது பிரத்தியக்ஷமாய் அறியக் கூடிய பதார்த்தம். அகமும் புறமும் நிறைந்துள்ளது. உபநிஷதத்தில் இதைப் பற்றிய விளக்கம் விரிவாய் இருக்கிறது. இதன்னியில் ஜீவன் ஒரு வினாடியும் இருப்பது இயலாது எப்பொழுதும் தன் காரியத்திலேயே ஐக்கியப் பட்டுள்ளது. ஆகையால் காற்றை இருத்துவதும் இழுப்பதும் பிரத்தியக்ஷத்தில் பரிசிக்க இடங்கொடுக்கு மாகையால் இதன் பூஜையையே மறுத்து விட்டார்கள்.

## 22. சிறப்புரை.

சூரியனே காற்றின் தந்தை என்று நிரூபித்துளோம். ஏனெனில் சூரியனுடைய கிரணங்களினாலேயே நான் முகக் காற்று உண்டாகின்றது. சூரியசக்தியினாலேயே காற்று அசைகின்றது. பலத்தையும் யடைகிறது. இந்த ஆரோபணத்தினாலேயே இதை சவிதையின் (சூரியன்) பெண்ணென்று

கூறலாம். சூரியனுடைய உஷ்ணத்தினலேயே காற்று அசைகிறபடியால் காற்றின் வாகனமென்று சூரியனையும் கூறலாம். சூரியன், காற்று, பூமி முதலியவைகளெல்லாம் (உருவற்ற) பதார்த்தங்கள். இவைகளில் தாய், தகப்பன், மனைவி, பெண் யாது? சூரியனின் பெயரேவிஷ்ணு. இக்காரணத்தினல் காற்றின் ரூபமாகிய பிரும்மாவிற்கு அதை உண்டு பண்ணிய தகப்பனுகிய சூரியன் விஷ்ணு வாகின்றான். அன்ன பட்சிக்கும் சூரிய னென்கிற பெயரொன்றுண்டு. இதைப் பிரும்மாவின் வாகனமென்று அழைக்கிறார்கள். சூரியசக்திக்குச் சாவித்திரி யென்று பெயர். அதையே பிரும்மாவின் மனைவி யென்றழைக்கிறார்கள்.

பிரும்ம விளக்கம் முற்றிற்று.

# இரண்டாவது அத்தியாயம்

## விஷ்ணு விளக்கம்

### 1. விஷ்ணு என்னும் பெயர்.

**तत्र विष्णुश्च शक्रश्च जज्ञाते पुनरेवच ।**
**अर्य्यमा चैव धाता च त्वष्टा पूषा तथैवच ॥**
**विवस्वान् सविता चैव मित्रो वरुण एवच ।**
**अंशा भगवश्चादितिजा आदित्या द्वादश स्मृताः ॥**

முற் காலத்தில் சூரியனுக்கே விஷ்ணு என்று பெயரி யிருந்தது. விஷ்ணு, சுக்கிரன் அரியமான் பாதமாத்மா, துவஷ்டா பூஷை விவசுவான், சவிதை, மித்திரன் வருணன் அம்சன் பகன் ஆகப்பன்னிரண்டும் சூரியனின் பெயர்கள்.

அனேக இடங்களில் ஆகாயத்திற்கு விஷ்ணு எனப் பெயரிருக்கின்றன. ஆகாயத்தில்சூரியனுடைய பாதம் இருக்கின் றது. பாதம் எனில் இருப்பிடம். அது தான் விஷ்ணு பாதம் எனப்படுகின்றது. இதற்கு உரை எழுதும் போது பாஸ்கரா சாரியார் விஷ்ணுவுக்குச் சூரியன் என விளக்கியிருக்கிறார். பிறகு இதை விளக்குவோம். சூரியனே வான லோகத்தை யும் பூலோகத்தையும் ஒன்றாக இணைத்து வைத்திருக்கிறான். அவனுடைய அளவற்ற கிரணங்களினால் பூமியை நான்கு பக் கமும் தாங்குகிறான். மயூகம் என்பது கிரணங்கள் என விளங்குகிறது. இங்கும் விஷ்ணு என்னும் மொழிக்குச் சூரி யன் என்று உரைக்கப்பட்டிருக்கின்றது. சூரியனின் பெய

ரைக்கொண்டே விஷ்ணுவைக் கற்பனை செய்தார்கள். இதன் உண்மைகளை வேதத்தில் அறியலாம்.

## 2. விஷ்ணுவின் வாகனம்

### சுபர்ணன்

சூரியனின் குணங்களையே விஷ்ணுவில் கற்பனை செய்தார்கள் என்பதைக் கருத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். எந்தெந்த மொழிக்கு இரண்டு பொருள்கள் உளவோ, அந்தந்த மொழிக்கு ஏற்றவாறு வாகனம், இருப்பிடம், வலிமை முதலிய வற்றை ஏற்படுத்தினார்கள். சிறந்த அறிவாலும், யுக்தியாலும் இக்கற்பனைகள் செய்யப்பட்டன. சுபர்ணன் என்பது சூரியக் கிரணத்திற்குப் பெயர். கருடனுக்கும் சுபர்ணன் எனப் பெயர் உண்டு.

खेदयः। किरणाः। गावः। रश्मयः। अभीशवः। दीधिदयः। गभंस्तयः। बनम्। उस्राः। वसव। मरीचियाः। सप्तऋषयः। साध्याः। सुपर्णाः।

நிகண்டு அத் 1, கண்டம் 5,

கேதி, கிரணம், செள, ரசமி, அமிசு, திதீதி, சுபஸ்தி, வனன், உசிரன், வசுமரீசயன், மகயூன் சப்தரிஷி, சாத்யன், சுபர்ணன் இப்பதினைந்தும் சூரிய கிரணங்களின் பெயர். சூரியனுடைய கிரணங்களுக்காகச் சுபர்ண மொழி வேத மந்திரத்தில்பல இடங்களில் தோன்றுகின்றன.

वयः सुपर्णा उप सेदुरिन्द्रं प्रियमेधा ऋषयो नाधमानाः।
अप ध्वान्तमूर्णुहि पूर्धि चक्षुर्मुमुग्ध्यास्मान् निधयेव बद्धान्॥

நிருக்தம் 4, 5.

சூரிய கிரணங்களை அலங்காரமாய் விளக்கி யிருக்கிறது. அசைகிற கிரணங்கள் சூரியனுடன் சேர்ந்துளது. அச்சூரிய கிரணமாவது :—''யாகப்பிரியன் - சூரிய உதய மன்னியில் யாகம் இல்லை. மறுபடியும் எப்படி யிருக்கிறது. வசிஷ்டர் முதலிய ரிஷிகள் இருளை நீக்கி ஞானத்தை விளக்குவது போல், இதுவும் இருட்டை ஒழித்துப் பொருள்களை விளங் கச் செய்கிறது. தலைவனே! இருளை நீக்கவும். ஜீவ ஜந்துக் களின் கண்களை மலரச் செய்யவும். சுபர்ணன் ஆதித்ய ரச்ய மன் என்று சூரிய கிரணங்களைக் குறிக்கவேண்டியே கூறப் பட்டிருக்கிறது. அதாவது சூரியனின் கிரணத்திற்குச் சுபர்ணன் எனப்பெயர். ஆனால் இக்காலத்தில் சுபர்ணன் கருடனையே குறிக்கின்றது.

**गरुत्मान् गरुडस्तार्क्ष्यो वैनतेयः खगेश्वरः ।**

**नागान्तको विष्णुरथः सुपर्णः पन्नगाशनः ।** அமரம்

கருத்மான், கருடன், தாட்சியன், வைணதேயன் கசேகவரன், நாகாந்தகன், விஷ்ணுரதன், சுபர்ணன், பன்னகாசம் இவைகளெல்லாம் கருடப்பட்சியின் பெயர் கள். சூரியனின் வாகனம் கிரணம். கிரணங்களின் வழியாகவே சூரியன் எல்லா இடங்களையும் அடைகின் றான். சூரியனுடைய ஸ்தானத்தில் விஷ்ணு தேவதை கற்பனை செய்யப்பட்ட பொழுது, அதன் வழியாயுள்ள கிரணத்தையும் வாகனமாகச் செய்து விட்டார்கள். இவ் வுலகத்தில் கருடனின் பெயர் பறவையினுடையதாகும். ஆகையால் பட்சியை விஷ்ணுவுக்கு வாகனமாக கற்பித்து விட்டார்கள்.

### 3. கருடன்.

விஷ்ணுவுக்குக் கருடனாகிய பட்சியை வாகனமாக ஏன் கற்பிக்க வேண்டு மென்பதற்கு வேறு காரணமுமுண்டு. கருடன் பாம்பைத் தின்கின்றது. பாம்பிற்கு "அகி" என்றும் பெயருண்டு.

**अद्रिः । ग्रावा । गोत्रः बलः । अश्नः पुरभोजाः । .......अहिः । अभ्रम् । बलाहकः........** நிகண்டு 1, 10.

வைதீக பாஷையில் அகி யென்றால் மேகம். அத்பி கோபன், அகிமேகம், விருத்திரன், அசுரன் முதலிய பெயர்கள் மேகத்தையே குறிக்கின்றது. சுபர்ணனாகிற கருடன் மேகமாகிற அகியைத் தின்கிறான். இரு பொருள் கொண்ட பல மொழிகளை வைத்துக்கொண்டு பற்பல தேவதைகளைச் சிருஷ்டித்து விட்டார்கள்.

### 6. சுபர்ணன் அமுதம் எடுத்தல்

மகா பாரத ஆதி பர்வத்தில் சுபர்ணன் அமுதத்திற்காக அண்டமெலாம் அலைந்ததைப் பார்க்கிறோம். அது அடியில் வருமாறு:—

கருடனின் அன்னை வினதை ஏதோ காரணத்தினால் பாம்பின் தாயான கத்ருவின் அடிமையானாள். கருடன் இதைத் தெரிந்து அமுதத்தைத் தான் கொண்டுவரும் வரை அன்னைக்கு விடுதலை யில்லை யென்பதை அறிந்தான். இதற்காக அவன் பட்ட கஷ்டத்தைக் கணக்கிடுவது முடியாது. மகாபாரதத்தில் இருபதாவது அத்தியாயம் முதல் முப்பதாவது அத்தியாயம் வரை இதன் விளக்கந்தானிருக்கிறது. இதற்குச் சுபர்ண அத்தியாய மென்று பெயர். இக்கதையின் காரணமும் சூரிய கிரணங்களேயாகும். ஜலத்திற்கும் அமுத

மெனப் பெயருண்டு. பயம், கீலாலன், அமுதம், ஜீவனம், புவனம், வனம் முதலியவை ஜலத்திற்குப் பெயரென அமரத்தில் கூறியிருக்கிறது.

சுபர்ணனாகிய சூரியகிரணம் அமுதமாகிய ஜலத்தை இழுக்கிறான். பின்னர் அதை மேகத்திற்கு அளிக்கிறான். பாம்பிற்கும், மேகத்திற்கும் அகி என்று பெயர். கிரணம் மேகத்தைப் புசிப்பவன் ஆச்சுதே, அப்படியிருக்க இங்கே மேகத்தைப் போஷிப்பவன் என்று கூறுவது எங்ஙனம் முடியும் என்று வினவலாம். கருடன் பாம்புகளை நாசம் செய்பவன். ஆனால் அவைகளுக்கு அடிமையாயு முள்ளவன்.

கத்ரு நாகலோகத்தை அடைவதற்கு வினதையைக் கெஞ்சவே, கருடன் பாம்புகளைத்துரத்தி அவளை நாக லோகத்தில் சேர்த்தான். சூரிய கிரணம் மேகத்தைச் சிருஷ்டித்து அதை நாசமும் செய்கிறது. சூரிய உஷ்ணத்தினால் மேக உற்பத்தியாகிறது. மேகம் குளிரடைந்து மழையாக மாறுகின்றது. இவையெல்லாவற்றிற்கும் காரணம் சூரிய கிரணங்களேயாகும். அளிப்பதும், அழிப்பதுமான இவை இரண்டும்சுபர்ண, அகியில் ஐக்கியமாயிருக்கின்றன. பாம்பின் வாகனமும் அதை அழிப்பவனும் என்பதைக் குறித்த மகா பாரதக் கதையின் சூட்சமும் இதுதான். இவையாவும் பிரகிருதியின் ஒவ்வொரு பாகத்தின் விளக்கமே என்று அறிந்து கொள்ளலாம். கருடன், வினதை, கத்ரு, பாம்பு என உரு எதுவும் இருந்திருக்கவில்லை. வேதத்தின் ஒரு வார்த்தையை எடுத்துக் கொண்டு ஆயிரக்கணக்கான சுலோகங்கள் செய்யப் பட்டதின்பயனாக நவீனக் கற்பனைகள் தோன்றலாயின. சுபர்ணன் அமுதத்திற்கு அலைகிறான் என்பதைக் குறிக்க வேதத்தின் ஓர் மந்திர விளக்கத்தைக் கவனிப்போம்.

यत्रा सुपर्णा अमृतस्य भाग मनिमषं विथताभिस्वरन्ति ।
इनो विश्वस्य भुवनस्य गोपाः स मा धीरः पाकमात्रा विवेश ॥

இது ருக்வேத வசனம். பாஸ்கராசாரியார் இதை நிருத்தத்தில் விளக்கியிருக்கிறார். சூரிய மண்டலத்திலிருக்கும் கிரணம் தன் ஓயாத அசைவினால், ஜலத்துளிகளைப் பூமியிலிருந்து இழுத்துப் பதார்த்தங்களை உலர்த்திவிடுகிறது. இது சூரியனுடைய விளக்கம் என்பதை அறியவேண்டும். இவ்விடத்திலேயே பாஸ்காராசாரியார் சுபர்ணனுக்குச் சூரிய கிரணம் எனவும் அமுதத்திற்கு ஜலமெனவும் விளக்கியிருக்கிறார். இக் காரணத்தினாலேயே கிரணத்திற்கு அழிப்பவன் என்று பெயர்.

## 7. விஷ்ணுவும் சமுத்திரமும்

விஷ்ணு பகவான் திருப்பாற் கடலில் சயனித்திருக்கிறாரென்பது புராணப் பிரசித்தம். சற்று யோசித்தால் இதுவும் சூரியன் எனவே விளங்கும். வைதிக பாஷையில் சமுத்திரத்திற்கு ஆகாசமென்று பெயர். எப்படியெனில்:— அம்பரன், வியத்தன், வியோசன், பர்ஹி, தன்வன், அந்தரிட்சம், ஆகாசம், ஆபன், பூமி, பூ, சுவயம்பூ, அத்வா, புஷ்கரன், சமுத்திரன் ஆக ஆகாயத்தின் பெயர்கள் பதினாறும். பாஸ்கரர் சமுத்திர சப்தத்தை அடியிற் கண்டவாறு விளக்குகிறார்.

तत्र समुद्र इत्येतत् पार्थिवेन समुद्रेण सन्दिह्यते । समुद्रः कस्मात् समुद्रवन्त्यस्मादापः । समभिद्रवन्त्येनमापः । सम्मोदन्तेऽस्मिन् भूतानि । समुदको भवति । समुनत्तीति वा ॥ நிருக்தம் 2, 10.

பூமியின் கண்ணுள்ள ஜலத் திரளுக்குச் சமுத்திரமெனப் பெயர். உதாரணம்:—இந்து மகா சமுத்திரம், சாந்த (பசிபிக்) மகா சமுத்திரம். எந்த ஜலம் துளியாக மாறி பூமியில் வீழ்கின்றதோ அந்த ஜலம் ஆகாசத்திலிருந்தே வீழ்கின்றது. எதில் ஜலமெல்லாம் சேருகின்றதோ, அது ஆகாசமாக அதாவது மேகரூபமாக மாறுகின்றது.

**सहस्रशृंगो वृषभो यः समुद्रादुदाचरत् ।** அதர்வவேதம்

ஆயிரங் கொம்புகளுடைய சூரியன் சமுத்திரத்தில் (ஆகாசத்தில்) உதயமானான். சூரியன் ஆகாயத்திலேயே உதய மாகின்றபடியால், ஆகாயத்திற்குச் சமுத்திர மெனப் பெயர்.

**सो अर्णवान नद्यः समुद्रियः प्रतिगृभ्णाति विश्रिता वरीमभिः।**
**इन्द्रः सोमस्य पीतये वृषायते सनात् स युध्म ओजसा पनायते ॥**

ருக் 1, 55, 2.

சாயனர் சமுத்திரத்தை ஆகாசவியாபி என்று விளக்கியிருக்கிறார். இதிலிருந்து அறிந்துகொள்ள இயலுமாதலால், நாம் அதிகமாக உரைக்க வேண்டியதில்லை; வேதத்தைப் பார்த்தால், பல இடங்களில் சமுத்திரம் ஆகாசத்தையே குறிப்பதற்கு ஏற்பட்டதென்பது விளங்கும். சூரியனுடைய இடத்தில், விஷ்ணு கற்பனை செய்யப்பட்டபொழுது, ஆகாயத்திற்காகப் பூமியின் கண் ஒன்று வேண்டுமல்லவா? அதினாலே தான் பூமியிலிருக்கும் சமுத்திரத்தை அவருடைய இடமாக வைத்து விட்டார்கள்.

## 8. "அப்" என்னும் மொழியும், விஷ்ணுவும்.

"அப்" என்றால் ஆகாசம். இதற்கு மாறுபாடான உரை தந்தவுடன், பற்பல கற்பனைகளும் தோன்றலாயின. இது எப்பொழுதும் பன்மையிலேயே வரும். முதல்வேற்றுமையில் "ஆப:" என்று சொல்லப் படும். "ஆப:" எனும் பதத்திலிருந்து ஜலம் என்று சொல்லி விட்டார்கள்.

**आपो नारा इति प्रोक्ता आपो वै नरसूनवः ।**
**ता यदस्यायनं पूर्वं तेन नारायणःस्मृतः ॥**

ஈசுவரனுடைய இருப்பிடம் ஜலத்தில் மாத்திரம் அல்ல இவ்வுலகம் முழுவதுமே யாகும், இம்மொழியின் வரலாற்றை அறியாமலேயே இவ்வித உரை ஏற்பட்டுவிட்டது. இதன் உண்மையான விளக்கமாவது:—

(ஆப:) ஆகாசம் (நா—இதி) யாவற்றிற்கும் நாயகனானபடியால் நான் என்று பெயர். ஆகாசம் அவர் மக்களைப் போலாதலால் நார என்பதாயிற்று. (நஸ்யா பத்யம் நார ஆகாச: நயதி பிராபய தீதி நர:) அவருக்கு அது இருப்பிடம் போலாகையால் நாராயணன் என்று பெயர். 'ஆப' எனும் மொழியை ஜலமென்று கருதிய போதிலும் தோஷமில்லை. அங்கும் அவர் நிறைந்திருக்கிறார். ஜலத்தில் பரவி யுளார் என்று சொல்வதனால் வேறு எங்கும் இல்லைபோலாகின்றது. புராணத்தில் உலகத்தைச் சிருஷ்டித்து ஜலத்தில் அமர்ந்தார் என்று சொல்லியிருக்கின்றது. அதாவது (பாகவதம் 1, 3, 2) அப்பொழுது யோக நித்திரையி லிருந்தாராம். அப்பொழுது அவர் எங்குமுள்ள வியாபகத்தை விட்டு விட்

டாரா? இதற்கு வேறு காரணமில்லை. அம்மொழியை வேறு விதமாக விளக்கினதே விபரீதமெனப்புலப்படுகின்றது.

अपएव ससर्जादौ तासु बीज मवासृजत्। மனு

இங்கும் ஜலம் என்று தான் விளக்கப்பட்டிருக்கிறது. இது பிழையாகும். ஏனெனில் பரமான்மா முதன் முதலில் ஆகாசத்தைச் சிருஷ்டித்தார். ஜலம் பிறகு தான் சிருஷ்டிக் கப்பட்டது. ஆகாசத்திலிருந்து காற்றும், காற்றிலிருந்து நெருப்பும், நெருப்பிலிருந்து ஜலமும் உண்டாயிற்று. சில இடங்களில் "ஆப்" எனும் மொழிக்கு ஆகாய மெனவும் கொள்ளலாம்.

परो दिवा पर एना पृथिव्या परो देवेभिरसुरैर्यदस्ति।
कं स्विद गर्भं प्रथमं दध्र आपो यत्र देवा समपश्यन्त विश्वे॥

ருக் 10, 82, 5.

இவ்வீசுவர தத்துவமானது (திவா—பர:) சூரிய நட்சத்திர முதலான மண்டலங்களில் பரவியுளது. பூமியிலும் ஆகாசத்திலும் பரவியுளது. எல்லாப் பொருள்களிலும் வியாபித்துளது. இப்பரிபூர்ண பிரம்மாண்டம் எதில் நிலைத்திருக்கிறது? (ஆப:) ஆகாசம் முதன் முதலில் எக்கர்ப்பத்தி லிருந்து உதித்தது? எந்தக் கர்ப்பத்தின் ஆதரவால் சூரியன், நட்சத்திரம், காற்று முதலியவைகள் கிளம்புகின்றன?

तमिदगर्भप्रथमं दध्र आपोयत्र देवा समगच्छन्त विश्वे।
अजस्य नाभा वध्येक मर्पितं यस्मिन् विश्वानि भुवनानि तस्थुः

ருக் 10, 82, 6.

பரமான்மாவே அவ்வாகாசத்தைக் கர்ப்பத்திலிருந்து உற்பத்திசெய்தார். அவரிடம் நம்மால் அறியக்கூடாத மகா சக்தி ஒன்று இருக்கிறது. இச் சக்தியினாலேயே இவ்வுலகம் நிலைத்திருக்கிறது. " ஆப் " எனும் மொழியை ஜலமெனச் சொல்லி என்ன விபரீதம் செய்தார்கள்? இதையே ஆதாரமாக வைத்துக்கொண்டு, ஜலமே சிருஷ்டியின் முதலெனக் கருதினார்கள். ஈஸ்வரனும் அதில் வீற்றிருப்பார் என வையகத்தில் விளக்கினார்கள். விஷ்ணு (சூரியன்) ஆகாசத்திலிருக்கிறான். கற்பனை செய்யப்பட்ட நான்கு கையுள்ள விஷ்ணுவுக்கு இருப்பிடம் ஜலமாம். இதிலிருந்து திருப்பாற் கடலும் தோன்றிற்று.

## 9. சாகரமும் விஷ்ணுவும்

சகர மொழியும் ஆகாசத்தை விளக்குகிறது. இக்காரணத்தினாலேயே மேகத்தைச் சமுத்திரமெனவும், சாகரமெனவும் சொல்லுவார்கள். ஆகாச சாகரத்திலிருந்தே பூமியின் சமுத்திரமும் உற்பத்தியாயிற்று. சகரனின் மகன் சாகரன். ஆகாசத்தையும் சமுத்திர மகன் என்று அறியவும். இதனால்தான் இதுவும் சாகரமெனப்படுகிறது. புராணத்தில் காணும் சகர அரசனின் கதை பொய்யாகும். சாகரமொழியின் கருத்தை அறியாமல் சகர அரசன் என்று எண்ணிவிட்டார்கள். ஆகாச சமுத்திரத்தைப் பூமியின் கடலென எண்ணி விட்டார்கள்.

**आर्ष्टिषेणो होत्र मृषि नषीदन् देवापि र्देवसुमतिं चिकित्वान् ।**
**सउत्तरस्मादधरं समुद्रमपो दिव्या असृजत वर्ष्या अभि ।** நிருக்தம்

ஆகாசக்கடலிலிருந்து பூமியின் கடலைச் சூரியனே உற்பத்திசெய்தார். பூமியும் சூரியனைப்போல் ஒரு காலத்தில்

நெருப் புருண்டையாயிருந்தது. ஆயிரக் கணக்கான வருடங்கள் சென்ற பின்னர் குளிர்ந்தது. இவ்வலிமையின் அற்புதத்திற்குக் காரணம் அக்னியேயாகும். உலகத்தின் காரணமும் அக்கினியேயாகும். உலகத்திற்குக் காரணம் சூரியன் எனப்படுகின்றது. இதனுல் யாவற்றிற்கும் காரணம் சூரியன் எனச் சொல்லலாம்.

## 10. விஷ்ணுவும் சேஷனும்

சேஷநாகமானது விஷ்ணுவின் படுக்கையாகும். சூரியன் தன் ஆகர்ஷண சக்தியால் கிரகங்களை அதிராமல் நிலை நிறுத்தி வருகிருன். ஆனுல் சூரியனின் ஆதாரம் யாது? அதனை விட வலிமையுள்ள ஒருபொருள் சூரியனை இழுத்திறுத்துகிறது எனலாம். இதன் மூலாதாரத்தைத் தேடினுல், கடைசியில் பரமான்மாவென்றெ விளங்கும். எவருடைய உந்தியில் இவ்வுலகம் நிலைத்துள்ளதோ, அவரே ஓம் எனும் கடவுள் எனலாம். எல்லாவற்றிற்கும் அவரே ஆதாரம். அப்பிரமத்திற்கே சேஷன் எனப் பெயர். ஏனென்றுல் கடைசியில் அவர் தான் சேஷன் (மீதி). சூரியமொழியைப் பிரமாண்டம் என்றறியவேண்டும். சூரியனுக்கு இந்த சேஷனுகிய பகவானே ஆதாரம். ஆனுல்சேஷத்திற்குப் பாம்பு எனவும் பொருளுண்டு. சூரியனுக்கு விஷ்ணு கற்பனையானவுடன் சேஷனைப் பாயாகவும், படுக்கையாகவும் மதிக்கலானுர்கள்.

## 11. அனந்தனும் விஷ்ணுவும்.

ஆகாசத்திற்கும், பாம்பிற்கும் அனந்தன் என்று பெயர். சூரியன் அமர்ந்திருப்பது ஆகாசமாகையினுல் விஷ்ணுவிற்கு ஆதாரமான ஆகாசத்தை அனந்தன் என்றுர்கள்.

## 12. ஹரியும் ஹரனும்

अद्धाभ्यां हरिभ्या मिन्द्र याह्या चतुर्भिराषड्भिर्हूयमानः ।
अष्टाभिर्दशभिः सोमपेय मयं सुतः सुमस्व मा मृधस्कः ॥
आविंशत्या त्रिंशता याह्यर्वाङ आचत्वारिंशता हरिभिः युजानः ।
आपञ्चाशता सुरथेभि रिन्द्रा षष्ठ्या सप्तत्या सोमपेयम् ॥
आशीत्या नवत्या याह्यर्वाङा शतेन हरिभिरुह्यमानः ।
अयं हि ते शुनहोत्रेषु सोम इन्द्र त्वाया परिषिक्तो मदाम ॥

ருக். 218·

வேதத்தில் ஹரிமொழிக்குச் சூரியகிரணமென்ற பொருளுண்டு. எல்லாப் பக்கங்களிலுமிருந்து பதார்த்தங்களை இழுக்கின்றபடியால், சூரிய கிரணத்திற்கு ஹரி யென்னும் மொழி பல இடங்களில் விளங்குகின்றன. தன் கிரணத்தினால் யாவற்றையும் அசையச் செய்யும் (இழுக்கும்) சக்தியை உடைய சூரியன் வானலோகத்தை நோக்குகிறான். இது மாலையின் விளக்கமும். அலங்காரமுமாகும். இச் சூரியனே இரண்டு, நான்கு, ஆறு, எட்டு, இருபது முதலிய கணக்கில்லாத கிரணங்களால் எல்லாப் பதார்த்தங்களையும் காப்பாற்றுகிறான். ஹரி என்று பாம்பையும் சொல்லலாம்.

விஷ்ணு பகவான் அமர்ந்திருக்கும் பாம்பிற்கு ஆயிரம் படங்கள் என்று சொல்வதுண்டு. சேஷ நாகம் வெண்மை நிறமானது என்பார்கள். வெள்ளை நிறமும் ஆயிரம் தலையும் (படம்) உள்ள பாம்பை எப்பொழுதேனும் பார்த்ததுண்டோ? கேட்டதுண்டோ? பாம்பிற்கு எப்பொழுதும் ஆயிரம் தலையுமில்லை. வெண்மை நிறமும் இல்லை. இது சூரிய சக்கரத்

தின் வருணனை. சூரியன் ஒரு தேவதையாம். அவர் உட்கார்ந்தும், சயனித்துமிருக்கும் சக்கரத்தை நாம் பார்க்கிறோம். அது ஆயிரங் கிரணங்களுடையது. வெண்மையாகவும்உள்ளது. ஆயிரமென்றால் கணக்கிடப்படாதது. ஆயிரம் கிரணங்களுள்ள வெண்மையான சக்கரத்தில் சூரியன் அமர்ந்திருப்பது விளங்குகிறது. அந்த சக்கரந்தான் இவ்வுலகத்திலுள்ள பதார்த்தங்களை வேகமாயிழுக்கின்றது. இதனாலேயே இதற்கு ஹரி என்றும் பெயர். ஹரி என்று பாம்பிற்குமுண்டு. சூரியன் விஷ்ணு தேவதையாகவே கிரணங்கள் ஆயிரந் தலை வெண்மையுள்ள நாகமாகக் கற்பிக்கப் பட்டது. சில பாம்புகள் தம் கண் வலிமையினால் சிறு பறவைகளைத் தம் முகத்தில் வந்து விழச் செய்யக்கூடிய சக்தியை உடையவை. இது பாம்பின் விசேஷ குணமாகும். இக்காரணத்தினாலேயே சூரிய கிரணங்களைப் பாம்பென்று அழைத்தார்கள் போலும். சேஷ நாகனுக்கு ஆயிரம் தலையும் வெண்மை நிறமும் உண்டென்று கருதுவது சரியல்ல.

## 13. நான்கு கையுள்ள விஷ்ணு.

केचित्स्वदेहान्तर्हृदयावकाशे प्रादेशमात्रं पुरुषं वसन्तम् ।
चतुर्भुजं कञ्जरथाङ्गचक्र गदाधरं धारणाया स्मरन्ति ॥
किरीटिनं कुण्डलिनं चतुर्भुजं पीताम्बरं वक्षसि लाक्षितं श्रिया ।
तमद्भुतं बालक मम्बुजेक्षणं चतुर्भुजंशंख मदाद्युदायुधम् ।
श्रीवत्सलक्ष्मं गलशोभिकौस्तुभं पीताम्बरं सान्द्रपयोदसौभगम्॥
मघश्यामशरीरस्तु पीतवासाश्चतुर्भुजः । शेषशायी जगन्नाथो ।
वन मालाविभूषितः । தேவிபாகவதம்

விஷ்ணுவின் உருவத்தையும் கவனிப்போம். புரா ணத்தில் விஷ்ணுவிற்கு நான்கு கை உண்டென்று சொல்லப் படுகிறது.

விஷ்ணு உலகத்தில் உள்ளவர்களுக்கும் நான்கு கையாம். இதன் விளக்கத்தைக் கவனிப்போம். (பாக வதம் 2, 9.) விஷ்ணு உலகத்தில் மாயையும் இல்லை, மாயாவியும் இல்லை. பக்தர்களே இருக்கிறார்கள். விஷ் ணுவிற்குக் கைகள் நான்காயிருக்க நான்கு தலை, ஐந்து கண், முதலியவைகள் சொல்லப்பட வில்லை. இதற்குக் காரணமும் சூரியதேவனேயாகும். சூரியனுடைய கிரண ரூபமான புஜமானது நான்கு பக்கமும் பரவி யுள்ளது. கிர ணத்திற்குக் கரம், ஹஸ்தம் என்ற பெயர்களும் உண்டு. மொழி இலக் கணப் புணரியலின் விளக்க விபரீதத்தினால் இக்கலக்கம் ஏற்பட்டது. அதன் உண்மை இலக்கணப் புணரியலின் விளக்கம்யாதெனில்:—எவனுக்கு நான்கு திக்கு களிலும் கைகள் (கிரணங்கள்) உளவோ, அவனே நான்கு கைகளை யுடையயவன். சூரியன் நான்கு கைகளை ஏன் உடையவனென்றால் அவன் நான்கு திசைகளிலும் பரவி யிருக்கிறான். சூரியனிலிருந்து விஷ்ணு கற்பிக்கப் பட்ட வுடன் நான்கு கிரணங்களை நான்கு கைகளாக மாற்றி விட் டார்கள்.

## 14. எட்டு, பத்து கைகள் உள்ள விஷ்ணு.

சிற்சில இடங்களில் எட்டு, பத்து கைகள் என்றும் விளக்கப்பட் டிருக்கிறது

कृतपादः सुपर्णांसे प्रलम्बाष्टमहाभुजः ।
चक्रशंखासिचर्म्मेषुधनुःपाशगदाधरः ॥

**महामणिव्रातकीरीटकुण्डलं प्रभापरिक्षिप्तसहस्र कुन्तलम् ।**
**प्रलम्बचार्वष्टभुजं श्रीवत्सलक्ष्यं वनमालयावृतम् ॥** பாகவ.

கருடன்மேல் வீற்றிருப்பவர் எட்டு முழநீளமுள்ளவர். அவருடைய எட்டு கைகளிலும் சக்கரம், சங்கு முதலியவைகள் உண்டு. அவர் கிரீடம், குண்டலம் முதலியவைகளால் அழகு செய்யப்பட்டவர். அவருடைய கைகள் நீளமாகவும், அழகுள்ளவைகளாகவும் இருக்கும்.

**पितामहादपिवरः शाश्वतः पुरुषो हरिः ।**
**कृष्णो जाम्वूनदाभो व्यभ्रे सूर्य्य इवोदितः ॥**
**दशावाहुर्महातेजा देवतारिनिषूदनः ।**
**श्रीवत्साङ्को हृषीकेशः सर्वदैवतपूजितः ॥** பார

இங்கு பத்துக் கைகள் உள்ளவரென்று உணர்த்தப்பட்டிருக்கிறது. வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கென திசைகள் நான்கு. இந்த நான்கோடு ஆக்னேயம்,நைருத்தியம் வாயவ்யம், ஈசானம் இந் நான்கையும் சேர்த்தால் திசை எட்டாகிறது. சாதாரண திசைகளின் நடுப்பாகத்திற்கே இப் பெயர்கள். மேல் கீழ் ஆக இரண்டையும் சேர்த்தால் திசைகள்பத்தாகும். சூரியனையும், நான்கு, எட்டு, பத்துகை உள்ளவன் என்றுசொல்வதற்கு 'யாதொரு சந்தேகமும் இல்லை. அவன் செல்லாத திசை இல்லை என்றே சொல்லலாம்

## 15. விஷ்ணுவும் வெண்மை நிறமும்.

பூர்வ காலத்தில் விஷ்ணுவை வெண்மை நிறமெனக் கருதினார்கள். இதற்குப் பற்பல உதாரணங்களை எடுத்துக்

கவனிப்போம். சத்திய நாராயணக் கதையில் இதைப் பார்க்கிறோம். இது பத்ம புராணத்தின் ஒரு பாகம். வெள்ளை வஸ்திர முடையவன். சந்திர சமானன். வெண்மை நிற முள்ளவன். சதுர்ப்புஜன் மலர் முக முடையோன்.

## 16 விஷ்ணுவும் கறுப்பு நிறமும்.

ஆனால் பலஇடங்களில் அவர் நிறம் கறுப்புஎன்றும், நீல மேக நிறமென்றும் கூறப்பட்டுளது. வேதத்தில் சூரியனுக்குக் கிருஷ்ணன் எனப் பெயர். சூரியனில் இழுக்கும் (ஆகர்ஷணம்) வலிமை அதிகமா யிருக்கிற படியால் அவருக்கே கிருஷ்ணன் எனப்பெயர். ஒவ்வொரு அணுவிலும் (ஆகர்ஷண) இழுக்கும் வலிமை உளது, பூமி முதலியவற்றைக்காட்டிலும் சூரியன் பெரியது. இதனாலேயேசூரியனிடத்தில் அதிக வலிமை உளதென்று வேதத்தில் பலஇடங்களில் இருப்பதைக் காணலாம். அவ் வொளி செல்லு மிடத்திற்கும் அவ் வலிமை அடையும் உலகங்களுக்கும் கிருஷ்ணன் எனச் சொல்வ துண்டு. ஏனெனில் அவ்வலிமையினாலேயே பதார்த்தங்கள் அசைவை அடைந்து, உயிர் குணத்தை பெறுகின்றன. சூரியனிலுள்ள வலிமையைப்போல்,பூமிக்கும்இழுக்கும் சக்தி யில்லாமலிருந்தால் இப்பூமி சூரியனால் அதைச் சுற்றி இழுக்கப்பட்டு நெருப்பில் வீழ்ந்து சாம்பலாயிருக்கும். இதனாலேயே இழுக்கும் வலிமையுள்ள பார்த்தங்களைக் கிருஷ்ணன் எனக்கூறலாம் ;

**कृष्णं नियानं हरयः अपो वसाना दिवमुत्पतन्ति ।**
**त आववृत्रन् सदना हृदस्याऽदिद्घृतेन पृथिवी व्युद्यते ॥**

ருக். 1, 164, 4.

ஜலத்தை இழுத்து, அதனுல் மேகங்களை நிரப்பும் கிரணங்களானது தன்னுடைய நியமத்தினுல், பூமி முதலியவைகளை நிலை நிறுத்துகின்றன. இவ் வலிமையிணுலேயே வான லோகத்தை இந்நீர்த்துளிகள் அடைகின்றன. பூமியும் நனைந்து ஈரமாகிவிடுகிறது. இது உத்திராயண, தட்சிணுபனங்களின் காலை, மாலையின் வருணனை. தட்சிணு யனத்தில் மழை ஆரம்பமாகிறது. மாலையில் சூரியனின் கிரணங்கள் பூமியின் ஒரு பாகத்திலிருந்து வேறு பாகத்திற்குச் செல்லுகின்றது. அது திரும்புங்காலையில், பனி எங்கும் நிறைந்திருக்கும். அவை சூரியனுல் இழுக்கப்படுகின்றன. எனவே சூரியனே கிருஷ்ணன்.

**आकृष्णेन रजसा वर्तमानो निवेशयन्नमृतं मर्त्यञ्च ।**
**हिरण्येयेन सविता रथेन देवोयाति भुवनानि पश्यन् ॥**

ருக். 1, 35, 2.

"இராஜன்" ஆகிய பெயர்கள் பூமியைக் குறிக்கிறதென்று பாஸ்கரர் சொல்லுகிருர். இழுக்கும் வலிமையுள்ள பூமி முதலிய உலகங்களுடன் சுற்றும் சூரியனுனவன் பிரகஸ்பதிமுதலிய கிரகங்களையும் அவ்வவ்விடத்தில் நிலை நிறுத்துகிருன்; ஜீவஜந்துகளுக்கெல்லாம் பார்க்கும் வலிமையை அளிக்கின்றுன். இக்குணங்களுடன் கூடிய சூரியன் ரதத்தில் வருகிருன். சுலோகத்திலுள்ள கிருஷ்ணன் எனும் பதத்திற்கு இழுக்கும் சக்தி யென்றே விளக்கியிருக்கிருர்.

**अभीवृतं कृशनैर्विश्वरूपं हिरण्शम्यं यजतो बृहन्तम् ।**
**आस्थाद्रथं सविता चित्रभानुः कृष्णा रजांसि तविषी दधानः ॥**

ருக். 1, 5, 24.

### 17. சூரியனின் கருப்பு வெண்மை உருவங்கள்.

**तन्मित्रस्य वरुणस्याभिचक्षे सूर्य्योरूपं कृणुते द्योरुपस्थे ।
अनन्त मन्यद्रुशदस्य पाजः कृष्णमन்यद्धरितः सम्भरन्ति ॥**

யஜு. 33, 33.

சூரியன் இருலோக மித்திரன். நேசஉருவத்தில் நல்லோர்களுக்கு நன்மையும், வருண உருவத்தில் தீயோர்களுக்குத் தண்டனையும் தருகிறார். எங்கும் பரவியுள்ள இவ்வனந்த ஒளி வெண்மை நிறமுள்ளது. ஒன்று கிருஷ்ண உருவம், இந்திரியத்தை இழுக்கும் துவைத உருவம். மற்றொன்று வெண்மையும் சேதனுமுள்ள அத்வைத குணமுடையது. சகுணம், நிர்குணம் நிறைந்த பிரும்மம் சூரியனே. இது மகீதரரின் விளக்கம். இவரும் சூரியனுக்கு இரு உருவமென்கிறார். ஒன்று வெண்மை; மற்றொன்று கறுமை. வெண்மை யெனில் சுத்தம், சேதனம் இரண்டல்லாதது. கிருஷ்ணன் அல்லது இந்திரியங்களை இழுப்பவன். இது பௌராணிக சமய காலத்தில் விளக்கஞ் செய்யப் பட்டபடியால் சூரியனே பரமபூஜ்ய பிரம்மமெனஎண்ணினார்கள். வானலோகத்திலிருந்துகொண்டு ஒளி வீசுபவன் இரு உரு உடையவன். ஒளி வீசுவது வெண்மை நிறம். பதார்த்தங்களின் அகச் சக்தியை வென்று ஆதரிப்பவன் கிருஷ்ண உருவமுள்ளவன்.

### 18. ராம கிருஷ்ண அவதாரங்கள்.

இக்காரணத்தினாலேயே விஷ்ணுவின் அவதாரங்களெல்லாம், கறுப்பாகவோ, நீலமேக மாகவோ கருதப்பட்டு விட்டன. ஆனால் வாமனன், பரசுராமன், வியாசன் ஆகிய அவ

தாரங்கள் வெண்மைநிற மெனவே கூறப்பட்டிருக்கிறது. ஒரு உதிரத்திலிருந்தே அதிகக் கருப்பும், அதிக வெண்மையுமுள்ள ஜனனம் ஏற்படுவதுண்டோ? தசரதர் வெகு வெண்மையானவர். ஆனால் அவர் மகன் ராமச்சந்திரன் கறுப்பு நிறமுள்ளவன். இது நடக்கக் கூடியதா? இல்லை. ராமன், கிருஷ்ணன் முதலிய அரச மக்கள் ராஜ புத்திரர்களாக இருந்தால், வெண்மை நிறமாகவே யிருந்திருக்க வேண்டும். விஷ்ணுவைப் போல் இதுவும் கற்பனை யென்றால் கறுப்பு நிறமெனக் கொள்வதில் சந்தேகமில்லை. முதன் முதலில் மூன்று தேவதைகள் கற்பிக்கப்பட்டன. பிறகு பிரக்யாதி பெற்ற அரசர்களும், முத்தேவர்களின் அவதார மெனக் கருதப் பட்டார்கள். இக்காரணத்தினாலேயே கறுப்பு நிறம் வர்ணிக்கப்பட்டது. அரச புத்திரர்கள் அந்நிறமுள்ளவ ரல்லர். எனினும் அவதார புருஷர் என்று கருதப்பட்ட வுடன், விஷ்ணுவிற்குக் கற்பிக்கப்பட்ட கறுப்பு அல்லது நீலமேக வர்ணத்தை அவர்களுக்கும் கற்பித்துவிட்டார்கள்.

## 19. விஷ்ணுவும் நீல மேக நிறமும்.

விஷ்ணுவின் நீல மேக நிறத்திற்குக் காரணம் யாது? கறுமையும், நீல மேகமும் ஒரு மொழியின் தனித் தனிப் பெயர்களே. எங்கும் ஒரே நிறத்தைக் குறிக்கவே உபயோகப்படுத்தப் பட்டிருக்கின்றன. வெகு காலத்திற்குப் பிறகு விஷ்ணுவின் உண்மையான உருவை மறந்து விட்டார்கள். இதையே பிரம்மம் எனவும் நினைத்தார்கள். ஆகாசத்தையே உபமானமாகவும் கொண்டார்கள். எங்கும் பிரம்மத்தை ஆகாசத்திற்கு ஒப்பிடப் பட்டிருக்கின்றது. ஜனங்கள் நாள

டையில் ஆகாசத்தையே விஷ்ணு வெனக்கருதி விட்டார்கள். பிறகு அதன் தோற்றத்தை விஷ்ணுவிற்குக் கற்பித்து விட்டார்கள். ஏனெனில் ஆகாசத்திற்கு உருவமில்லை. பக்தர்கள் சூன்யமான ஆகாசம், நீல நிறமா யிருப்பதைக் கண்டார்கள். அங்ஙனமே விஷ்ணுவையும் நீல நிறமென நிர்மாணித்து விட்டார்கள். ஆனால் உண்மையில் ஆகாசத்தி லிருக்கும் நீல நிறம் தோற்றமேயாகும். உண்மையாய் விஷ்ணுவிற்கு உருவம் யாதொன்று மில்லை. இக்கற்பனையில் அறிவு நிறைந்துள்ளது. விஷ்ணுவை நீல மேகன் (சியாமன்) என்பதற்கு வேறொரு காரணமும் உண்டு. சியாமன் என்றால் அழகுள்ளவன். காவியங்களிலும் சுந்தரமாதைச் சியாமை என அழைத்திருக்கிறார்கள். சீதையோ வெண்மை நிறமானவள். வால்மீகியும்அவளைங் "சியாமை" (நீல மேகம்)என்கிறார். திரௌபதையும் அங்ஙனமே வர்ணிக்கப்பட் டிருக்கிறாள். சியாமை என்பது பெண்பால். இதற்கு ஆண்பால் சியாம எனலாம். பாரத மக்கள் சத்திய ஆசரணைகளைக் கைவிட்டவுடன், தங்கள் தேவர்களைச் சிறிய குழவியைப்போல் அழகு, வாய்ந்தவர்களாய்க் கருதினார்கள். குழவியின் உருவத்தைச் செய்துபூஜை செய்யலானார்கள். குழந்தைப் ப்ருவத்தின் அழகு யெளவனத்திற்கும், வயதுநிறைந்த உருவத்திற்கும் கிடையாது. இக்காரணத்தினாலேயே எல்லா கோவில்களிலும் பாலராம கிருஷ்ண மூர்த்திகளைக் குழந்தை பருவமாகவே பார்க்கிறோம். வயது முதிர்ந்த உருவங்களை நாம் பார்க்கிறதில்லை. ராவணனைக் கொல்லுங்கால் ஸ்ரீ ராமர் குழந்தைப் பருவத்திலில்லை. ஆனால் எல்லாச்சந்தர்ப்பங்களிலும் குழந்தைப் பருவமுள்ளவராகவே காட்டப்படுகின்றது. இச்சந்தர்ப்பத்தினால் தான் சியாமன் என்றார்கள்.

சியாமமெனில் அழகென எங்ஙனம் உதித்தது? சியாமமென்ருல் ஒரு வித சாய நிறம். முதலில் ஆரியர்கள் வெண்மையாயிருந்தார்கள். இப்பொழுது கானகத்திலுள்ளவர்களைப் போல், அப்பொழுதும் நாகரிக மற்றவர்கள் கறுப்பாகவே இருந்தார்கள். ஆரியர்களுக்கும் அவர்களுக்கும் நெருங்கின சம்பந்தமிருந்து வந்தது. அவர்களுடைய மக்கள் நிறவேற்றுமையுடன் தோன்றினர்கள். தகப்பனைப்போல் வெண்மையாகவும் தாயைப்போல் கறுமையாகவுமில்லை. ஆரியர்கள் இதை வெகு அழகென மதித்தார்கள். நாளடைவில் சியாமமென்பது அழகுக்குப் பதிலாகக் கருதப்பட்டுவிட்டது.

## 20. சத்துவ குணத்திற்கு விரோதமானது கிருஷ்ண (கறுமை) நிறம்.

வட மொழியில் சத்துவ குணத்தின் நிறம் வெண்மை. தமோகுணத்தின் நிறம் கறுப்பு. தமோ குணமுள்ள எம தர்ம ராஜனின் நிறம் கறுமை. அவர் தூதர்களின் நிறமும் கறுமைதான். இப்படி யிருந்தும் சத்துவ குணம் நிறைந்த விஷ்ணுவை ஏன் கறுமை நிறமெனக் கருதவேண்டும்? ஸ்ரீ பாகவதத்தில், வசுதேவர் ஸ்ரீ கிருஷ்ணனைத் துதி செய்யுங்கால் உரைப்பதாவது:—

**स त्वं त्रिलोकस्थितये स्वमायया विभर्षि शुक्लं खलु वर्णमात्मनः ।**
**सर्गाय रक्तं रजसोपबृंहितं कृष्णं च वर्णं तमसा जनात्यये ॥**

பகவானே! உம்முடைய மாயையினுல் மூவுலகத்தையும் காக்கும் பொருட்டுச் சத்துவ குண உருவான வெண்மையா யிருக்கிருய். சிருஷ்டியின் குணமாகிய ராஜச குணத்திற்குச் சிறந்ததான இரத்தஉருவை அடைந்திருக்கிருய். நாச

த்தின் உருவான கிருஷ்ண (கருமையான) நிறத்தை அடைந்திருக்கிறாய். மூன்றுகாரியத்திற் கேற்றவாறு மூன்று உருவாக வருணித்திருக்கிறார். பிரம்மா சிருஷ்டி கர்த்தர் வாகவும், விஷ்ணு பாதுகாப்பவனாகவும் சிவன் அழிப்பவனாகவும் இருக்கிறார்கள். இக்கிரமப்படி விஷ்ணு வெண்மையாயிருத்தல் வேண்டும். அனால் துஷ்டர்களை நாசஞ் செய்ய வந்ததினால் அழிக்கும் நிறமே அளிக்கப்பட்டதெனலாம். விஷ்ணு சண்டை செய்தது பாதுகாப்பதின நிமித்தமே யென்றால், பிரம்மாவும், மகா தேவனும் அளித்தல், ஆக்கல் வேலை செய்வதாயும் புராணங்கள் கூறி யிருக்கின்றன. இதனால் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு குணத்தையே கிரகிக்க வேண்டும். நியமப்பிரகாரமே விஷ்ணுவிற்கு வெண்மையும், மகா தேவனுக்குக் கறுப்பு மிருத்தல் வேண்டும். இம் மாறுதலான குண வேற்றுமையின் நிறத்திற்குக் காரணம் யாது? வேதத்தில் சூரியனுக்குக் கிருஷ்ணன் எனும்பெயர் உண்டு. சூரியனை விஷ்ணுவாகக் கற்பனை செய்து, விஷ்ணுவின் அவதாரமாகக் கிருஷ்ணனைக் கருதினார்கள். விஷ்ணு தேவன் சூரியனின் பிரதி நிதி யென்று இதிலிருந்தே விளங்குகிறது.

## 21. விஷ்ணுவும் லக்ஷ்மியும்.

லக்ஷ்மியையும், ஸ்ரீயையும் விஷ்ணுவின் சக்தி யெனக் கருதுகிறோம். அழகிற்கும், ஐசுவரியத்திற்கும், லக்ஷ்மி எனவும் ஸ்ரீ எனவும்முறையேபெயர். வெகு நுண்ணிய அறிவுடன் விஷ்ணுவுடன் ஸ்ரீயைக் கலந்திருக்கிறார்கள். இப்பூமியின் கண் உள்ள அழகும், ஐசுவரியமும் எங்கிருந்து உற்பத்தி யாகிறது? சூரியனாலேயே இவ்வுலகமானது அழகைப் பெறுகின்றது. அதாவது உலகத்தின் அழகிற்குச் சூரியனே கார

ணம். பிருகிருதி தேவதையே தன் பிரகாசத்தை விஸ்தார மாக விளக்குகிறது. இயற்கையின் வனப்பைக்கண்டு உவகை கொள்ளாதான் எவன்? மாலையின் அழகைப் பார்ப் போம். என்ன இனிமை? அந்நேரத்திற் பிராணிகளெல் லாம் ஒன்றுசேர்ந்து மறைந்து விடுகின்றன. வேடர்களின் காலமாய் விடுகிறது. பிரகிருதி தேவியின் கீர்த்தி எங்கேயோ மறைந்து விடுகிறது. பின்னர் இருளில் நாம் காணுமலிருக்கும் சிறிய புழுக்கள் எங்கும் தோன்றுகின்றன. இரவானது பிரகிருதி தேவியின் அழகைப்பார்க்க முடியாமல் நம் கண் களை மூடிவிடுகின்றது. திருடர், புலி, கரடி, சிங்கங்களின் பயம் மேலிடுகின்றது. பனித்துளி விழுந்து பயிர்கள் நாச மடைதல் கூடாதென்று எண்ணுகிறோம், இரவில் யாது நேரிடுமோ? நாம் அறியோம். ஈசா! எங்களையும்காப்பாற்றும். சூரியன் சீக்கிரம் உதயமாகவேண்டும். சூரியனில்லாது போனால் எத்தனை ஆபத்துகள்நேரிடும்? கண்கள் அதிக நுண்ணி யதா யிருந்த போதிலும் துக்கத்தையே அடைகிறது. ஜாதி பட்சியானது மிகவும் மதியுள்ளதென்பார்கள். எவ்வளவு புத்தியுள்ளதாயிருந்தபோதிலும், இரவில் அதிக விசன மடைகிறது. இரவில் காக்கை தனது சாமர்த்தியத்தை இழக் கிறது. அதாவது வலிமையுள்ள பறவையும் இரவில் வலிமை யற்றதாய் விடுகின்றது. ஆந்தையைப் போலுள்ள பறவைகள் கொஞ்சந்தானுண்டு. இதனாலேயே இரவை விரும்புகிற தில்லை. இரவிலுண்டாகும் கொஞ்சம் அழகிற்கும் சூரியனே காரணமாகும். சூரியனால் பிர்காசிக்கப்பட்ட சந்திரனுடைய நிலவு இரவைச் சிறப்பிக்கிறது. அழகிற்கிருப்பிடம் உரு வமேயாம். அதைக்கண்டு களிப்பது கண்களே. பார்க் கும் சக்திக்கும் உலகில் தோன்றும் பஞ்ச வர்ணங்களுக்கும்

காரணம் சூரியனேயாம். இதனாலேயே சூரியனை விசுவரூப மென்கிறார்கள். சகல பொருள்களின் விளக்கத்திற்குங்காரணம் சூரியனேயாவான். எனவே விசுவரூபன் என்றால் பொருள்களின் பெருமையைவெளிப்படுத்துபவன் என்பதேயாம்.

**असौ वा आदित्यः पिंगल एष शुक्र एष नील एव पीत लोहितः ।**

சூரிய நிறம் வெண்மையானது; நீலமானது; மஞ்சளானது; சர்வநிறங்களும் அவனிடமிருக்கின்றன. காற்றன்றியில் சூரியன் கிடையாது. சூரியனில்லாது காற்று கிடையாது. பூமியில்லாமல் பிராணிகள் எங்கு தங்கும்? ஜலத்தில்லாமல் மீன்கள் எங்கு வசிக்கும்? ஒன்றுக்குள் ஒன்று ஐக்கியமாயிருந்தும், ஒவ்வொன்றிற்கும் சிறந்த குணமிருக்கிறது.

## 22. சூரியனும் ஐசுவரியமும்

உருவத்தை விளக்குவதில் சிறந்த சூரியன், சகல ஐசுவரியத்திற்கும் மூலாதாரமானவன். பற்பல ரோகங்களை அவன் அழித்துக்கொண்டே யிருக்கிறான். அப்படியிருந்தும் எவ்வளவோ வியாதிகள் தோன்றுகின்றன. வியாதிகளைப் போக்கவேண்டிய பச்சிலைகளுக்கும், மூலிகைகளுக்கும் அவனே தான் காரணம். சூரியனின் வெயில் படாவிடில் கோதுமை, நெல் முதலிய தானியப் பயிர்களும் அழிந்தோ, குறைந்தோ போகும்.

**श्रीश्च ते लक्ष्मीश्च पत्न्या वहोरात्रे पार्श्वे नक्षत्राणि रूप मश्वितोव्यात्तम् । इष्णान्निषाणा मुंम इषाण सर्वेलोकं म इषाण ॥**

சூரியனே ஸ்ரீயும், லக்ஷ்மியுமாக ஆகிறான். சில காலம் சூரியன் உபாசிக்கப்பட்டுவந்தான். பின்னர் விஷ்ணு தேவதை கற்பிக்கப்பட்டு அவரிடத்தில் சூரியனுடைய குணங்கள் ஆரோபிக்கப்பட்டன. ஸ்ரீ, லட்சுமி இவர்களுடைய குணத்திற்கேற்றவாறு ஐசுவரியமாகவும், அழகாகவும் மாறுகிறார்கள். "பகலிலும், இரவிலும் நிலைத்திருக்கிறாய். ஆகாசமும், நட்சத்திரமும் உன் உருவங்கள். ஏனென்றால், ஓ சூரியனே! உன் ஒளியினாலேயே அவர்கள் விளங்குகிறார்கள்." இதை முன்னரே விளக்கியிருக்கிறோம். இங்கு ஸ்ரீயும், லக்ஷ்மியும் சூரியனின் மனைவியாகவே கொள்ளப்பட்டிருக்கிறது. இதனாலேயே சூரியனில் கற்பிக்கப்பட்ட விஷ்ணுவிற்கு ஸ்ரீ, லக்ஷ்மி ஆகிய இருவரையும் மனைவியாக்கி விட்டார்கள்.

வைதீக பாஷையில் பத்தினியென்றால் சக்தியாகும். பாது காக்கும் வலிமைக்குப் பத்தினி என்று பெயர். சூரியன் முதலிய கிரகங்களுக்கு மனிதரைப் போல் மனைவிகள் கிடையாது. இதில் பெரிய (சக்தி) ஒன்றுண்டு. அதனால் தான் உலகம் போஷிக்கப்பட்டுப் பாதுகாக்கப் படுகின்றது. இவ்வலிமைக்கே பத்தினியெனப் பெயர். லட்சுமி சமுத்திரத்தில் தோன்றினாளாம். சமுத்திரமென்றால் ஆகாசம் என்று முன்னரே சொல்லியுள்ளோம். ஆகாசத்திலிருந்துலட்சுமியும் ஸ்ரீயும் உற்பத்தி யானார்கள் என்றால் உண்மை தான்! ஆகாசத்தையும், அதிலுள்ள சூரியனையும் சமுத்திரமென்று அழைக்கிறோம். வடமொழியில் பதார்த்தத்தையும், அதில் வீற்றிருப்பவனையும் சில சந்தர்ப்பங்களில் ஒரே பெயரால் அழைப்பதுண்டு. பதார்த்தத்தின் பெயர் அதில் வீற்றிருப்பவர் பெயரையுங் குறிக்கும். அதாவது சமுத்திரத்தி

விருந்து (சூரியனிட மிருந்து) இலட்சுமி உதயமானுள் என்பது உண்மை தான். இவ்வுண்மையை மறந்ததின் பயனுக சமுத்திர மென்பதும் ஒரு பதார்த்தத்தைக் குறிப்பதாகி விட்டது. ஜனங்கள் அஞ்ஞான இருளில் மூழ்கி, ஜலத்தைக் கடைந்ததிஞல் லட்சுமி தேவி உற்பத்தியாஞளென்ற, கதையும் கட்டி விட்டார்கள். லட்சுமி சூரியனிலிருந்து தனிப்பட்டவள் அல்லவாதலால் அவளுடைய பிறப்பு எப்படி உண்டாகும்? அழகிற்கும் ஐசுவரியத்திற்கும் லட்சுமியெனப் பெயருண்டு. இதனுலேயே இவைகளுக்கு முதற்காரணமான சூரியனை லட்சுமி பத்தினி என்பார்கள். சூரியனுக்கு மனித உருவைக் கொடுத்து விஷ்ணுவைச் செய்தபொழுது மனிதனுக்கேற்ற மனைவியும் வேண்டு மல்லவா?

## 23. விஷ்ணுவும் தாமரையும்

மகாதேவன் வில்வ இலையை விரும்புவதுபோல், விஷ்ணுவும் தாமரையை விரும்புகிருராம். தாமரையைவிட மனேரம்மியமான இலைகள்பலவிருக்க, விஷ்ணு இதைமாத்திரம் விரும்புவானேன் என்று ஊகிக்கவேண்டும். கவிகள் சூரியனைத் தாமரைக்கு நாயகன் என்று வருணித்திருக்கிருர்கள். ஏனெனில் சூரியோதயத்தில் தாமரை மலர்கின்றது. இரவில் மூடிக் கொள்கின்றது. சூரியனில் கற்பிக்கப்பட்ட விஷ்ணுவிற்கு இதை மனைவியாக மதித்துவிட்டார்கள். இதனுலேயே புராணங்கள் கமலத்தைக் கண்டால் விஷ்ணு, மகிழ்ச்சியடைகிருர் என்று கூறுகின்றது. புராணங்கள் பகவானைப் புண்டரீகாக்ஷன், கமல நயனன் என்ற பல பெயர்களால் அழைக்கின்றன. புண்டரீகமென்று கமலத்திற்குப் பெயருண்டு. கமலத்திற்குச் சமானமான கண்களை உடையவன் கமல நயனன்.

அபிவித்திர பவித் ரோவா சர்வா வஸ்தாகதோபிவா
யஸ்மரேத் புண்டரீ காட்சம் பாஹ்யா ப்யன் தர சுசி:

ஹிருதய கமலத்தில்வீற்றிருப்பவனையேபுண்டரீகாட்ச னெனவேண்டும். ஹிருதய ரூபமான கமலமே தியானத் திற்கு ஏற்ற இடமென்று உபநிடதங்கள் போற்றுகின்றன. நூறு இதழ்களும், ஆயிரம் இதழ்களுமுள்ள மலர்களுள. இக்காரணத்தினாலேயே இதற்குச் "சகஸ்ர பத்திரம்" எனப் பெயரும் உண்டு. அதாவது ஆயிரங் கிரணங்கள் உடைய தாம். சூரியனுக்குச் சஹஸ்ராம்சு என்ற பெயரும் உண்டு. விஷ்ணுவைக் கற்பித்த கவிவாணர் உருவுடன் கூடின கம லத்தையும் இங்ஙனம் நிர்ணயஞ் செய்துவிட்டார்.

## 24. விஷ்ணுவும் சமுத்திர மதனமும்.

திருப்பாற்கடல் கடையப்பட்ட விஷயத்தைப்பற்றி எல்லாப் புராணங்களும் கூறுகின்றன. இதற்கு முக்கிய காரணம் விஷ்ணுவே யாவர். ஏனெனில்அவர் மோஹினி உருவம் எடுக்கவில்லையானால் தேவர்கள் பெருங்கஷ்ட மடைந்திருக்க வேண்டியிருக்கும்.

பாற்கடல் கடைந்து அமிர்தமெடுத்த சமயத்தில் நாரா யணன் மோகினி உருவங் கொண்டு அரக்கர்களின் அருகே சென்றார். அரக்கர்கள் அவ்வணங்கின் மேல் மோகங் கொண்டு அமுத கலசததை அவளிடம் கொடுத்து விட்டார் கள் என்பது கதையாகும்.

ராமாயணத்தில் அமிர்தம் வந்தவுடன் அசுரர்களும் தேவர்களும் சண்டையிட, விஷ்ணு பெண் உருவுடன் வந்து அரக்கரை அழித்துத் தேவர்களுக்கு அமிர்தத்தை அளித் தார் என்று சொல்லப்படுகிறது.

ஸ்ரீ பாகவதம் எட்டாவது அத்தியாயத்தி லுள்ள இக் கதையின் விளக்கமாவது:—தேவர்களை விட அசுரர்களின் கூட்டம் அதிகமாயிருந்தது. எல்லாத் தேவதைகளும் பிரம்மா வுட்படவிஷ்ணுவின் அருகே செல்ல, அவர்கூறியதாவது:— அசுரர்களோடு சேர்ந்து பாற்கடலை மதனஞ் செய்யுங்கள். அப்பொழுது அவர்கள் கிலேசமடைவார்கள். நீங்கள் லாபம் பெறுவீர்கள். விஷம் அதிலிருந்து உற்பத்தி யாகும். மந்திராசல மலையை மத்தாகக்கொண்டு, வாசுகி என்னும் பாம்பைக் கயிறாகக்கொண்டு மதனம் செய்யுங் கள் என்றார். இதைக்கேட்டுத் தேவர்களும் அசுரர்களும் அப்படியே செய்தார்கள். முதலில் ஆலகால விஷந்தோன் றிற்று. அதை மகாதேவர் அருந்தினர். பிறகு ஹவிர் பாகம் உண்டாக அதை இருஷிகள் அடைந்தார்கள். அதற் கப்பால் சிறந்தகுதிரையும்,வெள்ளை யானையும் தோன்றிற்று. அவைகளை இந்திரன் அடைந்தான். கௌஸ்துபமணி பிறகு தோன்றிற்று. அதை விஷ்ணு பகவான் அணிந்தார். பிறகு தோன்றிய பாரிஜாதம் சுவர்க்க லோகத்திற்கு அணியாயிற்று. பின்னர் தேவ மாதர்களும் லக்ஷ்மியும் தோன்றினர்கள். லக்ஷ்மியை விஷ்ணு மணந்தார். வாருணி தோன்றி னள். அவளை அசுரர்கள் கைப்பற்றினர்கள். வெகுகாலத்திற் குப் பிறகுத் தன்வந்தரி அமுத கலசத்தைக் கையிலேந்திக் கிளம்பினர். அமுதம் தோன்றுங்கால் விஷ்ணு மறைந்து விட்டார். தேவர்களும், அசுரர்களும் சண்டையிடத் தொடங்கினர்கள். அசுரர்கள் தேவர்களை ஜயித்து அமுத கலசத்தைப் பிடுங்கிக்கொண்டோட, மகாவிஷ்ணு ரூபலாவண் ணியமுள்ள யௌவன ஸ்திரீ உருவந் தரித்து, அசுரர்கள் ஓடும் வழியே வனத்தில் தோன்றினர். அவளிடத்தில் மோகமடை

ந்து அமுத கலசத்தை அவளிடமே அசுரர்கள் கொடுத்துவிட்டார்கள். அசுரர்களை ஏமாற்றி விஷ்ணு, தேவர்களுக்கு அமுதத்தை அளித்து விட்டார். மகாபாரதம், இராமயணம், புராணம் முதலியவைகளில் வெவ்வேறு விதமாக இக்கதை சொல்லப்பட்டிருப்பதைக் கவனிக்கவும்.

இம் மூன்றையும் பற்றிக் கவனிப்போம். புராண நூலாசிரியர்களின் காலத்தில் இதன் உண்மைத் தத்துவம் மறைந்து விட்டபடியினாலேயே இவ்வளவு வேற்றுமையான கதைகள் ஏற்பட்டன. இராமாயணத்தில் இலட்சுமி உற்பத்தியின் விளக்கத்தைப் பற்றி ஒன்றுமில்லை.

இக்கதையின் தத்துவம் யாது? தயிரைக் கடைவது போல் தேவர்கள் உண்மையில் சமுத்திரத்தைக் கடைந்தார்களா? அதை உண்மையாகத் தேவ கணங்கள் பருகிச் சிரஞ்சீவி யானார்களா? நாம் பார்க்கும் சமுத்திரம் ஒரு நாளும் கடையப்பட வில்லை. அதைக் கடைதலும் முடியாது. அமுத ஆசையினால் எவன் இதைக் கடைய ஆரம்பிப்பான்? சிரஞ்சீவிகளான தேவர்கள் எப்பொழுதும் எங்கேயிருக்கிறார்கள்? புராணங்களில் அவர்கள் இன்னும் சண்டையிட்டுக் கொண்டிருக்கிறார்களா? அசுரன் என்றால் மேகமென்று அறிந்து கொள்ளவும்.

अद्रिः । ग्रावा । गोत्रः । बलः । अश्मः । पुरभोजाः । वलिशानः । अश्मा । पर्वतः । गिरिः । ब्रजः । चरुः । वराहः । शम्बरः । रौहिणः । रैवतः । फलिगः । उपरः । उपलः । चमसः । अहिः । अभ्रम् । बलाहकः । मेघः । दृतिः । ओदनः । वृषन्धिः । वृत्रः । असुरः । कोशः इति त्रिंशन्मेघनामानि । நிகண்டு 1, 10

தேவன் என்பது சூரிய கிரணங்களென அறிவீர்கள். வைதீக பாஷையில் பதார்த்தங்களுக்கே தேவன் என்று பெயர். சூரிய கிரணங்களையும் மேகத்தையும் கவனியுங்கள். மேகக் கூட்டத்தைத் தேவ கூட்ட மெனலாம். சூரிய கிரணம், மேகம், ஆகிய தேவன், அசுரன் இரண்டுஞ்சேர்ந்துகொண்டு ஆகாசமாகிய சமுத்திரத்தைக் கடைகின்றது. சூரிய கிரணத்தின் வழியாகப் பூமியின்மேலுள்ள ஜலம் வான மண்டலத்தில் சிறுகச் சிறுக சேர்ந்து ஐக்கிய மாகின்றது. பிறகு மேக உருவெடுத்து ஆகாசத்தில் இங்குமங்கும் அலைகின்றது. சூரிய கிரணங்களான தேவதைகளும் அரக்கர் கூட்டங்களான மேக தேவதைகளும் சமுத்ரமான ஆகாசத்தில் கடைந்து கொண்டிருக்கிறார்கள். இக்கடைவதினாலேயே அமுத முண்டாகின்றது.

அமிர்தம் என்றால் ஜலந்தரனென்பதை அறிவாளிகள் அறிதல் வேண்டும். வேதத்தில் இதற்கு அநேக உதாரணங்கள் இருக்கின்றன.

பய: கீலால மருதம் ஜீவனம்
புவனம் வனம். அமரகோஷம்

பய, கீலாலம், அமிருதம், ஜீவனம், புவனம், வனம் இவைகளெல்லாம் ஜலத்தின் பெயர்களேயாம். பூமியிலுள்ள சமுத்திர ஜலம் மேகமாக மாறி மழையாகப் பொழிகிறது. சரியான குளிர்ந்தகாற்றின் சேர்க்கை யில்லையானால் ஜலம் உறைந்து விடும். அதிக உஷ்ணத்தால் நுண்ணிய துளிகளாகவும் பல இடங்களில் பொழிகின்றது. சீதோஷ்ண ஸ்திதிக்கு ஏற்ற பற்பல உருவத்துடனும் இடங்களுக் கேற்றவாறும் ஜலமாகவும் பனிக்கட்டியாகவும் கீழே வருகிறது.

மழை வருங்காலத்தைப் பார்க்கின்றோம். நாலு திசைகளிலும் மேகம் ஊர்கின்றதைப்பார்க்கிறோம். இதுவே அசுரர்கள் அமுதங்கொண்டு ஓடுவதாகும். மேகத்திற்கு அசுர நாமம் உண்டென்று முன்னரே சொல்லியுள்ளோம். சூரிய கிரணங்களாகிற தேவதைகள் பார்த்து நம் வேலைகளெல்லாம் வீணாய் விட்டனவே யென்று கவலை அடைகின்றன. சூரியனாகிற விஷ்ணு அச்சமயத்தில் ரூபலாவண்ணிய உருவமெடுக்கிறான். அதாவது விஷ்ணு (சூரியன்) மின்னலான ஸ்திரீ உருவமெடுக்கிறான். மின்னல் இடியாகமாறி அசுரக் கூட்டங்களை (மேகக் கூட்டங்களை) சின்ன பின்னமாக்குகிறது. இதுதான் விஷ்ணுவின் மோகினி ரூபமாகும். அசுரர்களை அழிப்பதும் இதுதான். மழை காலமே தேவர்கள் அமுதம் அடையும் காலம். மழை பொழிவதும் அமுதமே. எல்லாத் தேவர்களும் பதார்த்தங்களும் அதைப்பருகி ஆனந்தத்தில் அமிழ்கின்றன.

சமுத்திர மதனத்தைப் பற்றி நாம் மற்றோர் விதமாகவும் பொருள் படுத்தலாம். சூரிய உஷ்ணத்தினாலேயே மேகக்கூட்டத்தில் அழகு ஏற்படுகின்றது. விஷ்ணுவாகிற சூரியன் அழகாகிற மோகினி உருவை எடுக்கவே மேகமாகிற அசுரன் ஜலமாகிற அமுதத்தினால் அதை அழிக்கிறது. அதாவது சூரிய உஷ்ணத்தினால் மழை உண்டாகின்றது. ஜல மன்னியில் எல்லாம் இறந்து விடும். தேவ மொழியானது, சூரிய கிரணங்களையும், பூமியின் பதார்த்தங்களையுங் குறிக்கின்றன. ஜலத்திற்கு எப்பொழுதும் அழிவு இல்லை. அதனால்தான் இதற்கு அமுதமெனப் பெயர். மரம் எரிந்து விட்டால் சாம்பலாகிவிடுகின்றது. அது ஒரு பொழுதும் பழைய மரம் போலாகின்றதில்லை. ஆனால்

ஜலம் எவ்வளவு எரிக்கப்பட்ட போதிலும் தன்உருவத்தையே கடைசியில் அடைகின்றது. நெருப்பிலிட்டால் துளி துளியாக மறைந்து விடுகிறது. பல துளிகளின் கூட்டமே மேகமாகும். இதனாலேயே வைதீக பாஷையில் இதற்கு அமுதமெனப்பெயர். இந்த அமுத மதனம் எப்பொழுதும் நடைபெற்றுக்கொண்டேவருகிறது. சமுத்திரத்திலிருந்து மேகம் ஏற்படுவதால் சமுத்திரம் மதனம் செய்யப்படுகிறது என்றனர்.

## 25. ஆலகால விஷம்.

மழைக்கு முன்உஷ்ணம் அதிகரிப்பதைப்பார்க்கிறோம். இதுவே ஆலகால விஷமாகும். மழைச் கால ஆரம்பத்திலேயே வியாதிகள் அதிகமாகிப்பெருகுகின்றன. இவ்விஷத்தை உருத்திரன் (மகாதேவன்) தின்றுவிடுகிறார். உருத்திரன் என்றால் மின்னல் என்று பின்னர் விளக்கப்படும். மின்னல் என்பது பூர்ணமான மழை என்று அறிந்து கொள்ளவும். ஏனென்றால் மின்னல் மழையின் சூசனையாகும். மழை பூர்ணமாகப் பொழிந்தால் ஆறு குளங்களெல்லாம் நிரம்பி, நோய் நீங்கித் தேகமும் சௌக்கியமடைகின்றன.

பிறகு உச்சை சிரவ மென்னுங்குதிரைதோன்றுகிறது. உச்சை சிரவம் என்றால் காற்றிற்குப் பெயர். காற்று இல்லாவிடில் மேகம் புரளுவதும், மழை பொழிதலும் ஏற்படுமா ? ஜனங்களும் காற்றை எதிர்பார்க்கிறார்கள். காற்றைக்கொண்டு மழையை அறிவார்கள். எனவே ஜனங்கள் கோரும் இக் காற்று கீர்த்தியுள்ளதாகிறது. இது ஃவ்விதம் இந்திரனின் வாகனமாகுமெனில் சூரியனாகிற குறிகளில்லாமல் காற்று நிலைப்பது இயலாது. நினைத்த இடத்திற் வியாபகமாகிறபடி

யால் அசுவம் என்பதாகும். மேகத்தை நினைத்த இடத்தில் காற்று சேர்ப்பிக்கிறபடியால் அதற்கும் அசுவம் எனப் பெயர்.

இரா என்றால் அன்னம். ஐராவத மென்றால் யானை. இதுமழை முதலியவைகளுக்குப் பெயர். யாஸ்கநிகண்டில் இதன் விளக்கத்தை அறியலாம். ஐராவதமென்று மேகத் திற்கேபெயர். யானையைப்போல், மந்தகாசத்துடன் அம் மேகம்அசைகிறது. பாரிசாதம் என்னும் வார்த்தையும்மேகத் தையே குறிக்கிறது. எங்ஙனமெனில் மேகத்தில் நாலா பக்கமும் மரம்போல் காணப்படுகிறது. பரி என்றால் பல திசைகள் என்றும் ஜாதகம் என்றால் உற்பத்திபாவது என் றும் பொருளாம்.

கௌஸ்துப மணியைப்பற்றிக் கவனிப்போம். மணி என்று கல்லுக்குப்பெயர். 'கு' என்றால் பூமிக்கும்பெயர். ஏழா வது வேற்றுமையில் அது கௌமென மாறுகின்றது. பூமி யின் பதார்த்தங்களை எது ஹிம்சை செய்கின்றதோ அது தான் கௌஸ்துபம். அதாவது சிற் சில மேகத்திலிருந்து கற் கள் விழும். அக்கல்லிற்கே கௌஸ்துபமணி என்று பெயர். அது விஷ்ணுவின் ஆபரணம்.

பிறகு லக்ஷ்மி உதித்தாள். லக்ஷ்மி என்றால் அழகென முன்பே கூறியிருக்கிறோம். மேக அழகிற்கே லக்ஷ்மி எனப் பெயர். இதற்கும் காரணம் சூரியனே. சூரிய சக்தியே லக்ஷ்மியாகும். மேக அழகு சமுத்திரமாகிய ஆகாசத்தைக் கடைவதினாலேயே ஏற்படுகின்றது. பிறகு வாருணிதேவதை உண்டானாள். இது மழையின் முடிவுகாலம். எல்லோருக்கும் ஏற்றதாகையினால் மழைக்கு வாருணி எனப் பெயர்.

பாற்கடல் கடையப்பட்டது விஷ்ணு மோஹினி வேடம் பூண்டு வந்து அசுரர்களை வஞ்சித்தார் என்ற கதையை நம்புபவர்களும் இருக்கின்றனர்.!! விஷ்ணு, பெண் உருவு எடுத்து வஞ்சித்தார் என்றால், அது பகவானின் பெருமையைக் குறைக்க வில்லையா? புராணங்கள் அழகுள்ள ஸ்திரீகளைத் தூஷித்திருக்கின்றன. பெண்பிறப்பு தாழ்ந்த தென்று புராணத்தில் கூறியிருக்க, இங்ஙனம் பகவானைக் கூறுவது பொருந்துமோ?

மனிதர்களை உத்தமர், மத்திமர், அதமர் என்று மூன்று விதமாகப் பிரிக்கலாம்; நாம் செய்யுங் காரியங்களுக்கேற்ற வாறுநன்மைதீமைகளை அநுபவிக்கின்றோம்.நாம்செய்யும் எக் காரியத்தையும் ஈசுவரன் தடுப்பதில்லை. அவர் மனிதரைப் போலில்லை. அவருக்குச் சிநேகிதருமில்லை. சத்துருவுமில்லை. புனிதமாகவும் நிர்மலமாகவு முள்ளவர். தேவருக்கும் அசுரருக்கும் மற்ற எல்லோருக்கும் அவரேதெய்வம். பட்சபாத சிந்தனையுள்ளவரல்லர். தேவருக்கும் அசுரருக்கும் சமானமாயுள்ளவரே ஈசுவரன். வஞ்சகத்தினால் மோசஞ்செய்து ஏன் அசுரனை அழிக்க வேண்டும்? தேவர்களுக்கு மாத்திரம் ஏன் உதவி புரிதல் வேண்டும்? துஷ்டர்களை அழிப்பது அவர் குணமென்றால் அவர்களை ஏன் பிறப்பிக்கவேண்டும்? கபட வஞ்சகத்தினாலா அழிக்க வேண்டும்? வஞ்சகமும் கபடமும் அவர் குணமாகாது. கர்மங்களுக்கேற்றவாறுபயனை அனுபவித்தேதீரவேண்டும். இதுவே ஈசுவரன் வகுத்துள்ள முறையாகும். அசுரரை நேராகவே தண்டிக்கவும் தேவரைக் காப்பாற்றவும் ஆற்றல் கொண்டவர். கபட வஞ்சகத்திற்குக் காரணம் யாது? வலிமையுள்ள சத்துருவிற்குக் கபடமும் வஞ்சகமும் அவசியமில்லை. வலிமை

யற்ற எதிரியை முக முன்னிலையில் பிடித்து இழுத்துச் சின்ன பின்னம் செய்யமுடியும். கடவுளைக் கபட வஞ்சகராகச் செய்தல் குழந்தைப் பிராயத்தினர் கூற்றேயாகும்.

## 26. விஷ்ணுவும் வாமன அவதாரமும்.

இவ்வாமன அவதாரத்திற்கும் காரணம் சூரியதேவனே யாகும். திரிவிக்கிரமன் என்ற பெயர் அவனுடையதேயாம். எவனுடைய பாதம் மூன்று இடங்களிலும் நிலைத்திருக்கின்றதோ அதாவது எவனின் கிரணங்கள் மூன்று உலகங்களிலும் பரவியிருக்கின்றதோ அவனுக்கே திரிவிக்கிரமன் எனப் பெயர். சூரியனுடைய கிரணங்களானவை வானத்திலும் ஆகாசத்திலும் பரவுகின்றன. காலையில், உச்சியில் மாலையில் கிரண உருவான பாதங்களைப் பதிப்பிக்கிறபிரகாசமுள்ளவனாகின்றான். இவனே திரிவிக்கிரமன்; காலைச் சூரியன் சிறியவனாகவே விளங்குகின்றான். அப்பொழுது பலியாகிற மேக இருளானது எங்கும் மேன்மையாயுள்ளது. சூரியன் மேலே வரவர பலியாகிற இருளானது பாதாள உலகத்தை அடைகின்றது. அச்சமயத்தில் சூரியனின் கால்களாகிற கிரணங்கள் மூன்று உலகங்களிலும் பரவுகின்றன; இருப்பதற்கு இடமில்லை; விஷ்ணு இதை பாதாளலோகத்திற்கு அனுப்பவே ஜீவகோடிகள் சூரிய உதயத்தினால் உற்சாகமடைகின்றன. இது தான் இக்கதையின் உண்மையாகும்.

ஸ்ரீமத் பாகவதம் எட்டாவது படலம் 16-வது அத்தியாத்தில் இவ் வாமனவதாரத்தைப்பற்றிக் கூறப்பட்டுள்ளதாவது :—தேவாசூர சண்டையில் அசுரர்கள் ஜெயித்தார்கள். தேவர்கள் தோற்றனர். காசியபர் 'பெண்ணே கடவுள் அன்பின் ஸ்வரூபி. உலக சிருஷ்டிகளனைத்தையும் பட்சபாத

மில்லாது நேசிப்பவர். அசுரர்களும் எனது மக்களேஅன்றோ. எனவே உன் மக்களுமாவார்கள். யார் ஜெயித்தால் என்ன? வருத்தத்தை விடுத்து பக்தியாயிரு அவர் உன் மனோபீஷ்டங்களை அளிப்பார்" என்று கூறினர். அவ்வண்ணமே அதிதி விருதமிருந்தார். சிறிது காலத்திற்குப் பிறகு அதிதியின் கர்ப்பத்தில் வாமனர் பிறந்தார். உபநயனம் செய்து வைத்தபின்னர், அரக்க அரசனான பலி, யாகம் செய்வதைக் கேட்டு அங்கு சென்றார். பலியும் அவரை அந்தணர்க்குரிய மரியாதையுடன் வரவேற்றான். பலி வாமனனை ஆர்வத்துடன் எதிர்கொண்டழைத்து வேண்டுவதைக் கேள் என்றான். வாமனர் மூன்றடி என்றார். தந்தேன் எனவே வாமனன் ஒரு காலினால் பூமியையும் இரண்டாவதினால் வானத்தையும் அளந்துவிடவே மூன்றாவது அடியை வைக்க இடமில்லாது போய்விட்டது. அதற்கு நிலம் வேண்டுமென்றார். தன் தலையைக் காட்டினார். மஹா பலி அவனை பாதாளத்தில் அமிழ்த்திவிட்டார்.

## 27. விஷ்ணு மொழியும் சூக்தமும்.

வைதிக வட மொழியில் விஷ்ணு என்பதற்குப் பல பொருள்கள் உள. எந்த விஷ்ணுவினின்று வாமனன் கற்பிக்கப்பட்டானோ அவ்விஷ்ணுவே சூரியனாவன். பாஸ்கராசாரியன் விளக்கமாவது:—எச் சூரிய கிரணங்கள் எங்கும் பரவுகின்றனவோ அச் சூரியனுக்கே விஷ்ணு என்று பெயர். பரவுதல் என்ற பொருள் உள்ள உருபிலிருந்து இம்மொழி உண்டாயிருக்கிறது. சூரியன் தன் கிரணங்களால் எங்கும் பரவுகிறபடியால் அவனுக்கு விஷ்ணு எனப் பெயர். கிரணரூபியான சூரியன் மறைவதில்லை. பூமியினாலேயே மறை

வதுபோல் தென்படுகிருன். காலைச்சூரியனுக்கு அதிகக் கிரணம் கிடையாது. உச்சியில் கிரணங்களதிகமாகிறது. இச்சமயத்திலேயே அவன் வானம், ஆகாசம், பூமி ஆகியவற்றில் பரவுகின்ருன். இச் சூரியனுக்கே விஷ்ணு எனப் பெயர்.

**इदं विष्णु र्विचक्रमे त्रेधा निदधे पदम् । समूढ मस्य पांसुरे यदि किञ्च तद्विक्रमते विष्णुः । त्रेधा निधत्ते पदं त्रेधा भावाय पृथिव्या मन्तरिक्षे दिवीति शाकपूणिः समारोहणे विष्णुपदे गयशिरसीति और्णवाभः । समूढमस्य पांसुरे प्यायनेऽन्तरिक्षे पदं न दृश्यतेऽपित्रोपमार्थे स्यात् समूढमस्य पांसुल इव पदं न दृश्यते इति ।**

துர்க்கா சாரியாரின் விளக்கம் அடியில் கண்டவாறு :— (விஷ்ணு:) சூரியன் (விதம்) இங்கு இருக்கும் யாவற்றிலும் (விக்ரமதே) அவனுடைய கிரணங்களால் பரவுகின்ருன். வானம், ஆகாசம், பூமி முதலியவைகளிலெல்லாம் வியாபிக்கிருன். (திரேதா, நிததே பதம்) மூன்று இடங்களிலும் தன் (பதத்தை) கிரணத்தை ஸ்தாபனஞ்செய்கிருன். இம் மூன்று இடங்களேயுங்குறித்து யாஸ்கராசாரியார் கூறுவதாவது :—வானம், ஆகாசம், பூமி ஆகிய மூன்றிலும் கிரணங்களை வீசி நிற்கிருன். ஔரணிபாவரின் அபிப்பிராயம் யாதெனில் :—சூரியன் உதயமாகும் போது ஒரு பாதமாகின்றது. உச்சியை அடையுங்கால் இரண்டாம் பாதமாகின்றது. அஸ்தமிக்குங்கால் மூன்ரும் பாதமாகின்றது. சூரியன் பூமியின் ஒளியாகவும், தன்னில் தானுகவும் விளங்குகிருன். ஆகாசத்தில் தோன்றும் மின்னலும் அவனுல் வியாபிக்கப் பட்டதே. எங்கும் வியாபித்திருப்பவன் என்பதைக்

குறிக்கவேண்டுமானால் விஷ்ணு எனப் படுகின்றான். மூவுலக வியாபியானால் திரிவிக்கிரமன் எனப்படுகின்றான். இதி லிருந்து பாஸ்கராசாரியருடைய காலத்திலும் வாமன அவ தாரம் கற்பிக்கப்படவில்லையென்றாகிறது.

**अतो देवा अवन्तु नो यतो विष्णुर्विचक्रमे। पृथिव्याः सप्तधामभिः। त्रीणि पादा विचक्रमे विष्णुर्गोपा अदाभ्यः। अतो धर्म्माणि धारयन्। विष्णोः कर्म्माणि पश्यत यतोव्रतानि पस्पशे। इन्द्रस्य युज्यः सखा। तद्विष्णोः परमं पदं सदा पश्यन्ति सूरयः। दिवीव चक्षुराततम्। तद्विप्रासो विपन्यवो जागृवांसः समिन्धते। विष्णोर्यत्परमं पदम्।**

விஷ்ணு, (சூரியன், சப்ததாமாபி :) உலகத்தைத் தாங்கி, போஷிக்கச்செய்யும் ஏழு விதமான கிரணங்களின் வழியாக (யத:—பிருதிவ்யா:) பூமியிலிருந்து, வானம் வரை (விசக்கிரமே) விசேஷ உருவங்களுடன் பரவுகிறார். பூமியி லிருந்து வானத்திற்குள் அடங்கிய கிரகங்களான பிரகஸ் பதி முதலியவைகளும் காப்பாற்றப்படுகின்றன. சூரியனின் ஒளி வீசும் இடங்களெல்லாம் அவன் கிரணங்களினால் காப் பாற்றப்படுகின்றன.

ஆகாசத்தை எப்பொழுதும் பார்க்கின்றோம். அப்படியே கற்றோர்கள் பரமபதத்தை எப்பொழுதும் பார்க்கின்றார்கள். விஷ்ணுவின் பரமபதத்தை எக்காலமும் துதிப்பவர்கள் உல கத்தின் பொய்களிலிருந்து விடுதலை அடைகிறார்கள். விழித் தவர்களான மேதாவிகள் இதை எப்பொழுதும் விளக்குகிறார் கள். சூரிய சூட்சுமத்தை அறிவது அறிவின் சிறந்த குறி

யாகும். பிரும்மத்தை அறிய மெய்யறிவு வேண்டும். கற்றோர்களே! கல்வியும் அறிவும் இல்லாமல் நாடு எந்த நிலையில் இருக்கிறதென்பதை அறியுங்கள். சூரிய கிரஹணம் தோன்றினால் லட்சக்கணக்கான ஜனங்கள் குருக்ஷேத்திரம் முதலிய இடங்களுக்கு ஓடுகின்றார்கள். கிரஹண உண்மையை அறிந்திருந்தால் இப்படிச் செய்யமாட்டார்கள்.

பிரும்மம் எங்கும் வியாபித்துளது என்பது வேத வாக்கு. அவர் எப்படி வியாபித்திருக்கிறார். அவர் உருவம் யாது? அவரை ஏன்பார்க்க இயலவில்லை? வியாபியாயிருந்தால் அவர் யாது செய்கிறார்.

எங்கும் வியாபியாயுள்ள பரமான்மா, பூமி, ஆகாசம் வானமாகிய மூன்று இடங்களிலும் நிலைத்துள்ளார். அருகிலும் வெகு தூரத்திலும் உள்ளார். மூன்று விதமாகவும் உலகத்தில் நிலைத்துள்ளார். ஒவ்வொரு பொருளுக்கும் ஸ்தூலம், திரவம், சூட்சம் என மூன்று உருவங்களுண்டு. பிரதி வஸ்துவிலும், இழுப்பது, இருத்துவது, அசைப்பது என மூன்று சக்திகளுண்டு. சத்துவம் ராஜசம் தமசம் என குணங்களும் மூன்று வகைப்படும். ஒவ்வொரு பதார்த்தத்திலும், பிரகிருதி, ஜீவான்மா, பரமான்மாவின் சேர்க்கையுண்டு. இப்படி முக்குணங்களினாலேயே இவ்வுலகம் ஐக்கியமா யிருக்கின்றது. இக்காரணத்தினாலேயே பதமும் மூன்றாகப் பிரிக்கப்பட்டு நிலை நிறுத்தப்பட் டிருக்கின்றது. பிரும்மம் எங்கும் வியாபகமாயுள்ளது. ஆனால் அவரது உண்மை சுயரூபம் அஞ்ஞான மயமான தூளியால் மறைக்கப் பட்டிருக்கிறது. ஞான சூன்யத்தினாலேயே இது விளங்குகிறதில்லை. திரேதாபதம் என்பதனால் எங்கும் விளங்குகிறார் என்பதே யாகும்.

பதார்த்தத்தின் வலிமைக்கு வட மொழியில் தர்மமெனப் பெயர். அக்கினி தர்மமென்றால் அதன் வலிமையே யாகும். பிரும்மம் எங்கும் இல்லையானால் யாவற்றிலும் வீற்றிருந்து எங்ஙனம் காத்தல் கூடும்?

அவரது ஆக்குதல், அளித்தல், அழித்தல் முதலிய சக்தியைப் பார்க்கவும், ஞானத்தையும், அதன் அவசியத்தையும் அதை ஏன் அருளினர் என்பதையும் அறிந்துகொள்வது அத்தியாவசியமாகும். அவர் கருணாகரர். இந்திரியங்களில் ஞானத்தையஞ் செய்பவரான அவரே, நமது ஆன்மா.

**विष्णोर्नुकं वीर्याणि प्रवोचं यः पार्थिवानि विममे रजांसि ।**
**यो अस्कभायदुत्तरं सदस्थं विचक्रमाणस्त्रेधोरुगायः ।**

ருக். 1, 154.

துரிதமாய் (விஷ்ணு) சூரியனுடைய வலிமையை விளக்குகிறேன். சூரியனின் வீரத்தையும் உரைக்கிறேன். பூமியின் சம்பந்தப்பட்ட அணுக்களை நிர்மாணஞ் செய்பவர். தன்னுடைய இழுக்கும் சக்தியால் பிரகஸ்பதி முதலிய கிரகங்களை அந்தந்த இடத்தில் நிலை நிறுத்துபவர். அச்சூரியன் நெருப்பாகவும், காற்றாகவும், சூரிய வடிவமுள்ளவனாகவும் சுற்றித் திரிகிறான். இப்பரிபூர்ண உலகத்திற்கு அவன் சாதாரணக் காரணமே யாவன். எப்படியெனில் ஜல மன்னியில் அன்ன ஆகார முதலிய பதார்த்தங்கள் இராது. ஆகாரத்திற்குக் காரணம் ஜலமே. காற்றன்னியில் பதார்த்தங்கள் நஷ்ட மடைந்து விடும். ஆகையால் உயிருக்குக் காற்று அவசியம். இவைகளினால் கடவுள் சாதாரண காரணமாகவும், பதார்த்தங்கள் விசேஷ காரணமாகவுமாகின்றன. இவ்வாறே

பூமிக்கு விசேஷ காரணம் சூரியனுவான். சூரியனிலிருந்தே பூமி உண்டாயிற்று. முதன் முதலில் இப்பூமியும் நெருப்பு உருண்டையாயிருந்தது. காலக் கிரமத்தில் குளிர்ச்சி அடைந்தது. இப்பொழுதும் அதன் அகத்தில் நெருப்பு விளங்குகின்றது. சில சமயங்களில் பூமியும் ஜல மயமாகி விடுகின்றது. முன் சமுத்திரமாயிருந்ததை இப்பொழுது பூமியாகவும், பூமியாயிருந்ததைச் சமுத்திரமாகவும் காண்கிறோம். இம்மாறுதல் எப்பொழுதும் நடந்துகொண்டே வருகின்றன. சூரிய காரணத்தினுலேயே காற்று அசைகின்றது; மேகம் தோன்றுகின்றது; மழையும் பெய்கின்றது. காற்று முதலிய காரணத்தால் பூமியின் கண்ணுள்ள உஷ்ணம் குறைந்து புல் பூண்டு ஔஷதிகள் முளைக்கின்றன. இவை யாவற்றிற்கும் காரணம் சூரியனே.

இதனுலேயே பூமியின் அணுக்களுக்கெல்லாம் அவரே காரணமென்று வேதம் ஓதுகிறது. சூரியன் தன் அகத்தினுள்ள ஆகிருஷ்ண சக்தியால் எல்லாப் பதார்த்தங்களையும் அசையச்செய்கிறுன். வட முனையை (ஊர்த்துவம்) பிடித்து இறுத்துகின்றுன். பூமியினின்று வானம்வரை எவ்வடிவத்திலும் சூரியன் விளங்குகிறுன். திரோதாவி சக்கிரமாணன் என்பதை விளக்குவோம். கடவுள் விஷயத்தில் (விஷ்ணே:) சர்வேசுவரனுயும் எங்கும் பரவியுமுள்ள பரமேசுவரனின் வீரியத்தை நான் எப்பொழுதும் புகழ்வேனுக. என் முதிர்ந்த வயதிலும், ஆபத்திலும் என்னுடைய குழந்தைப் பருவத்திலும் அவர் கீர்த்தியையே புகழ்வேனுக. தூலமான பதார்த்தங்களையும் செய்பவராயிருக்கிறுர். கற்றோர்களாலும் அறிஞர்களாலும் புகழத் தகுந்தவராயிருக்கிறுர். மூன்று இடங்களிலும் வியாபகமாக இருந்துகொண்டு பூமியிலிருந்து

வானம்வரை அந்தந்த பதார்த்தங்களை அங்கங்கே நிலை நிறுத்துகிறவருயிருக்கிறார்.

प्रतद्विष्णुःस्तवते वीर्य्येण मृगो न भीमः कुचरो गिरिष्ठाः ।
यस्योरुषु त्रिषु विक्रमणेष्वधिक्षियन्ति भुवनानि विश्वा ।

பசு முதலிய மிருகங்களில் சிங்கம் வலிமையாயும், பலமுள்ளதாயும் இருப்பதுபோல், கிரகங்களுக்கு நடுவில் சூரியன் பலமுள்ளவனாக இருக்கின்றான். (குசர:) பூமி முதலிய இடங்களிலெல்லாஞ் சஞ்சாரம் செய்கிறான். (கிரிஷ்டா:) மலைபோல் உயர்ந்த இடத்தில் இருக்கிறான். இவர் இருக்கும் இடங்கள் தான் பிராணிகள் வாசஞ் செய்வதற்கு யோக்கியதையானவைகள். அவருடைய உஷ்ணம் எங்கும் வியாபிக்கின்றது. அங்கங்கு சிருஷ்டியும் தோன்றியே வருகின்றன. திரிவிக்கிரமனை மனனஞ் செய்வதனால் ஒளியை அடைகின்றோம். மழையை அளிப்பவன்; எங்கும் விஸ்தாரமாயுள்ளவன்; மூன்று உலகத்தையும் மூவ்வடிவாகிய நெருப்பு, காற்று, சூரியனால் அடையக்கூடியவன். இதற்கு ஒருநாளும் அழிவில்லை. அன்ன முதலிய ஆகாராதிகளைக் கொடுத்துப் பிராணிகளை ஆனந்த சமுத்திரத்தில் மூழ்கச் செய்கிறான். சூரியன் தனிமையாகவே பூமியையும் வானத்தையும் அதிலிருக்கும்பிராணிகளையும் மூன்று தாதுக்களுக்கும் சமானமாய் இழுத்துப் பிடித்து நிலை நிறுத்தியிருக்கிறான்.

प्र विष्णवे शूषमेतु मन्म गिरिक्षित उरुगायाय वृष्णे ।
य इदं दीर्घं प्रयतं सदस्थमेको विममे त्रिभिरित्पदेभिः ।

இச் சூரியனுக்குப் பிரியமான அவ்வாகாசத்தை நான் அடையட்டும். எல்லா ஜீவப் பிராணிகளும் அந்த ஆகாசத்

தில் வசிக்கிறார்கள் என்பது பாஸ்கராசாரியரின் உரை. சூரி யனை விரும்புகிறவர்கள் ஆகாசத்தில் ஆனந்தமடைகிறார்கள். உலக முழுவதும் பரவியுள்ள (விஷ்ணோ) சூரியனுடைய பரம பதமானது ஆனந்தத்தை அளிக்க வல்லது.

மழை பொழிவதற்கு இடம் உதவியா யிருக்கின்றது. அவ் இடமே பரமபதம். இச் சூத்திரத்தில் ஆறு மந்திரங் கள் உளது.

**परो मात्रया तन्वा वृधान नते महित्व मन्वश्नुवन्ति ।**
**उभे ते विद्म रजसी पृथिव्या विष्णो देवत्वं परमस्य वित्से ॥**

ருக். 8, 9.

கணக்கில்லாத கிரணவடிவான சரீரத்தால் பெருகும் (விஷ்ணோ) சூரியனே!! உம்முடைய மகிமையை எவராலும் அறிய இயலாது. பூமியினின்று ஆகாசத்தினளவுள்ள இருஉல கத்தையும் நாம் அறிவோம். இதற்குப் புறமாயுள்ள உல கத்தையும் அதன் அகலத்தையும் நீயே அறிவாய். புருஷா ரோபம் என்னும் விதிக்கேற்வ சூரியன் இங்கு ஒரு புரு ஷனைப்போல் விவரிக்கப்பட்டிருக்கிறான்.

"அளிக்கும் வல்லமை வாய்ந்த சூரிய தேவனே! உன் மகிமையை அறியாதவனை ஞான சூனியன் என்றே சொல்ல லாம். உன் மகிமையை ஞானிகள் கோருகிறார்கள். பிரபஞ் சத்தின் கிரகங்களைக் கீழே விழச் செய்யாமல் உன் வலிமை யால் பிடித்திழுத்து நிலைநிறுத்துகிறாய். நீ பூமியைத் தாங்கு கிறாய்.

**इरावती धेनुमती हि भूतं सूयवसिनी मनुषे दशस्या ।**
**व्यस्तभ्ना रोदसी विष्णावेते दाधर्थ पृथिवी मभितोमयूखैः ॥**

நீ, வானம் பூமி இவைகளிலுள்ள மனிதர்களுக்கு அன்ன ஆகாராதிகளை அளிப்பவன். பசுப் பிராணிகளை விருத்தி செய்பவன். அழகுவாய்ந்த பொருள்களைத் தருபவன். எப்பொழுதும் எதையாவது அருள் செய்து கொண்டேயிருப்பவன். உன்னால் ஆகருஷிக்கப்பட்டே இவ்விரு உலகமும் இருக்கின்றன. நீயே அதைப் பிடித்து நிறுத்தி யிருக்கிறாய். பூமியைக் கிரண சக்தியினால் நாலு பக்கமும் பிடித்திழுக்கிறாய். வடமொழியில் மயூகம் என்பதற்குக் கிரணமென்று பொருள். மகீதரர், "மயூக" மொழிக்கு நாலு ஜீவன், (பன்றி) என்கிறார். ஆகர்ஷன சக்தியின் சிறப்பை அறியாதவர்களின் உரை ஏமாற்றத்தையே தரும். இவர்கள் சூரியனுடையவும், பூமியினுடையவும் குணங்களையும் சரியாக அறியவில்லை.

त्रिर्देवः पृथिवी मेष एतां विचक्रमे शतर्चसं महित्वा ।
प्रविष्णुरस्तु तवसस्तवीयान् त्वेषंह्यस्य स्थविरस्यनाम ॥
विचक्रमे पृथिवी मेष एतां क्षेत्राय विष्णुर्मनुषे दशस्यन् ।
ध्रुवासो अस्यकीरयोजनासउरुक्षितिंसुजनिमाचकार ॥

ருக். 7, 100.

இம் மந்திரங்களிலும் வருணிக்கப்பட்ட திரிவிக்கிரமன் சூரியனையே புலனாக்குகின்றது. சாயனாச்சாரியர் முதலியவர்களும் விஷ்ணுவிற்குச் சூரியனென்று விளக்கிய மந்திரங்கள் அடியிற் கண்டவாறு

चतुर्भिः साकं नवतिंच नामभिश्चक्रनवृत्तं व्यतीं रवोविपत् ।
बृहच्छरीरो विमिमान ऋक्वभिर्युवाकुमारः प्रत्येत्याहवम् ॥

ருக். 1, 155, 6.

சூரியனாகிய விஷ்ணு 94, அவயவங்களுடன், தன்னுடைய பிரேரணை சக்தியால், வட்டமான சக்கரத்திற்குச் சமானமாய்சுற்றிக்கொண்டே இருக்கிறான். இரண்டு அயனம், ஐந்துருது, பன்னிரண்டு மாதம், இருபத்து நான்கு அரை மாதம், முப்பது அகோர இரவுகள், எட்டுப் பிரகரங்கள், பன்னிரண்டு லக்கினங்கள், ஆகமொத்தம் அவயவங்கள் 94. எல்லாவற்றையுஞ் சுற்றச் செய்யும் விஷ்ணுவும் துருவமும் சூரியனின் வடிவமேயாகும். சூரியனின் சுற்றுதலே மற்றவைகளுக்கு ஆதாரமாயிருக்கின்றது. இவ்விதமாய்க் காலான்மாவான விஷ்ணுபெருஞ் சரீரங்களாகிற துதிகளால் யாவற்றையும் நிலை நிற்கச் செய்கிறான். யௌவனமாயுள்ள, இவ்விஷ்ணு யாகசாலைக்குவருகிறான். இதுதான் சாயனாச்சாரியரின் விளக்கச் சுருக்கம்.

**त्वां विष्णु बृहन् क्षयो मित्रो गृणाति वरुणः ।**
**त्वां शर्धोमदत्यनुमारुतम् ॥** ருக். 8, 15, 9.

ஓ! இந்திரனே! நீ பெருஞ் சீவியாயிருப்பதால் உன்னை விஷ்ணு, மித்திரன், வருணன் துதி செய்கிறார்கள்.

ஜலத்தை அளிக்கும் மேகமானது எங்களது ஐசுவரியத்தைக் காப்பாற்றவேண்டும். மருத கணங்களும் அந்த ஐசுவரியத்தைக் காப்பாற்ற வேண்டும். அசுவினி தேவர்களும் ரட்சிக்கவேண்டும். இந்திரனும் விஷ்ணுவும் யாவரும் ஐக்கியமடைந்து என்னை இரட்சிக்கவேண்டும். இதுதான் சாயனரின் விளக்கம்.

## 28. யாகமும், விஷ்ணுவும்.

**दिवि विष्णुर्व्यक्रंस्त जागतेन छन्दसा ।**
**तयो निर्भक्तो योऽस्मान् द्वेष्टि यञ्च वयं द्विष्मः ।**
**अन्तरिक्षे विष्णुर्व्यक्रंस्त त्रैष्टुभेन छन्दसा ।**
**पृथिव्यां विष्णुर्व्यक्रंस्त गायत्रेण छन्दसा ।** யஜு. 1, 18.

விஷ்ணு யாக புருஷன் என்றும் மதிக்கப்படுகிறார். யாகம் துர்கந்தத்தைத் துலைத்து ரோகத்தை நாசஞ் செய்யும். புஷ்டியை உண்டுபண்ணும். ஜலத்தைச் சுத்தி செய்யும். அதி சூட்சும அணுக்களாக மாறிக் காற்றின் மூலமாக வெகு தூரத்தை அடைந்து வியாதியின் ஜன்ம காரணங்களை அழிக்கும். இக இன்பமும் பர இன்பமும் இதனால் ஏற்படும்.

யாகம் செய்யவேண்டிய முறையாவது :—ஒரு நாளையில் காலை, மாலை, நடுப்பகல் ஆகிய மூன்று சமயங்களில் செய்யவேண்டுவதவசியமாகும். காலையில் முக்கியமாய் காயத்திரி மந்திரத்தையே படித்தல் வேண்டும். நடுப்பகலில் திருஷ்டுபு சந்தஸையும், மாலையில் ஜகதீ சந்தசையும் சொல்ல வேண்டும். இதுதான் யக்ஞத்தின் சாதாரணநியமம். இது கடவுளின் ஞானத்திற்கும் கர்மத்திற்கும் அனுகூலமானது. தேவர்களும் அசுரர்களும் சண்டையிட்டார்கள். மஹாவிஷ்ணு வாமனவதாரம் எடுத்து தேவர்களுக்கு உதவி பண்ணினார் என்பது சூரியனது தன்மையின் விளக்கமே. ஒளியின் பெயர் தேவன்; இருளின் பெயர் அசுரன்; இது மாலையின் விளக்கம். பூமியில் சூரியன் பிரகாசஞ் செய்கிறான். சந்தியா காலத்தில் அவன் உருவமும் ஒளியும் சிறுக்கிறது. கடைசியில் பிரகாசமும் மறைகின்றது. அதன் காரணமாக

இருள் சூழ ஆரம்பிக்கின்றது. எனவே இருளாகிற அரக்கர்கள் வெற்றி பெறுகிறார்கள். ஒளியாகிற தேவர்கள் துக்கமடைகிறார்கள். காலையில் ஒளியாகிற தேவதைகள் ஒன்றாகச் சேர்ந்துகொண்டு அசுரர்களின் அருகே செல்லுகிறார்கள். ஆனால் தனிமையாகப் போகாமல் விஷ்ணுவுடன் செல்லுகிறார்கள். விஷ்ணுவான காலைச் சூரியன் வாமனனாக இருக்கிறான். காலையில் சூரியனுக்கு முழுத் தோற்றமுமில்லை அல்லவா? சிறிய வடிவைப் பார்த்து விஷ்ணுவிற்குத் தேவையானதை அசுரர்களாகிய இருள் தருகிறார்கள். சிறிய தோற்றமுள்ள சூரியன் இன்னுஞ் சற்று நேரத்திலேயே வளர்ந்து தன்னுடைய கிரணங்களை மூவுலகத்திலும் செலுத்துகிறான். சூரியன் வளர்ந்து, இருளாகிய அசுரர்களை நாசம் செய்கிறான். இது தான் வாமனவதாரம். மாக்ஸ் மூலரும்இப்பொருளையே கூறியிருக்கிறார்.

## 29. அதிதியும் விஷ்ணுவும்.

அதிதியின் கர்ப்பத்திலிருந்தே வாமனன்(விஷ்ணு) உற்பத்தியானார் என்பது புராணம். இதற்கும் காரணம், சூரியனே! அதிதி பதம் ஒரு தனிமையான பதம். வேதத்தில் அதிதி மகன் என்றால் சூரியனையே குறிக்கும். இக் காரணத்தினால்தான் சூரியனுக்கு ஆதித்தியன் என்று பெயர். பாஸ்கராசாரியார் சொல்வ தாவது:—

**आदित्यः कस्मात् आदत्ते रसान्। आदत्ते भास ज्योतिषा मादीप्तो भासेति वा। अदितः पुत्र इति वा।**

(ஆதித்தே-ரசாத) இரசத்தை உறிஞ்சுபவர். (ஆதத்தே பாசம்-ஜ்யோதிஷம்) சூரிய உதயமானவுடன் சந்திரன் நட்

சத்திரம் முதலியவைகள் மெலிந்து விடுகின்றன. ஏனென்றால் சூரியன் அக்காந்தியை எடுத்து விடுகின்றான். இக்காரணத்தாலேதான் அவன் ஆதித்தியனெனப்படுகின்றான்.

**ते हि पुत्रासो अदित प्रजीवसे मर्त्याय**
**ज्योतिर्यच्छन्त्यजस्रम् ।** யஜு. 3, 35.
**अष्टौ पुत्रासो अदितेर्ये जातस्तन्य स्परि ।**
**देवां उप प्रैत्सप्तभिः परा मार्ताण्ड मास्यत् ।** ருக். 10, 73, 8.

அதிதி எட்டு மக்களைப் பெற்றான். அவர்கள் தேவர்களைச் சேர்ந்தார்கள். எட்டாவதைச் சூரியனுக்கு மேல் எறிந்தார்கள்: இங்கும் அதிதியின் மகனாகவே சூரியன் எண்ணப்படுகிறான்.

**द्वे विरूपे चरतः स्वर्थे अन्यान्या वत्समुपधापयेते ।**
**हरिरन्यस्यां भवति स्वधावाञ्छुक्रो अन्यस्यां ददृशे सुवर्चाः ।**
யஜு, 33, 5.

மகீதரரின் விளக்கமாவது:—இரவும் பகலுமான ஸ்திரீகள் எப்பொழுதுமிருக்கிறார்கள். இரவு கருத்தவள். பகல் வெண்மையானவள். அவரவர்களின் குழந்தைகளுக்குப் பால் அளிக்கிறார்கள். இரவு தன் குழந்தையாகிற நெருப்பிற்குப் பாலைக்கொடுக்கிறாள். அதாவது இரவில் அக்னி தேவதைக்கு அக்னி ஹோத்திரஞ் செய்யப்படுகிறது. பகல் தன் மகனாகிய ஆதித்தியனுக்குப் பாலைத் தருகிறாள். பகலில் சூரிய தேவனின் அக்னி ஹோத்திரம் நடைபெறுகின்றது. இதைப் பிறகு விவரிப்போம். இரவில் மஞ்சள் வர்ணமுள்ள அக்னி ஆகாசத்தைப்போல் ஆகிறான். பகலின்

சூரியன் வெண்மையாகவும், அழகுள்ளவனாகும், பார்க்கக் கூடியவனாகவும் இருக்கிறான்.

இரவைச் சூரிய மகனென சாயனர் சொல்லுகிறார். ஏனெனில் சூரியன் கர்ப்பத்திற்கு ச்மானமான இரவினகத்துனுள் மறைந்திருந்து, அதன் முடிவில் ஜன்மத்தை அடைகிறான். அப்படியே பகலின் மகன் அக்னி யாவான். ஏனெனில் அக்னிக்கு ஒளி யிருந்து பகலில் மறைந்து, பகலின் முடிவில் விளங்குகிற படியால் பகலின் பிள்ளை போலாகிறான். திமௌளனுடையவும் (வானம்) அதிதியினுடையவும் மகன் எனச்சூரியனைக் காட்டி யிருக்கிறோம். இதிலிருந்து திமௌளவும், அதிதியும் ஒன்றே என ஆகின்றது. வேதத்தில் அதிதி, திமௌள, அந்தரிட்சம் முதலியவை வானத்தை விளக்குகிறது.

வானத்திற்குச் சூரியன் எங்ஙனம் மகனாகக் கூடும் என வினவலாம்? வான லோகத்தின் ஆபரணம் சூரியன். அதிலுள்ள வேறு கிரகங்களைத் தன் இழக்கும் வலிமையினால் சூரியன் காப்பாற்றுகிறான். இதைப் பாது காப்பவனாகையினால் அவனுக்குத் "திவ" ப்புத்திரனெனப் பெயருண்டு. அதிதிமொழியினால் பகல் என அறியவேண்டும். பகலைப் போஷிப் பவன் சூரியன். பகலின் மகனாக இருந்து கொண்டு எல்லாப் பதார்த்தங்களையுங் காப்பாற்றுகிறான். இதனால் அதிதி என்றால் பகலென அறிய வேண்டும். அறிவில்லாதவர்கள் அதிதியைத் தேவத் தாய் என எண்ணுகிறார்கள். இவ்விதம் எண்ணுவதற்கு வேதா தாரவு கிடையாது.

**अग्नये गायत्राय त्रिवृत्ते राथन्तराय................**
**अदित्यै: विष्णुपत्न्यै चरुरग्नये वैश्वानराय**
**द्वादश कपालोऽनुमत्या अष्टाकपालः ।** யஜு. 59, 60.

இம் மந்திரத்தில் அதிதியை விஷ்ணு மனைவியாக அழைத்திருக்கிறது. பாதுகாக்கும் வலிமையைக் குறிப்பதற்கே வேதத்தில் பத்னி பதம் பிரயோகப் படுத்தப்பட்டிருக்கின்றது.

**होता यक्षत्तिस्रो देवी र्न भेषजं त्रयस्त्रिधातवोऽपसइडा सरस्वतीभारतीमही: । इन्द्रपत्नी हविष्मतीर्व्यन्त्वाज्यस्या होतर्यज ।**

இந்திரனைப் பாதுகாக்கும் வலிமை யுள்ளது ஆதலால் இந்திர பத்தினி எனப் பெயர். விஷ்ணு அதாவது சூரியனைப் பாதுகாக்கும் சக்திக்கே விஷ்ணு பத்தினி எனப்பெயர். பகல் முதலானவைச் சூரியனின் சக்தி யாகையினால் அதற்கு விஷ்ணு பத்தினி யெனவும் பெயர்.

## 30. பலிச் சக்ரவர்த்தி.

விஷ்ணுவுடன் பலி என்னும் பதப்பிரயோகத்தை வேதத்தில் எங்கும் காணுவதற்கில்லை. பலிசானம் என்றால் மேகம். " சான "ம் என்னு முடிவுத் தொடர்பை விட்டு விட்டார்கள் போலும்! மேகத்துடன் இருள் தோன்றுகிறது. இதனால் அதைக்குறிக்கும் பெயராகவே பலியாகின்றது. பலிக்கு "வைரோசன்" எனவும் பெயருண்டு. ஒளியன்னியிலிருப்பவனே வைரோசனன். இதுவே மேகம். இதனுடைய மகன் இருளாவன். இதனால் பலி மொழியானது இருளைக் காட்டுகின்றது. மேகத்திற்குப் பலமென்றும் ஒரு பெயருண்டு. பலனின் மகன் பலியுமாவன். கண்களைச் சரியாக உபயோகிப்பவனுக்குப் பலியெனப் பெயருண்டு.

இருளானது கண்களை விழுங்குகிறபடியால் அதற்குப் பலி யென்று பெயர். இது வடமொழியின் மூல காரணஉரை. அதிதியின் மகனென்று சூரியனைச் சொல்வதுபோல் சூரியனில் கற்பிக்கப்பட்ட விஷ்ணுவையும் அதிதியின் மகனாகக் கருதினார்கள். காலைச் சூரியன் வாமனனெனக் கருதப் படுகிறான். இவையெல்லாம் வைதீக மொழியின் விளக்கங்களே.

**विष्णो रराटमसि । विष्णोः श्नप्त्रेस्थः । विष्णोः स्यूरसि । विष्णोर्ध्रुवोसि वैष्णवमसि । विष्णवे त्वा ।** யஜு. 5, 21.

எங்கும் பிரகாசமாய் இருக்கும் பரமாத்மாவே ! நீ அணுவிலுமுளாய்; அண்டத்திலு முளாய். நீ இல்லாத இடமுண்டோ ! ஒளியும் நீ ; அதைத் தருபவனும் நீ ; விரும்பினால் ஒளியை அகற்றுவாய் ; சர்வ வல்லமை யுள்ளவன் ; ஒளி வீசச் செய்பவனும் நீதான் ; சூரிய ஐக்கியமான ஒளிக்கும் காரணம் நீயே ! பகவானே ! உன்னை நான் பணிகின்றேன் ; என்னை நீ ஆட்கொள்வது உன் கடன், உன்னைத் தவிர எதையும் பூசை செய்யேன், நீயே பரமான்மா.

**अग्नेस्तनूरसिविष्णवे त्वा । सोमस्य तनूरसि विष्णवे त्वा । अतिथेरातिथ्यमसि विष्णवे त्वा । श्येनाय त्वा सोमभृते विष्णवे त्वा । अग्नये त्वा । रायस्पोषदे विष्णवे त्वा ।**

யஜு. 5, 2.

என்னுடைய ஜீவான்மாவே ! அக்கினி வலிமையை உடையவனான பரம புனித புருஷனே ! உனது அருகில் அடையதல் வேண்டும். அழகு அமைந்த ஆகருதி உடையோனே ! இக் காரணத்தால் உன்னை நான் அண்டுகிறேன்.

எல்லாப் பதார்த்தங்களைப் போஷிக்கிறவனும் காற்றுபோல் எங்கும் விளங்குகிறவனும் யாவற்றிற்கும் பிராண வடிவருமான பிரும்மத்தின் பொருட்டு உன்னை நாடுகின்றேன். பிரம்மத்தின் பொருட்டு உன்னை ஏவுகிறேன். அக்னி ஹோத்திர முதலிய வைதீக கர்மங்களுக்கு உன்னையே நியமனஞ் செய்கிறேன். விஷ்ணுவான ஐசுவர்யத்தை அடைய நீயே கதி. எனது அன்புள்ள ஜீவனே! சுப காரியங்களைச் செய்வதற்குத் தயாராகவும் கடவுளின் நிமித்தஞ் செய்யவும் உன்னுடைய பார்வையில் பரமான்மா எப்பொழுதும் விளங்கட்டும். அந்த ஆதாரத்திலேயே செல்லட்டும். அவர் நானு திசைகளிலும் வியாபகமா யுள்ளார். எக் காரியத்திலேயும் அவரைக் கைவிட வேண்டாம். அவரையே சரணமாக அடையவும்.

## 31. ஜலந்தரனும் விஷ்ணுவும்.

இந்திரனுக்கும் உருத்திரனுக்கும் உண்டான பெரும் யுத்தத்தில், இந்திரன் தோற்றுவிட்டான். இதைபறிந்த பிரகஸ்பதி உருத்திரனையடைந்து கோபத்தை அடக்கி இந்திரனை மன்னிக்க வேண்டவே, என் கோபாக்னியை எவ்விதம் அடக்குவேன் என்று சொல்லி அதைச்சமுத்திரத்தில் எறிந்தார். உடனே அது ஒரு சிசுவாக மாறிற்று. அது தான் ஜலந்திரன். விருந்தையைமணந்து தேவர்களிடமிருந்து நாடுகளை யெல்லாம் பிடுங்கிக் கொண்டான். தேவர்கள் தோல்வி அடைந்து பல திசைகளிலும் ஓடலானுர்கள். உருத்திரனும், ஜலந்தரனும் சண்டை செய்வதைப் பார்த்து விஷ்ணு கவலையுடன் யோசிக்கலாயினர். விருந்தையின் கற்பு அழிந்தாலொழிய இவன் அழிக்கப்படமாட்டானென்பதை

அறிந்தார். எனவே ஜலந்திரன் போல் அவளுக்குச் சந்தேகந் தோன்றுவண்ணம் வடிவெடுத்து அவள் கற்பைக் கெடுத்தார். எனவே தான் உருத்திரன் துரிதமாய் ஜலந்திரனை வெல்லமுடிந்தது. இதுதான் கதையின் சுருக்கம். இக்கதையில் ஓர் ஆச்சரிய முளது. விஷ்ணுவின் வஞ்சகத்தை விருந்தை அறிந்தவுடன் அவரிடம் அவள் சொன்னதாவது:—

"அயலான் மனைவியை அபகரித்தவனே! உன்னை வெறுக்கிறேன். நீ மாயாவி! நீ என்னிடம் அனுப்பின இரு தூதர்களும் அரக்கர்களாக மாறி உன் மனைவியையே அபகரிப்பார்கள். அத்துக்கத்திலிருந்து மீறவேண்டி குரங்குகளின் உதவியை நாடுவாய் என்று சொல்லிக்கொண்டே நெருப் பில்விழுந்து மாண்டாள். தடுத்தும் பிரயோசனப் படவில்லை. அக்னிப் பிரவேசத்தினால் சாம்பலாவதைக் கண்ட விஷ்ணுவின் மனம் துடித்து துக்கத்தை யடைந்தது. தேவதைகள் கெஞ்சியும் பயன்படவில்லை. தேவலோகம் விஷ்ணு வில்லாமல் பாழடைகின்ற படியினால் இந்த விபரீதத்திலிருந்து நீர் காப்பாற்றவேண்டுமென்று சிவபிரானைத் துதிக்கவே, அவர் மூலப் பிரகிருதியைப் போற்றுங்கள் என்றார். அது தன் ரூபமான லக்ஷ்மி, சரஸ்வதி பார்வதி இவர்களை அடையும்படி ஆஞ்ஞாபித்தது. அப்படியே, மூவர்களும் மூன்று விதைகளைக்கொடுத்து தேவர்களுக்குச்சொன்னதாவது:—விஷ்ணு எங்கு இருக்கிறாரோ அங்கு இம்மூன்று விதைகளையும் விதைத்து விடவும். இதனால் உங்கள் காரியம் கைகூடும். அம்மாதிரி செய்யவே சரஸ்வதி கொடுத்த விதையிலிருந்து தாத்திரியும், லக்ஷ்மி கொடுத்த விதையிலிருந்து மாலதியும், கௌரி கொடுத்த விதையிலிருந்து துளசியும் முறையே தோன்றின. விருந்தையின் அழகால் மோக

மடைந்த மகா விஷ்ணு பெண் வடிவமான செடிகளைப் பார்த்து சாந்த மடைந்தார்; துளசியும் தாத்தரியும் அவரை அன்புடன் பார்க்கவே அவைகளை இச்சித்தார். மாலதி கோபத்துடன் பார்க்கவே அதை வெறுத்தார்.

பட்சாபாதம் பிடிவாதம் முதலியவைகளின் வயப்பட்ட ஒரு பித்தனால் இது எழுதப்பட்டிருப்பது நாம் சொல்லாமலே விளங்கும். நம் ஸ்திரீகள் இவ்வித கதைகளினால் எவ்வித கற்பைப் பெறுவார்கள்? இம்மாதிரிக் கதைகளினால் எவ்வளவு பாவக்காரியங்கள் நம் தேசத்தில் பரவி விட்டன. இக்கதைக்கு மூலகாரணமும் சூரியனே. நாளடைவில் இது எவ்வளவு பயங்கரமாக மாறிவிட்டதென்பதைக் கவனிக்கவும்.

ஜலந்தரன் என்றால் மேகத்திற்குப் பெயர். ஜலத்தைத் தாங்குபவனாகையால் ஜலந்தரன் என்றாச்சுது. சமுத்திரம் அதிகஉஷ்ணமடைந்தால் மேகமாக மாறுகின்றது. ருத்திரன் என்றால் மின்னலுக்குப் பெயர். மின்னல் அல்லது அக்னி சக்தி சமுத்திரத்தில் அதிகமானால் உஷ்ணம் உற்பத்தியாகின்றது. அப்பொழுது மேகமாகிற ஜலந்திரன் பிறக்கின்றான். இதையே நெருப்பாக எறிந்தார் என்றார்கள்.

மழையில்லாதகாலத்தில்தேவர்கள் தவிக்கிறார்கள். அப்பொழுது ருத்திரனை மின்னல் மேகத்துடன் சண்டையிடத்தலைப்படுகிறான். மேகங்களின் கூட்டத்திற்கே வடமொழியில் விருந்தசமூகமெனப்பெயர். இதைப் பெண்பாலில் விருந்தை யென அழைத்தார்கள். மேகத்தின் மனைவியான விருந்தையின் மேல் சூரியன் பட்டவுடன் ஜலமாக விழுகின்றது. இது தான் விஷ்ணு (சூரியன்) விருந்தைக்குச் செய்த கற்பின் பங்கம். விருந்தையின் அழிவால் ஜலந்தரனும்

மறைகிறான். உண்மையை அறியாததினால் எவ்வளவு பாபத்தோற்றங்கள் தலைப்பட்டு விட்டன?

## 32. சாலிக்கிராமமும் விஷ்ணுவும்.

**नारदउवाच—नारायणश्च भगवान्वीर्याधानचकारह । तुलस्यां केन रूपेण तन्मे व्याख्यातु मर्हसि । श्रीनारायण-उवाच—नारायणश्च भगवान् देवानां साधनेषु च । शंखचूडस्य कवचं गृहीत्वा विष्णुमायया । पुनर्विधाय तद्रूपं जगाम तत्सतीगृहम् । पातिव्रतस्य नाशेन शंखचूडजिघांसया । दन्दाभि-वादयामास तुलसीद्वार-सन्निधौ ।**

விருந்தையின் கதையைப்போல் துளசியின் மகிமையு மாகும். துளசியே விஷ்ணுவைக் கல்லாக மாறும்படி சபித்தாளாம். அது தான் சாலிக்கிராமமாம். சங்க சூடனென ஒரு அசுரன் இருந்தான். அவன் மனைவியே துளசி. இருவரும் விஷ்ணு பக்தி யுள்ளவர்கள். அவள் கற்பினால் சங்க சூடனை ஜெயிப்பதும் கடினமாய் விட்டது. மாயையினால் சங்கசூடனிடமிருந்து விஷ்ணு, அவன் கவசத்தைக் கைப்பற்றினார். பிறகு சங்கசூடன் வடிவுடன் துளசியை அடைந்து, அவள் கற்பை அழித்தார். இதையறிந்த சங்கசூடன் மனைவி, விஷ்ணு கல்லாக மாறவேண்டுமென்று சபிக்கவே அவர் கூறியதாவது:—

"உன் சரீரம் பூமியில் கண்டக நதியாகவும், தலைமயிர் துளசியாகவும் மாறட்டும். துளசியில்லாமல் செய்யப்படும் உன் பூஜையானது பயனற்றதாகட்டும். கல்லான நான் உன்னிலேயே அதாவது, நதியிலேயே எக்காலமும் வசிக்கக்கடவேன்" சாலிக்கிராமத்தைப் பூஜிப்பவர்கள் உன் ஆப்தர்களாவார்கள்.

இதுதான் தேவி பாகவத கதையாகும். சாலிக்கிராமத்தைப் பற்றி இந்நூலிலும் காண்பதற்கில்லை.

பூஜை செய்யும் சாலிக்கிராமமானது முதலில் பாஷாண மென்று கருதப்பட்டது. ஐரோப்பாவிலும் அப்படியே எண்ணியிருந்தார்கள். இப்பொழுது பரீட்சிப்பதில் இது ஒருவிதமான சிப்பி எனத்தெரிய வருகின்றது. இவற்றில் சில பெரியதாயிருக்கும். வண்டியின் சக்கரவடிவைக் கொண் டதாயிருக்கும். இதை ஆங்கிலத்தில் அம்மொனைட் என்பார் கள். அமொனைட்ஸ் என்னும் நூற்றுக் கணக்கான பல மீன் இனங்கள் இருந்தன. வெகு நுண்ணிய வடிவத்தி லிருந்துவண்டிச் சக்கரங்களைப் போல் பெரிதாயு மிருந் தன. பூமி சம்பந்தமான வித்தையை அறிவதற்கு முன்ன மேயே அம்மொனைட்ஸ் ஜனங்களின் புத்தியைக் கவர்ந்தது.

இது வெகு அழகாகவும் சக்கரத்திற்குச் சமமாகவும் இருக்கும். இதன் அழகைப் பார்த்து ஞானமில்லாதவர்கள் பூஜை செய்ய ஆரம்பித்திருக்கலாம். பிறகு எல்லோரும் அதைப் பின்பற்றி யிருக்கலாம். மூர்த்திகள் இருவிதமாய் வேண்டு மென்கிற அவசியமு முண்டாயிற்று. அசையும் மூர்த்தி யொன்று, அசையா மூர்த்தி வேறு. அசையா மூர்த்தி மனித வடிவை உடையது. அசையும் மூர்த்தி சாலிக்கிராமம். சூரியன் வளைவாயிருந்து கொண்டு பிர காசிப்பது போல், சாலிக்கிராமத்திலும் சில பிரகாசிக் கின்றன. அதில் அநேக ரேகைகளைச் சக்கரம்போல் வளைவுள்ளதா யிருப்பதையும் பார்க்கலாம். இதனால் சூரிய னின் அவதாரமெனக் கருதப்பட்டு இதற்குப் பூஜையும் ஏற்பட்டு விட்டது. இதனகத்தில் நுண்ணிய புழு ஒன்று அழகாகவும் பொன் போலவும் தோன்றுகின்றது. இதில்

ஜீவனும் இல்லை. உயிரும் இல்லை. அறியாமையினல் ஏற்படும் பிரமைகளையாகும் இவைகள்.

நம் பரத கண்டத்தில் கண்டகி நதியிலேயே இச்சாலிக் கிராமம் தென்படுகிறது. பகவான் சாபமடைந்துகண்டகி நதியிலும் வசிக்க நேரிட்டதாம்! உலகமோ விஸ்தாரமானது. வேறு இடங்களிலும் சாலிக்கிராமங்கள் கிடைப்பதைப் பார்க்கிறோம். இப்பொழுது அக் கடவுளின் சொல் எங்கு போயிற்று? கண்டகி நதி பாரத தேசத்திலேயே உளது. இவ்வரக்கனுக்கு முன் இந்த கண்டக நதி இல்லையோ? இந்நதி துளசியின் தேகமானல் எல்லாக் காலங்களிலும் ஒன்றாகவே இருக்க வேண்டுமல்லவா? மழைக் காலத்தில் பெருகுவதும், வெயிலில் சிறுகுவதும் கூடாது. இதற்கு ஊகிக்கப்பட்ட காரணமாவது :—சால மரத்திற்குச் சமீபத்திலிருப்பதால் சாலக்கிராமமெனப் பெயர். சாலிக் கிராமம் எனவும் சொல்வதுண்டு. அது ஒரு தானியத்தைக் குறிக்கின்றது. இதில் கடவுள் குணமொன்றும் தோன்றவில்லையே! இது கருத்தில்லாத பதமாகத் தோன்றுகிறதே.

## 33. விஷ்ணு சயனமும் எழுச்சியும்.

ஆடி மாதம் சுக்கில பட்சம் ஏகாதசி யன்று பகவான் திருப்பாற்கடலில் பாம்பின்மேல் தூங்கி விடுகிறார். கார்த்திகை கிருஷ்ணபட்சம் ஏகாதசி யன்று எழுந்து விடுகிறார். அதாவது நான்கு மாதம் தூங்குகிறார். இதற்கு இரு காரணமிருக்கலாம். இந்த நான்கு மாதமும் மழைக் காலமாகும். இக்காலமுழுவதும் விடாமழை பொழியும் நாடுகள் பல உள. மலையாளம், வங்காளம் முதலிய இடங்களில் அதிக மழை

பெய்து ஆபத்து நேர்வதையும் பார்க்கிறோம். ஜனங்கள் ஐயோ என்று அலறிக் கூட்டங் கூடிக் கடவுள் எங்கே யாது செய்கிறார். ஏன் எம்மைக் காப்பாற்றவில்லை? அவர் தூங்குகிறாரா? பிரளயத்தில் இப்படி நதிகள் புரண்டு கிராமங்களை அழித்து நாசமாக்குகின்றதே? யாரைச் சரண மடைவோம்? என்று அலறிக் கத்தும் ஜனங்களைப் புரோகிதர்கள் திருப்தி செய்யும் பொருட்டு பகவான் உண்மையாகவே உறங்குகிறார். அவர் கார்த்திகையில் எழுந்திருப்பார் என்று சமாதானங் கூறி இருக்கலாம். ஞான மில்லாதவர்கள் அதை உண்மையென நம்பி ஆசாரியர் நம்மைக் காப்பாற்றினார் என்ற சந்தோஷ ஆரவாரமும் செய்திருக்கலாம். பிறகு அந்த உற்சவத்தை ஆரம்பித்திருக்கலாம்.

மற்றொரு காரணம் சூரிய தேவனெனவும் விளங்குகிறது. வருட முழுவதும் சிரமத்துடன் வேலை செய்கிறான். அவனது மகா சக்தியினால் மேகம் ஒரு இமைப் பொழுது சாந்தியையும் அடைகிறதில்லை. மழைக் காலத்தில் சூரிய ஒளியையும் மேகம் மறைத்து விடுகின்றது. ஞானமில்லாதவர்கள் சூரியன் தூங்குகிறான் என்கிறார்கள். கார்த்திகையில் மறுபடியும் சூரியன்தோன்றும்பொழுது எழுந்துவிட்டானென்று யாவரும் கூறுகிறார்கள். விஷ்ணுவைக் கற்பனை செய்தவர் இக் குணங்களையும் கையாண்டார்கள். இதுதான் விஷ்ணுவின் நித்திரையிலும் எழுச்சியிலும் உள்ள ரகசியம்!

# மூன்றாவது அத்தியாயம்

## 1. உருத்திர விளக்கம்.

ஜலத் துளிகள் ஒன்று சேர மேக மாகிறது. துளிகளாயிருக்கும் பொழுது நமக்கு அதன் வலிமை வெளியாகிறதில்லை. அவை ஒன்று சேர்ந்து மேகங்களாக மாறினவுடன் அதன் சக்தி புலப்படுகிறது. அம்மேக வருஷத்தினாலேயேபுல்பூண்டு முதலானவைகள் முளைத்துச் செழித்தோங்கி வளர்கின்றன. ஜீவராசிகள் உயிர் வாழ்கின்றன. மேகத்தி னின்று இடியுண்டாகிறது. இடிக்கு இயற்கையான குணம் எரிக்கும் சக்தியாகும். இதற்கும் சாதாரண நெருப்பிற்கும் பற்பல வித்தியாசங்களுண்டு. ஒரே காலத்தில் பொருள்களை அழிக்கும் சக்தி இடிக்கு உண்டு நெருப்பிற்கோ வெகு நேரம் ஆகும். இடியின் தீ தோன்றின மாத்திரத்திலேயே மறையும்; நெருப்பின் தீயோ நின்று எரியும்; இடியின் தீ காற்று வேகத்துடன் ஓடிப் பரவும்; நெருப்பின் தீயோ பொதுவாகப் பரவும்; இடியின் தீக்குள்ள கர்ச்சனை சாதாரண நெருப்புக்குக் கிடையாது. மேக கர்ச்சனையை வச்சிரன் என்பார்கள். இதற்குக் குலிசன், பிறூரன், பவிதெகோடி, சுவரன், சம்யன் தம்போலினி, அசனி என்கிற பெயர்களும் உண்டு. வச்சிர மொழி ஆண்பால். ஆதலால் இது ஆண் தேவனே யாகும். மேக கர்ச்சனை யாகிற புலம்பலானது பூமியின் பிராணிகளுடன் சேரும் பொழுது அவைகளையும் அழச்செய்கிறது. ஆகையினால் இதற்கு உருத்திரன் என்ற பெயருண்டு. தன்னுள் இச்சக்தியை அடக்கிக் கொண்டிருக்கும் மேக

வடிவமானது ஹிமாசலத்தைப் போல் காணப்படுகிறது. ஆகையினாலே பர்வதத்திற்கும் மேகத்திற்கும் வைதிக மொழியில் ஒரே வார்த்தை தான் உண்டு. எனவே மேகத்தையும் மலையையும் சமமாகவே கருதுகிறார்கள். மேகத்திலிருந்து வெளியாகும் மின்னலே பார்வதி யாவாள். உருத்திரனுக்குப் பார்வதி மனைவியாவதே போல் மேகத்திற்கு மின்னல் மனைவியாகும். மேகம் வர்ஷிக்கிறது. எனவே இதை விருஷபம் (வர்ஷம்-மழை) என்கிறார்கள். உருத்திரனின் (வச்சிரம்) வாகனம் விருஷபமே (மேகமே) யாகும். மேகத்தில் வீற்றிருப்பவன் உருத்திரன். எல்லாம் பக்கங்களிலும் வீசும் மின்னலே மேகத்தின் கேசம் அல்லது சடையாகும். எனவே வச்சிரதேவன், சடா மகுடன், கேசி என்ற பெயர்கள் சிவனுக்குவந்தன. பூமியில் விழும் மின்னல்மேகத்தின் பாணமாகும். பாணத்தைப் போல் இருந்து விழுவதினால் இதற்குப் பினாக மென்று பெயருண்டு. உருத்திரனின் கையிலிருப்பதும் பினாகமே யாகும். இப்பினாகத்தின் உதவியினாலேயே யாவற்றையும் எரித்துச் சாம்ப ராக்குகிறான். ஆதலால் இவன் அடையாளமும் சாம்பலே யாகும். மேகத்தினுள் ஜலம் நிறைந்திருக்கிற படியினால் அதற்குக்கங்காதரன் என்ற பெயரும் உண்டு. யானைத்தோலை ஒத்த வஸ்திரத்தைப் போல் காணப்படுவதினால் கஜசர்மனென்ற பெயருமுண்டு. மேகத்தின் முடியில் சூரியோதயம் காணப்படுகிறதால் சந்திரனை மகுடத்தில் தரித்திருக்கிறான் என்கிறோம். ஜலமில்லாது இவன் இருப்பதும் இயலாது. ஜலத்திற்கு அகி எனப் பெயர். ஆதலால் அகியே இவன் ஆபரணம். அகி என்றும் பாம்பிற்கும் பெயர். பாம்பே இவன் ஆபரணம். இடியினால் சகல உலகத்தையும் பிரகாசிக்கச் செய்யும் இவனே

மகாதேவன். பயமான வடிவங்களை எடுத்துக்கொண்டு பதார்த்தங்களை நாசஞ் செய்கிறான். எனவே அழிப்பவனும் இவனே. இவனே ஜலத்தையும் பொழிபவன். ஜலத்தினாலேயே செடி, கொடிகளெல்லாம் போஷிக்கப்படுகின்றன. பசு முதலிய பிராணிகள் புல் பூண்டுகளினால் புஷ்டியை அடைகிற படியால் இவனுக்குப் பசுபதி யெனவும் பெயர். மேகம் கருமையாகவும் வெண்மை யாகவும், நீலமாகவும் தோன்றுகின்றன. இதுதான் வச்சிர தேவதையின் ஆபாரணமாகும். நீலக்கிரீவனும், சிதி கண்டனும் அவனே. மின்னல் தேவனின் சக்தி யெல்லாம் உருத்திரனிடத்தில் அடக்கமாயிருக்கின்றன. பற்பல குணங்களை நாம் மேகமாகிற உருத்திரனிடம் காண்கிறோம். அவையாவன:—

வாகனம் நந்தியாம், சடையில் கங்கையாம், தலையில் சந்திரனும், தேகத்தில் பாம்பு தோல் ஆடையுமாம்; மூன்று கண்கள், ஐந்து முகங்கள் உடையவனும்; வில்வபத்திரம், திரிசூலம், உருத்திராட்சம் உடையவனும்; மலையே இவன் வசிக்கு மிடமாம்; எப்பொழுதும் பார்வதியுடன் இருப்பவனும். இவைகளை ஆராய்வோம்:—பசுபதி, சிவன், சூலி, மகேசுவரன். ஈசுவரன், சிவன், நிசானன், சஞ்சரன், சந்திரசேகரன் முதலியவைகள் உருத்திரனின் பெயரே யாகும். வேதத்தில் உருத்திர மொழியே அதிகமாகக் காணப்படுகின்றன. புராணங்களினாலேயே இப் புதிய பெயர்கள் உபயோகிக்கப்பட்டிருக்கின்றன.

## 2. அக்னி மொழியும் உருத்திர சப்தமும்.

சராபோதன் என்னும் பதத்தைக் குறித்துச் சொல்லுமிடத்தில் அக்னியும் உருத்திரன் என்று பாஸ்

கரர் சொல்லுகிறார். துர்க்காசாரியாரின் விளக்கமாவது "ஓ பகவானே! எந்த அக்னியைப் பற்றித் துதி செய்கிறேனே அதை நீ அறிவாய். அக்னிதேவனே! யாகம் செய்யும் அம்மனிதர்களின் பொருட்டு நீ உசிதமென நினைத்ததை யெல்லாம் செய். உன்னைத் துதி செய்யட்டும்." இங்கு உருத்திர மொழியானது அக்னியின் குணத்தைக் காண்பிக்கின்றது. சாயனரின் விளக்கத்தைக் கவனிப்போம். உருத்திர பதத்துக்குக் கொடிய நெருப்பு என்று விளக்குகிறார். "துஷ்டனை தண்டிப்பவர் அவர். துதியால் அறியக் கூடியவரும் ஒளி வடிவுமான கடவுள். சகல மனிதர்கள் செய்வதையும் அறிகிறார். நீ தான் உயர்ந்த தோத்திரத்திற்கு அருகன்."

**अग्निं सुम्नाय दधिरे पुरोजना वाजश्रवसमिह वृक्तबर्हिषः ।**
**यतस्रुचः सुरुचं विश्वदेव्यं रुद्रं यज्ञानां साधदिष्टिमपसाम् ॥**

ருக். 3, 2, 5.

விரித்த புல்லாசனத்தில் உட்கார்ந்து கையில் சமித்து உள் ருத்விக் ஜனங்கள் சுகத்தின் பொருட்டு அக்னியை முன்வைத்து ஹோமஞ் செய்கிறார்கள். ஒவ்வொரு பொருளுக்கும் அசையும் வலிமையைத் தருபவர். சுகத்தை அருள்பவர். (ருத்திரம்) சீதளம் இருட்டு முதலியவற்றால் உண்டாகும் துக்கத்தை நாசஞ் செய்பவர். யஜமானர் இஷ்டமுள்ளதைத் தரும் அவ்வக்னியை முன்வைத்து ஓமஞ் செய்கிறார்கள். இங்கு உருத்திரனுக்கு அக்னியென்றே உரைக்கப்பட்டிருக்கிறது. அதாவது சீதளாதி துக்கங்களை அழிப்பவர்.

या ते विद्युदवसृष्टा दिवस्परि क्ष्मया चरति परि सा वृणक्तु नः ।
सहस्रं ते स्वपिवात भेषजा मा नस्तोकेषु तनयेषु रीरिषः ॥

ருக். 7, 46, 3.

### 3. உருத்திரனும் மின்னலும்.

आ वो राजानमध्वरस्य रुद्रं होतारं सत्ययजं रोदस्योः ।
अग्निं पुरा तनयित्नोरचित्ताद्धिरण्यरूपमवसे कृणुध्वम् ॥

ருக். 4, 3, 1.

"உருத்திரனே! மின்னல் தோன்றி அதற்குப் பிறகு உண்டாகும் இடி எங்கள்மேல் விழாமல் செய்யவும்; எங்களைத் துன்புறுத்த வேண்டாம். தூங்கும் பிராணிகளை எழுப்பும் ஒருத்திரனே! எங்கள் மக்களின் சரீரத்தை நாசஞ்செய்யாதே." எனவே, இது மின்னலில் ஆரோபணஞ் செய்யப்பட்ட உருத்திர தேவதையேயாகும். எந்த மின்சார சக்தி பூமியில் விழுந்து துக்கத்தை உண்டு பண்ணுகிறதோ அதற்கே உருத்திரன் என்று பெயர். மின்னலே அதன் அம்பாகும்.

### 4. உருத்திரனின் உற்பத்தியும் அதன் காரணமும்.

பிரும்மா ஒரு சமயம், சனகர், சநந்தனர், சனாதனர், சனத்குமாரரிடம் நீங்கள் பிரஜைகளை விருத்திசெய்யவும் என்றார். சனகாதிகள் இதை விரும்பவில்லை. அடங்காத அவர்களைக்கண்டு பிரும்மா கோபமடைந்தார். அவரே அடக்கிப் பார்த்தும் அடங்க முடியாமல் போய்விட்டது. அப்பொழுது அவர் புருவ நடுவிலிருந்து நீலலோகித குமாரன் தோன்றினான். உடனே அவன் எனக்குப் பெயரும் இடமும் வேண்டுமென்று அழத்தொடங்கினான். பிரும்மா

அவனுக்குத் தைரியஞ் சொல்லி அவன் கேட்டதைத் தருவதாய் சொன்னார்.

यदरोदीः सुरश्रेष्ठ सोद्वेगं इव पालकः । ततस्त्वामभिधास्यन्ति नाम्ना रुद्र इति प्रजाः । हृदिन्द्रियाण्यसुर्व्योम वायुरग्निर्जलमही । सूर्य्यश्चन्द्रपश्चैव स्थानान्यग्रे कृतानि मे ।

நீ பிறந்த உடனே அழ ஆரம்பித்ததினால் உன்னை யாவரும்உருத்திரனென்பார்கள். இதயம், இந்திரியம், பிராணன், ஆகாசம், காற்று, ஜலம், பூமி, சூரியன், சந்திரன், உஷ்ணம் முதலியவைகள் யாவும் உன் இருப்பிடமாயிருக்கும். இலை, அம்பிகை, முதலியவர்கள் உன் ஸ்திரீயாவார்கள்.

விஷ்ணுபுராணப் பிரகாரம் கல்ப முதலில் தன்னைப் போல் ஒரு மகன் வேண்டுமென நினைக்கவும் அப்படியே நீலோகிதன் என ஒரு பாலகனை பிரும்மா அடைந்தார். பிறக்கும் பொழுதே அவன் அழுவதைப் பார்த்து ஏன் புலம்புகிறாய் எனவே எனக்கு ஒரு பெயரை முதலில் சம்ஸ்காரஞ் செய்யுங்கள் என்றான். தைரியமா யிரு ; உன் பெயர் உருத்திரனென்று பதில் அளித்தார். பவன், சர்வன், மகேசன், பசுபதி, பீமன், உக்கிரன், மகா தேவன் என்னும் ஏழு பெயர்களையும் பிறகு அளித்தார். இப்பெயர்கள் இடியின் உற்பத்தியை விளக்குகிறது.

காற்று அதிகரிப்பதினால் மேகங்கள் ஒன்றோடொன்று மோதிப்பெருங் கர்ச்சனை செய்கின்றன. கோபமுள்ள மின்னல் இங்குமங்கும் மின்னுகின்றன. காற்றின் வேகத்தினால் மழை பொழிய ஆரம்பிக்கிறது. புலம்பும் வச்சிரதேவன், உலகத்தை, அழச்செய்யும் மேகங்களோடு,

வெகு வேகமாய்ச் செல்லுகின்ருன். அப்பொழுது சிவப்பு நிறமாகின்றது. நீலமயமான மேகங்கள், நாலா பக்கமும் பாய்கின்றது. இந் நிறத்துடன் விளங்குவது தான் நீலலோகிதன் எனப் படுகின்றது. புலம்புவதும் புலம்பச் செய்வதும் வச்சிர தேவனுகையால் இவனுக்கே உருத்திரன் என்று பெயர். விஷ்ணு புராணத்தில்விளக்கிய வண்ணம் புலம்பிக்கொண்டே ஓடுகிறவனுக்கு உருத்திரன் என்று பெயர்.

## 5. உருத்திரனின் உற்பத்தியும் சதபத பிராம்மணமும்.

யஜுர்வேத சதபத பிராம்மணத்தில் உருத்திரன் உற்பத்தி விளக்கப்பட்டுள்ளது. அக்னியின் வலிமையை இது விளக்கும். இவ்வுலகிற்கு முக்கியமான காரணம் சூரியனென்று சொல்வார்கள். சூரியாக்நியிலிருந்து இப்பூமி உண்டான பல !லட்சம் வருடங்களுக்குப் பிறகு ஜீவ ஜந்துக்கள் வசிப்பதற்கு யோக்கிதை யுள்ளதாயிருக்கிறது. பிறகு நாளடைவில் உண்டான எல்லாப் பதார்த்தங்களும் அதனதன் வலிமைக்குத் தகுந்த வண்ணம் சூரியனிடமிருந்து உஷ்ணத்தை கிரகிக்கலாயின. அவ்வுஷ்ணத்திலிருந்து ஒருவன் உற்பத்தியானுன். அவன் உடனே புலம்ப ஆரம்பித்தான். உண்மையில் உஷ்ணத்தை அடையும் எப்பதார்த்தமும் சிறிய ஓசையை உண்டுபண்ணும். இவ்வோசையே புலம்பல் எனப்படுகின்றது. சில முக்கியமான பதங்களை எடுத்து விளக்குவோம். பிரசாபதி புலம்பும் குமாரனைப் பார்த்து ஏன் புலம்புகிருய் என்று கேட்க, அவன் எனக்குப் பெயரைக்கொடு என்ருன். நீ உருத்திரனுவாய் என்ருர். தன் தந்தையைப்பார்த்து வேறு பெயர்களும் வேண்டும் என்ருன். நீ தான் சர்வம் என்

ருர். மறுபடியும் வேறு பெயர் வேண்டு மென்ருன். பசுபதி என்ற பெயரை அளித்தார். பசுபதி என்ருல் ஔஷதம் முதலியவைகளை விருத்தி செய்பவன் என்று பொருள் படும். அதாவது பிராணிகளைக் காப்பாற்றுப வன். சிறுவன் திருப்தி யடையாது வேறு பல பெயர்க ளும் தனக்குவேண்டு மென்ருன். பிறகு உக்கிரன் என்ற பெயர் அளிக்கப்பட்டது. காற்று வேகமாய்ச் சென்ருல் உக்கிரம் என்ருர்கள். ஆனல் காற்றை விட உக்கிரத்தை அதி கங் கொண்டமையால் வேறு பெயர் வேண்டுமென்று கேட்க அசனி என்ற பெயர் அளிக்கப்பட்டது. அது மின்னலின் சூசனையாகும். மின்னலுக்கே அசனி என்று பெயர். பிறகு பவன் என்னும் பெயர் அளிக்கப்பட்டது. அது மேகத் தைக் குறிக்கும். பின்னும் மகாதேவன் என்னும் பெயர் அளிக்கப்பட்டது. அது சந்திரனைக் குறிப்பதாகும். பின் னர் 'ஈசன்' என்று பிரசாபதி அவனுக்குப் பெயர் கொடுத் தார். இப்பெயர் சூரிய வியாபகத்தைக் காண்பிக்கின்றது. சூரியனே ஈசன். இரு உலகத்தையும் ஆளுகின்றவன். இந்த எட்டுப் பெயருடன் குமாரன் திருப்தியடைந்தான். இவ் வெட்டும் அக்னியின் பெயர்களேயாகும். ஒன்பதாவதாகக் குமாரன் என்று பெயரையும் பெற்ருன். இவ்வுருவைப் பார்ப் பதரிது. சதபத பிராமணத்தில் இது ஒரு அகண்ட அக்கினி சக்தியெனச் சூசனைசெய்யப்பட்டிருக்கிறது. அவ்வக்னியா னது பூமியிலிருந்து சூரியன் வரை வியாபகமாயிருக்கிறது. பூமி, ஆகாசம், வானம் இம் மூன்றிலும் அக்னி உளது. 'ஈசா னன் என்று சொன்னவுடன் நான் இவ்வளவு தானு என்ருன். சூரியனென்றவுடன் குமாரன் திருப்தியை அடைந்தான். இச் சம்பாஷணை அக்னியின் விளக்கமென்றே விளங்குகின்

றது. ஏனெனில் சூரியனை விட வலிமை யுள்ளது வேறு எதுவுமில்லை. உருத்திரனிலிருந்து ஈசானியன்வரையில் அது பூர்ணமடைந்து விடுகின்றது. அக்னி பூமியில் மாத்திரம் இல்லாததினால் தான் அது நான் இதைவிட அதிகம் என்றது. மேகத்தைக் குறிக்கும் பெயரான பவனத்தைச் சொன்னபொழுது நான் இதைவிட அதிகம் என்றது. மேகத்தைவிட அக்னி உயரவும் இருப்பதால் அதைவிடநான் அதிகம் என்றது. அமர கோசத்தில் மகாதேவனுக்கு உருத்திரன், சர்வன், பசுபதி, உக்கிரன், அசனி என்னும் நாமம் அளிக்கப்பட்டுளது. இவைகளைப் பிறகு விளக்குவோம்.

## 6. உருத்திர மொழியின் மூலம்.

रुद्रो रौतातिसतो रोरूयमणो द्रवतीति वा रोदयते र्वा ।
यदरूदत् तद्रुद्रस्य रुद्रत्वामिति काठकम् ॥
यदरोदीत् तद्रुद्रस्य रुद्रत्वमिति हारिद्रविकम् । நிருக்தம் 4, 8.

பிருஹ ஊத் தேவதையிலும் மின்னலையே உருத்திரன் எனப் படுகிறது. ஆகாசத்தில் புலம்பும் மின்னல் தேவன், மழையின் நிமித்தமே கதறுகிறான். இதனாலேயே இதற்கு உருத்திரன் என்று பெயர். யாஸ்கராசாரியார் கூறும் வண்ணம் ரு, த்ரு, ரோத என்னும் பதங்களிலிருந்தே உருத்திர சப்தம் சித்திக்கிறது.

## 7. உருத்திரன் வசிக்கும் இடம்.

விஷ்ணுவிற்குப் பாற்கடல் எப்படியோ அப்படியே சிவனுக்குக் கைலாச மலையாம். அவனுக்குக் கிரிசன், பார்வதாசயி

என்னும் பெயர்கள் உண்டு. மலே ஏன் சிவனுக்கு வாசஸ்தானமாயிருத்தல் வேண்டும்.இரு விளக்க முள்ள மொழியே இதற்குங் காரணம். பர்வதம் கிரி, அத்திரி, கிராவன் முதலிய பதங்கள் வேதத்தில் மேகத்திற்கும், மலேக்கும் வருகின்றன. ஆனல் இப்பொழுது மேகத்தைக் குறிக்க ஒருபொழுதும் பர்வத முதலிய மொழிகள் வருகின்றதில்லே. உருத்திரன் அதாவது வச்சிரன் அல்லது மின்னலான அந்த "கிரி" யானவன் மேகத்தில் இருப்பதை நாம் பிரத்தியட்சமாய்ப் பார்க்கிறோம்.

வைதிக வார்த்தைகள் அடங்கியதுதான் நிகண்டாகும். இதிலிருந்து அத்திரி, கிராவன், கோத்திரன், அசியன், பர்வதம், கிரி முதலியவைகள் மேகத்தின் பெயர் என்று அறிகிறோம். இக்காலத்தில் அதை மலே ஒன்றுக்கே உபயோகஞ் செய்கின்றோம். ஏனெனில் அமரகோசம் கூறுவதேபோல் மலேக்குக் கீழ்கண்ட 13 பெயர்களுண்டு.மகீதரன் சிகரி, க்ஷமாபூதன், அகார்யன், தரன், பர்வதம், அத்திரி, கோத்திரம், கிரி, கிராவன், அசலன், சைலன், சிலோச்சயன், ஆகமலேக்குப் 13 பெயர்கள்.

## 8. உருத்திரனும் விருஷப வாகனமும்.

மகா தேவனுக்கு மாட்டு வாகனம் ஏற்படுவதற்குக் காரணமும் மின்னல் தேவனேயாகும். விருஷபம், விருஷன் இவ்விரண்டும் மாட்டையும் மேகத்தையுங் குறிக்கும். விருஷன், வர்ஷணன், விருஷ்டி, வர்ஷை, விருஷபன், வர்ஷிதா முதலியவை ஒரு பொருளேக் கொண்ட மூலத்தையே உடையது. ஜலத்தைப் பொழிகிற படியால் விருஷம் என்றுச்சது. விருஷ என்னும் மூலத்தில் "க," பிரத்தியயம்

அடைந்து இச்சப்தம் விளங்குகின்றது. பாஸ்கராசாரியரும் இதையே தான் கூறியிருக்கிறார்.

वृषभः प्रजां वर्षतीति वातिवृहाति रेत इति वा ।
तद वृषकर्म्मा वर्षणाद वृषभः । तस्यैषा भवति ॥

விருஷபம் மழையைக்குறிக்கும். உருத்திரன் அல்லது வச்சிரனின் வாகனம் மாடு அல்லது மழையாகும். வச்சிர ஸ்தானத்தில் மகாதேவனைக் கற்பனை செய்யப்பட்டவுடன் மாடும் மழை ஸ்தானத்தில் கற்பிக்கப்பட்டது.

9. வாகனமும் துவஜமும்.

விஷ்ணுவிற்குக் கருடவாகனமும் கொடியும் எப்படியோ அப்படியே உருத்திரனுக்கு விருஷப வாகனமும், விருஷபக் கொடியுமாம். துவஜ மென்றால் அடையாள மென்பது பொருள். வச்சிரன் அல்லது மின்னலின் அடையாளம் மேகமேயாகும்.

अच्छा वद तवसं गीर्भि राभिः स्तुहि पर्जन्यं नमसा विवास ।
कनिक्रदद् वृषभोजीरदानू रेतो दधात्योषधीषु गर्भम् ॥

ருக். 5, 83, 1.

तिस्रो वाचः प्रवद ज्योतिरग्रा या एतद्दुहे मधुदोघमूधः ।
स वत्सं कृण्वन् गर्भमोषधीनां सद्योजातो वृषभो रोरवीति ॥
स रेतोधा वृषभः शश्वतीनां तस्मिन्नात्मा जगतस्तस्थुषश्च ।
तन्म ऋतं पातु शत शारदाय यूयं पात स्वस्तिभिः सदा नः ॥

7

## 10. உருத்திரனும் கங்கையும்.

உருத்திரனின் சடையில் கங்கையாம். வச்சிரதேவனை மின்னல் ஜலத்தால் நிறைந்துள்ளான். மின்னலிலிருந்து விழுகிற ஜலம் கங்கையாகின்றது. மேகத்துடன் கூடிய மின்னலிலிருக்கும்பொழுதெல்லாம் ஜலமும் பொழிகின்றது. ஆகையினுல் உருத்திரனுடன் எப்பொழுதும் கங்கை யிருப்பதாகச் சொல்வதுண்டு.

சகர வம்சத்தினர்களைக் கபிலருடைய சாபத்திலிருந்து மீட்கவேண்டி பகீரதன் யாசிக்கவே, கங்கை பரமசிவனுடைய சடைமுடியிலிருந்து இறங்கியது என்பது புராணம். அம்பரம், சகரம், சமுத்திரம் முதலிய பதினுறும் நிகண்டு கூறுவதுபோல் ஆகாசத்தின் பெயர்களாகும். சகரனுன ஆகாசத்திற்கு முக்கியமான புதல்வன் மேகமேயாம். பர்ஜன்யனுக்கு (மேகத்திற்கு) திவஸ் புத்திரன் என்கிற பெயருண்டு. சாயனர் இதை ஆகாயப் புத்திரன் என்கிருர். கபில என்பது அக்னியைக் குறிக்கும். இதனுலேயே கபிலாசாரியாரை அக்னி அவதாரமென்று எண்ணுகிறோம். அக்னி வலிமையானது (மழைக்கால இறுதியில்) சகரமக்கட்களாகிற மேகங்களை உலர்த்தி விடுகிறது. இது தான் கபிலரால் சாம்பலாக மாற்றப்பட்ட மக்களாகும். சகரன் (ஆகாசம்) கவலையை அடைகிருன் என்று எண்ணுவோம். கிரீஷ்மருது கழிந்தவுடன் மழைக்காலம் தோன்றுகிறது. இதுவே பகீரதனின் ஜன்மம். பகன் என்ருல் சூரியனுக்குப் பெயர். இரமணியமானப் பொருளுக்கு இரதமெனப் பெயர். பூமிக்கு இரமணீயமான பொருள் மழையேயாகும். விஷ்ணுவிற்கே சூரியனெனப்பெயர் என்று முன்பே சொல்லியுள்ளோம். விஷ்ணுவின் சரணமாகிற கிரணத்தின் உஷ்

ணத்தால் பூமியிலிருந்து ஜலம் துளிகளாக எழுந்து கிளம்பி விடுகின்றது. அவை ஆகாசத்தில் ஜல சமுகமாய்ச்சேர்த்து விடுகின்றது. அதாவது உருத்திர தேவனின் ஜடையில் ஐக்கியமாகி விடுகின்றது. இதுவே விஷ்ணு பதத்திலிருந்து (பாதம்) கிளம்புவதெனச் சொல்லப்படுகின்றது. பர்வதத்தில் (மேகத்தில்) வீற்றிருக்கும் உருத்திரனின் (மின்னல்) சக்தி ஜடையில் பரவுகின்றது. பிறகு இம்மேகத்தினின்று மழை பொழிந்து பிராணிகளைச் சுகம் பெறச்செய்கின்றது.. பிறகு இச்சலமெல்லாம் சமுத்திரத்தையே சேருகின்றது.

## 11. உருத்திரனும் ஆபரணமும்.

மகாதேவன் எப்பொழுதும் விபூதியோடு விளங்குகிறார். ஒவ்வொரு பொருளையும் எரித்துச்சாம்பலாக்குவதே அக்னியின் குணமாகும். அக்னி வலிமையைக் குறிக்க விக்கிரகஞ் செய்யப்பட்ட பொழுது சாம்பலை அடையாளமாக வைத்ததும் இயல்பே. இதனால் மகாதேவனின் உருவைச் சாம்பல் மயமாக ஆக்கினார்கள்.

## 12. உருத்திரனும் பாம்பும்.

பாம்பிற்கு அகி என்னும் பெயருண்டு. அகி என்றால் பாம்பையும் ஜலத்தையும் குறிக்கும். நிகண்டில் ஜலத்திற்குக் காணப்படும் 101 பெயர்களில் சிலவற்றை ஆராய்வோம்:— விஷம், அகி, சவம், பூதன், இந்திரன், சம்பரன் முதலியவையாகும். இப்பொழுது விஷமென்றால் நஞ்சையும், அகி என்றால் பாம்பையும், சவம் என்றால் சவத்தையும், இந்து என்றால் சந்திரனையும், சம்பரன் என்றால் அசுரனையும் முறையே குறிக்கின்றன.

அகி என்றால் ஜலத்தைக் குறிக்கும். மேகத்திலுள்ள வச்சிர தேவனின் ஆபரணம் அகியேயாம். வச்சிர தேவனில் கற்பிக்கப்பட்ட அகி, சிவனின் ஆபரணமாக மாறிற்று.

## 13. உருத்திரனும் தோலாடையும்.

திகம்பரனான உருத்திரன் புலித்தோல் அல்லது யானைத் தோல் அணிந்தவனாக எண்ணப் படுகிறான். இதற்குக் காரணம் மேகத்தினுள் வீற்றிருக்கும் அக்கினியேயாகும். மழைக்காலத்தில் ஆகாயத்தைக் கவனித்தால் சிலசமயங்களில் மேகங்கள் புலித்தோலைப் போலவும் யானை உடலைப் போலவும் தோன்றும். அம்மேகமே அதில் வீற்றிருக்கும் தேவனின் ஆடை போல் தென்படுகிறது. மேகத்தைத் தேவதையாகக் கற்பிக்கப் பட்டவுடன் அதில் புலப்படும், யானைத்தோல் புலித்தோல் இவைகளும் அவன் ஆடைகளெனப்பட்டன.

## 14. உருத்திரனும் பினாகனும்.

பினாகம் மகாதேவனின் அம்பாகும். எதனால் அறைக்கப் படுகின்றதோ அதுவே பினாக மென்று பாஸ்கரர் நிகண்டில் விளக்கியிருக்கிறார். நாம் அரிசிமுதலியவற்றை யந்திரத்தில் அறைப்பதுபோல் தேவனும் ஜலத்தைச் சூக்ஷ்மத் துளிகளாகச் செய்கிறான். இதை நாம் பிரத்தியட்சமாய்ப் பார்க்கிறோம். மேகங்கள் பெருமலைகளைப்போல் தோன்றுகின்றன. அவ்வுருவுடனேயே கீழே விழும் பட்சத்தில் ஜீவராசிகள் இருக்குமிடம் தெரியாமல் நசுங்கிவிடும். ஜலத்தைத் துளி துளியாக இழுக்க எவ்வித வலிமையைச் சூரியனுக்குதவியிருக்கிறானோ அங்ஙனமே மலைபோலுள்ள மேகத்தையும் சிறு துளியாக்கும் வலிமையையும் அருளியுள்ளார். வைதிக பாஷையில் இதற்குப் பினாகன் என்று பெயர். மேகத்தின்

அகத்திலுள்ள அக்கினியின் அம்பு என்று பிறைகத்தைச் சொல்லலாம்.

### 15. மூன்று கண்களை உடைய உருத்திரன்.

விஷ்ணு கரங்களாலும், பிரும்மா முகத்தினாலும் சிறப்பிக்கப்பட்டது போல் சிவன் கண்களால்போற்றப்பட்டிருக்கிறார். மூன்று இடங்களில் விளங்குவதே திரிநயனமெனப் படும்.

नमोऽस्तु रुद्रेभ्यो ये देवि येषां वर्षमिषवः ।
नमोऽस्तु रुद्रेभ्यो येऽन्तरिक्षे येषां वात इषवः ।
नमोऽस्तु रुद्रेभ्यो ये पृथिव्यां येषामन्नमिषवः ॥ யஜு. 16.

வானம், ஆகாயம், பூமி இம்மூன்றிலும் உருத்திர சக்தி அல்லது அக்கினி வலிமை வியாபகமாயுள்ளது. அது பூமிக்கு மழையை உண்டு பண்ணுகிறது. பூமியிலுள்ள அக்கினி நமக்கு அன்ன ஆகாராதிகளைப் பக்குவஞ் செய்கின்றது.

मूर्धा भुवोभवति नक्तमग्निस्ततः सूर्य्यो जायते प्रातरुद्यन् ।
मायामु नु यज्ञियाना मेतामयो यत्तूर्णिश्चरति प्रजान् ॥
ருக். 10, 88, 6.

இரவில் சந்திரன் நட்சத்திரங்களாகவும் பகலில் சூரியனாகவும் அக்னி நமக்கு உபயோகமாகிறது. அக்னி சக்தியால் உயிர் வாழ்கின்றோம்.

दिवस्परि प्रथमं जज्ञे अग्निरस्मदाद्द्वितीयं परिजातवेदाः ।
तृतीयमप्सु नृमाणा अजस्रमिन्धानं एनं जरते स्वाधीः ॥
विद्मा ते अग्ने त्रेधा त्रयाणि विद्मा ते धाम बिभ्रता पुरुत्रा ।
विद्मा ते नाम परमं गुहा यद् विद्मा तमुत्संयत आबभूथ ॥
ருக்.10, 45.

சூரிய வடிவாகவும், பூமி வடிவாகவும், மேகமாகவும் அக்னி நமக்கு உபயோகமாகிறது. இதன் தத்வத்தை யறிந்தவர்கள் யாகம் முதலியனவைகளைச் செய்து பயனடைகிறார்கள். அக்னியின் மூன்று இருப்பிடங்களாவன:—

**तमाहवनीयश्च गार्हपत्यश्च दक्षिणाग्निश्च ।**
**यज्ञश्च यजमानश्च पशवश्चानुव्यचलन् ॥**

மூன்று ஸ்தாபனத்தில் (நயனம், பிரணயனம், ஸ்தாபனம்) அதாவது பூமி, ஆகாயம், வானம் ஆகியவற்றில் இருப்பதால் அக்னிக்குத் திரிநயனமெனப் பெயர். யாகசாலையில் விளங்கும் மூன்று அக்னிகளுக்கு ஆகவனீயம், சார்கபத்தியம், தட்சிணம், என்றபெயர்களுண்டு. சூரியன் மூன்று உலகங்களுக்கும் ஒளியைத் தருகிறான். முதல் மூன்று ஆசிரமங்களிலேயே அக்கினி சேர்க்கையான ஹோமங்கள் செய்யப் படுகின்றன. சன்னியாச ஆசிரமத்தில் இவைகள் தள்ளப் படுகின்றன. ஆகையால் இதற்கும் திரிநயனமென்று பெயர்.

## 16. உருத்திரனும் மூன்று சேர்க்கையான இலக்கமும்.

மகாதேவன் மூன்று கண்களைஉடையவன். சந்தனத்தை மூன்று கோடுகளாகவும் விபூதியை மூன்று வரிகளாகவும் இடுகிறோம். அவருக்குப் பூசை செய்யும் வில்வமும் மூன்று இலைகளையுடையது. இவருக்கு மாலையான உருத்திராட்சத்திலும் மூன்று வகை வரிகளைப் பார்க்கலாம். அப்படியே அம்பும், திரிசூலமும் மூன்றாகவேயிருக்கின்றன, நிர்வாணன், திகம்பரான், ஸ்மசானவாசி நஞ்சுஅருந்துபவன், பூதப்பிரேத கூட்டங்களை உடையவன் இவைகளெல்லாம் அவனுக்குச் சிறப்புத்

தருபவை. இதற்கெல்லாம் வேறு காரணங்களு முண்டு. பிறகு கவனிப்போம்.

### 17. உருத்திரனும் திரியம்பகனும்.

மூன்று உலகத்திற்கும் அப்பனுயுள்ளவனுக்குத் தகப்பனு யுள்ளவனுக்குத் திரியம்பகன் எனப் பெயர். மூவுலகத்தில் வியாபித் துள்ளவனுக்கும், மூவுலகத்தை அறிபவனுக்கும் திரியம்பகம் எனப்பெயர். இதை விளக்குங்கால் மும்மூர்த்திகளுக்கும் தகப்பனு யுள்ளவன் என்கிருர். ஆதலால் இதற்குத் தகப்பன் என்னும் விளக்கமானது யாவராலும் ஒப்புக்கொள்ளத் தக்கது.

### 18. உருத்திரனும் ஐந்து முகமும்.

பரம சிவனுக்குச் சிற்சில இடத்தில் ஐந்து முகமெனச் சொல்லப் பட்டிருக்கிறது. ஒவ்வொரு முகத்திற்கும் மூன்று கண்களாம். இதற்கும் அக்கினியே காரணம். உபநிடத்தில் ஐந்துவித அக்கினிகள் இவ்விதம் வருணிக்கப் பட்டிருக்கின்றன. கௌதம அக்னிக்குச் சூரியனுகிற காட்டம். பர்ஜன்யனுக்குக் காற்ருகிய காட்டம், பூமிக்கு வருஷமாகிற காட்டம், புருஷனுக்கு மொழியாகிற காட்டம். பிராமண நூலில் அக்னியே தேவர்களின் முகமெனச் சொல்லப் படுகின்றது. சிருஷ்டி விளக்கத்தில் ஐந்து அக்கினி என உரைக்கப்படுகிறது. இக்காரணத்தாலேயே அக்கினிக்கு ஐந்து முகமெனப் படுகின்றது. மகா தேவனுக்கும் இவ் வைந்துமே கற்பிக்கப்பட்டது போலும்.

### 19. உருத்திரனும் ஏகாதச மூர்த்திகளும்.

ஏகாதச உருத்திர பூஜையைப்பற்றிக் கவனிப்போம். ஐந்து ஐந்தாக இரு வரிசைகள் வைத்து பதினென்

ருவதைத் தனிமையாய் வைக்கிறோம். இப்பதினொன்று உருத்திரனின் பூஜை எதற்கு? பதினொன்றாவது மூர்த்தி யார்? அழிக்கிற மகாதேவன் ஒன்றே. பதினொன்றாவது எங்கிருந்து வந்தது? பிராணன் பத்து, பதினொன்றாவது ஆன்மா. இப்பதினொன்றுமே உருத்திரனென அழைக்கப்படுகின்றது. இந்த ஆன்மா சரீரத்தை விடுங்கால் அதன் பரிவாரங்களை அழச்செய்கிற படியால் அதற்கு உருத்திரன் என்று பெயர்.

யथा—"कतमे रुद्राइति दशेमे पुरुषे प्राणाः आत्मैकादशः ते यदाऽस्मात् शरीरान्मर्त्यादुत्क्रामन्ति । अथ रोदयन्ति तद्य-द्रोदयन्ति तस्माद्रुद्रा इति" ॥

20. உருத்திரனும் அஷ்ட மூர்த்திகளும்.

பூமி, ஜலம், அக்கினி, காற்று, ஆகாயம், எமன் சூரியன் இந்த எட்டும் மகா தேவனின் மூர்த்தியாகக் கருதப் படுகின்றன. அவைகளுக்கு முறையே உள்ளதேவதைகளாவன: சர்வன், பவன், உருத்திரன். பீமன், பசுபதி, மகாதேவன், ஈசானன் என்பவைகள். இவைகளைப் பிராமண நூலிலிருந்து முன்னமே நிருபித்துள்ளோம். அது தனக்குப் பெயர் வேண்டுமென்றது. உருத்திரன் என்னும் பெயர் அளித்தார். இதை விட அதிகமான வேறு பெயர் வேண்டுமெனக் டது. கடைசியாகச் சூரியனை குறிக்கும் ஈசானன் என்னும் பெயர் அளிக்கப்பட்டது. பூமியினின்று சூரியன் வரையுள்ள அக்கினியின் எட்டு குணங்களை எட்டு பெயர்களாக விளக்கியுள்ளார்கள்.

பிரும்மா விஷ்ணு முதலானவர்களுடைய மனைவிகள் தனியாகக் காட்டப்பட்டிருக்கிறார்கள். ஆனால் சிவ சக்தியோ தனியாகவில்லை. அவருடன் கலந்தே நிற்கிறதாகக் கூறப்பட்டிருக்கிறது. இது தன் பத்னியினிடம் மகாதேவன் கொண்டிருக்கும் ஆசையைக் குறிக்கிறது. ஏன் அவருக்கு அவ்வளவு ஆசை? இதற்கும் அக்கினியே காரணம். சூரியன், சந்திரன், நட்சத்திரம் காற்று முதலியவைகள் தனியாகத் தோன்றுகிறது. அக்னி அவ்விதம் தனித்து நிற்பதில்லை. கட்டை, கல், மேகம், முதலியவைகளிலிருந்து அக்கினி தனிமையா யிருத்தல் இயலாது. பொருள்களிடத்தில் எப்பொழுதும் அக்னி யிருக்கிறது. பூமியிலும், கட்டையிலும், பிற ஜீவன்களிடத்திலும் கலந்து அக்னி வசிக்கிறது. பதார்த்தங்களி லிருந்து அது தனிமையா யிருப்பது ஒரு பொழுதும் முடியாது. அதாவது அக்கினியானது வேறு பதார்த்தத்தைக் கொண்டுதான் தன் கார்யத்தைச் செய்தல் கூடும். இதனால் தான் அக்னி தேவதையான உருத்திரனை ஆணும் பெண்ணுமாகக் கருதுகிறார்கள். இதைத்தான் அர்த்தநாரீசுரன் என்றார்கள்.

## 21. அஷ்ட மூர்த்திகள்.

இந்த அஷ்ட மூர்த்தியின் சிருஷ்டி அக்னியி னின்று எழுந்ததாகும். இதை மின்சார மெனவும் சொல்லலாம். இது அக்கினியின் முழு வலிமையாகும். கற்பிக்கப்பட்ட இந்த உருத்திர தேவதையில் எட்டு வித குணங்களையும் ஸ்தாபிதஞ் செய்தார்கள். இதற்கு வேறு காரணங்களுமுண்டு. வசுக்கள் எட்டு என்று கூறுகிறார்கள். வசுவை பூமிதேவனெனக் கருதுகிறோம். உண்மையில் அக்னிதே

வனே பூமியின் தேவதை. காற்று ஆகாயதேவன். ஆதித்தியதன் வானதேவன் இக்காரணத்தாலேயே வசுக்கள் இடத்தில் உருத்திரனைக் கற்பித்தார்கள். அக்கினி, பூமி, காற்று, ஆகாயம், வானம், சந்திரன் நட்சத்திரம் இந்த எட்டும் வசுக்களாகின்றன. இதற்கு வேறு விளக்கங்களும் உண்டு.

## 22. உருத்திரன் வலிமை.

மகாதேவனுக்கு அநேக சக்திகள் விளக்கப்பட்டுள்ளன. சதீ, பார்வதி, காளி, அம்பிகை, துர்க்கை, பவானி, உருத்திராணி, மிருடானி, கௌரி முதலியன. பர்வதம், அத்திரி, கிரி, முதலியவைகள் மேகத்தின் பெயர்கள் என்று முன்னமே சொல்லியுள்ளோம். பர்வத கன்னிகைக்கே பார்வதி என்று பெயர். மேகத்தின் பெண் யார்? மின்னல் தான். மின்னலுக்குப் பார்வதி கிரிஜலமென்றும் பெயர். ஏனென்றால் பர்வதம் (மேகம்) அதிலிருந்து உற்பத்தியானபடியால் பார்வதியெனப் பெயர். மின்னலானது வச்சிர தேவனின் வலிமையாகும். வச்சிர ஸ்தானத்தில் கற்பிக்கப்பட்ட தேவதையின் பத்தினியாகப் பார்வதியைக் கற்பித்தனர். மலைகளிற் சிறந்தது ஹிமயமலை. இதில் எப்பொழுதும் பனியும் ஜலமுமுண்டு. அதனாலே தான் பார்வதியை ஹிமயமலையின் பெண் என்று கருதினர் போலும்.

## 23. காளி.

இதற்கும் அக்னியே காரணம். உபநிடதத்தில் காளி, கராளி, மனோஜவை, சுலோசிதை, சதூம்ரவர்ணை, ஸ்புலிங்கினி, விசுவரூபிணி என்னும் இவ்வேழு பெயரும் அக்கினியின் நாக்கு என்று கூறப்படுகிறது. அக்னி ஸ்தானத்தில் உருத்திரன் கற்பிக்கப்பட்டதும் நாவின் இடத்தில் அவனது

மனைவியும் கற்பிக்கப்பட்டது. இதுதான் காளி. எனவே காளி என்றால் நாக்கு என்பது சித்தமாகிறது. அவள் நிறமோ கருமை அன்றோ. அதனுற்றான் கருநிறம் காளிக்கு அளிக்கப்பட்டது போலும்!

## 24. கௌரி.

மேகத்தில் தோன்றும் கர்ச்சனையையே கௌரி என்று பாஸ்கரர் விளக்குகிறார். சாயனரும் இதை கௌரி எனவே விளக்கியிருக்கிறார். மேகத்தின் சப்தத்திற்குக் காரணமும் அக்கினியின் வல்லமையேயாகும். சாந்தோக்கிய உபநிஷத்தில் கௌரி மொழி தேஜோமய வடிவைக் குறிக்கிறது. அக்னியில் கௌரி கற்பிக்கப்பட்டாள். வெண்மையாய் உள்ளவைக்கும் கௌரி எனப் பெயர் உண்டு. மின்னல் வெண்மையாயுள்ளபடியால் அதையும் கௌரி எனலாம். பார்வதியின் சிறப்பைக் குறிப்பதற்கும் கௌரி என்று சொல்லப்படுகிறது.

## 25. அம்பிகை.

மகாதேவனின் சக்தியில் ஒன்று அம்பிகை அமரகோசத்திலும் இவ்விதமே உரைக்கப்படுகிறது. புராணங்களிலும் இதைப்பற்றி விவரமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. மகீதரர் அம்பிகையை உருத்திர பத்னி என்கிறார். உருத்திரனுக்கு அம்பிகையின் உதவி அவசியம். குரூரமான உருத்திரன் அம்பிகையாகிற சரத் வடிவினால் சத்துருக்களை நாசஞ் செய்கிறான். ஸ்ரீ தயானந்த சரஸ்வதியின் விளக்கத்தைக் கவனிப்போம். சுவசை என்பது அக்னியை மாத்திரமே காட்டவில்லை. ஜட்பு: அல்லது அதனுடனேயே செல்லும் பொருளுக்குச் சுவசை என்று பெயர். சூரியனின் சுவசை

உஷையாவாள். ஏனென்றால் இரண்டும் ஒன்றே. சூரியனுக்குச் சகோதரி யாருமில்லை. மனிதரின் சகோதரியைப் போல நாம் கருதுவதுங் கூடாது. ஜலத்திரள் அல்லது மேகக் கூட்டத்திற்கும் அம்பிகையெனப் பெயர். பசு என்பது பசுபதி எனப்படும். அதாவது பசுக்களை இரட்சிப்பவன். தட்சப் பிரசாபதியின் பெண்ணும் சதி. மகாதேவன் அவளை மணந்தான். தன் தகப்பனின் உசிதமில்லாச் செய்கையால் அவள் யாக குண்டத்தில் விழுந்தாள். பிறகு ஹிமாலயத்தின் பெண்ணாகத் தோன்றி மகாதேவனை மணந்தாள். தட்சன் என்றாலும் சூரியன்தான். நிபுணத்துவம் புத்தி கூர்மை இவை இரண்டிற்கும் தட்சமென்று சொல்வார்கள். கிரீஷ்மருது சூரியனுக்கும் தட்சன் என்று பெயர். சூர்யன் பர்ஜன்ய உருத்திர உஷ்ணவடிவமான சக்தியாகிய மக்களைத் தருகிறான். சித்திரை வைகாசியிலும் சிற்சில சமயங்களில் உஷ்ணத்தால் மேகமும் அதனால் மின்னலும் தோன்றுகிறது. இந்த சதி தேவியானவள் உருத்திரனுடன் சில காலம் வசிக்கிறாள். சூரியன் கொஞ்சம் கொஞ்சமாய் மேகத்தை உலர்த்துவதனால் தட்சனாகிறான். எங்கும் பொறுக்க இயலாத உஷ்ணமாகின்றது. ஆகாசம் நன்றாக உலர்ந்து விடுகின்றது, சூரியனாலேயே முதலில் மேகம் தோன்றுகிறது. பிறகு மின்னல் தோன்றுகிறது. அவள்தான் உருத்திரனின் சதீதேவி யாவள். இதனால் ருத்திரன் உற்சாகமடைகிறான். சூரியன் உலகத்தின் க்ஷேமத்திற்காக பெரும் யாகத்தைச் செய்கிறான். இதனால் மின்னல் அழிவை அடைகிறது. மேகமே இல்லையானால் மின்னல் எங்கிருந்து வரும். மேகமன்னியில் மின்னலின் புருடனான உருத்திரன் ஆதரவன்னியிலாகிறான். மேகத்தினுள்ளமின்னல் தேவியானவள் தட்சனின் (சூரியன்) உஷ்ண

உருவான யாகத்தில் புருடனின் நிராதரவைப் பார்த்து சாம்பலாகி விட்டாள். சூரியன் உஷ்ணத்தை அடைகிறது. அக்கினியானது தட்சனின் உஷ்ண வடிவான யக்ஞத்தில் வேறு உருவாய் வந்து விளங்குகிருன். மேகத்தில் மின்னல் மறைவதும் அவள் சாம்பலாக மாறினுள்என்பதாகும். கிரீஷ்மத்திற்குப் பிறகு மழை தோன்றுவது பஸ்பமான சதீதேவியும் (மின்னலும்) பர்வதத்தில் (மேகத்தில்) உற்பத்தியாகிருள். அதாவது மேகத்தில் மின்னல் தோன்றுகிறது. உருத்திரனும் அவளை எடுத்து உலகமெல்லாம் சுற்றித் திரிகிருன். சதி தேவி விழும் இடமெல்லாம் புனிதமாகி விடுகின்றது. அதாவது மழை பொழியும் இடமெல்லாம் சிறப்பாகிறது. கிரீஷ்மத்திற்குப் பிறகு மழையையும் அதற்குப் பிறகு கிரீஷ்மத்தையும் பார்க்கிரேரும். இவைதான் அதன் அழிவும் ஜன்மமுமாகும். சில பகுதியினரைத் தாழ்த்தியும் சில பகுதியினரை உயர்த்தியும் இந்திய நாடு உயர்வு அடைதல் முடியாது. எல்லா மக்களும் ஒன்று சேர்ந்து தான் உயர்வு அடைதல் வேண்டும்.

## 26. உருத்திரனும் காற்றும்.

காற்றை உருத்திரனின் மகன் என்று பல இடங்களில் சொல்வதை வேதத்தில் பார்க்கிரேரும். வேத விளக்க தீபிகையிலும் அப்படியே சொல்லப்பட்டிருக்கிறது. அக்கினியின் வலிமையினுலேயே காற்று உற்பத்தி யாகின்றது. அதனுல் தான் இது உருத்திரனின் மகன் என்று சொல்லப்படுகிறது.

## 27. உருத்திரனும் பொன் முதலிய உலோகங்களும்.

பொன், செம்பு முதலியவைகள் நெருப்பின் சக்தியினுலேயே உண்டாக்கப் படுகின்றது. புராணங்களில் மகாதேவ

ஞல் செய்யப்பட்டது என்று சொல்லப்படுவதின் பொருள் சரியல்லவென்று இதிலிருந்து விளங்கும்.

## 28. மோஹினி.

மகா விஷ்ணு பெண் உருவு எடுத்ததும் (பஸ்மாசுர வதம் செய்யுங்கால் மோஹினி உருவு கொண்டது) ருத்திரன் மயங்கி அவள் பின்னாலேயே சென்றாரும். அதாவது சூரியன் தன் வலிமையால் யௌவனப் பெண்வடிவமான மோகினி உருவமாகிற மின்னலைப் பரவச் செய்கிறான் என்பதே யாகும்.

## 29. உருத்திரனும் ஜல பூஜையும்.

மகா விஷ்ணு அலங்காரப்பிரியன் என்றும் சிவன் அபிஷேகப் பிரியன் என்றும் சொல்வதுண்டு. மின்னலில் ஆரோபிக்கப்பட்டதே உருத்திர தேவன் என்றோம். மின்னலுக்கு முன்வரும் கர்ச்சனையையும், அதைத் தொடரும் வெளிச்சத்தையும் கண்டு ஜனங்கள் பயந்து மயங்குவதுண்டு. ஆகையினால் தீயில் ஆரோபிக்கப்பட்ட உருத்திர தேவனின் உக்கிரத்தைத் தணிக்க அபிஷேகத்தைச் செய்யலானார்கள். உருத்திரனைச் சாந்தம் செய்வது ஜலமேயன்றோ? ஆகையினால் தான் எக்காலமும் சிவலிங்கத்தில் ஜலம் விழுவதற்கு ஏற்பாடுகள் பல கோவில்களிலும் செய்யப்பட்டுள்ளது. ஜலத்தின் சிறப்பாலேயே சிவன் விளங்குகிறான்.

## 30. உருத்திரனும் மண் உருவமும்.

மண்ணினால் உருவ மொன்றுண்டாக்கி பிராணப் பிரதிஷ்டை செய்து அதற்குத் தினந்தோறும் பூஜை செய்வதுண்டு. மகாதேவபூஜை பலவற்றில் இது சிறப்புற்றது. வேறு

தேவர்களுக்கு இதைப்போன்ற பூஜை கிடையாது. அக்னியே பூதேவன் என்று கருதப்படுவதே இதன் காரணமாகும்.

## 31. உருத்திரனும் திரிசூலமும்.

அக்னியின் அந்தரங்க வலிமையைக் குறிப்பிடவே உருத்திரனைக் கற்பித்தார்கள். இதுதான் ஆங்கிலத்தில் Lightning என்னும் மின்னலாகும். லைட்னிங்கும் மின்சாரமும் ஒன்றென்பதில் சந்தேகமில்லை. மின்னல் விழும் இடங்களில் பொருள்கள் நஷ்டமடையும். இதைத் தடுக்கவேண்டி நம் முன்னோர்கள் உலோகத்தால் செய்யப்பட்ட திரிசூலத்தைக் கண்டுபிடித்து உபயோகித்தார்கள். இதனால் உயர்ந்த வீடுகளும், கோபுரங்களும், காப்பாற்றப் படுமென அறிந்தார்கள். திரிசூலம் மின்னலின் வலிமையை இழுக்க வல்லது. மகா தேவனோடு இது ஏன் சேர்க்கப்பட்டது என நாம் இப்பொழுது அறியலாம். மகா தேவனை மின்னலின் வலிமையோடு எப்பொழுதும் திரிசூலம் இருக்கிறது. மின்னல் தேவனிடமிருந்து தப்ப வேண்டுமேயானால் திரிசூலம் அவசியம். இதை நவீன காலத்தில் விளக்கியது பிரான்கிலின் (Franklin) துரை அவர்களே. ஆனால் நம்முன்னோர்கள் இதன் வலிமையை அப்பொழுதே அறிவார்கள். பிரான்க்லின், தான் கண்டுபிடித்ததைப் பெரும் உபகாரக் கருவியாகச் செய்துவிட்டான். உலோகத்தினால் செய்யப் பட்ட மின்சார மிழுக்கும் சூலத்தை வைத்தால் உயர்ந்த கட்டடங்கள் காப்பாற்றப்படும்.

திரிமூர்த்தி உண்மை முற்றிற்று.

# ரோஜாத்தோட்டம்

50,000 பொன் நாணய, தானத்தையும் மறுத்து 69 வருட காலம், ஐரோப்பா, ஆசியா, ஆபிரிக்கா முதலிய கண்டங்களைச் சுற்றி, 14 தடவை தீர்த்தயாத்திரை செய்து 83 வயதில் வாழ்க்கையின் இரகசியங்களை இன்பத் தேன் போல் பாயும் மொழிகளால் "ரோஜாத்தோட்டம்" தன் மணத்தை வீசுகின்றது. இம்மணத்தை முகர்ந்தால் வாழ்க்கை வெகு சுலபமாகும். ராஜ நீதி, பக்கிரி நீதி, மௌனச்சிறப்பு, திருப்தியின்பம், காதலும் இளமையும், தள்ளாமையும் மூப்பும், கல்வியின் பயன், என பல அத்தியாயங்கள் இருக்கின்றன. பிரபல பத்திரிகைகளாலும் பெரியோர்களாலும் புகழப்பட்டது.

விலை அணா எட்டு தான்.

# சீன வேதம்

தமிழ்நாடு இதுவரைக் கண்டிராத நூல். பிரபஞ்சத்திலுள்ள நாடுகளில் அதிகம் ஜனத்தொகையுள்ள சைனாவின் உண்மையை அறியவேண்டுவது நமது கடமையன்றோ? 40 கோடி ஜனங்களுடைய மனதைக் கவர்ந்து நிற்கும் நூலைத் தெரிந்துகொள்ளவேண்டாமா? ஹிமாலயத்திற் கப்பாலுள்ள நாட்டின் இரகசியத்தை அறியவேண்டாமா? உடனே ஒரு காபிக்கு ஆர்டர் அனுப்புங்கள்.

விலை ரூ. 1.

14, பள்ளியப்பன் தெரு,

சௌகார்பேட்டை, சென்னை.

# வைதிக ஜெயபேரிகை

ஆரிய சமாஜத்தை நிறுவிய சுவாமி தயாநந்த சரஸ்வதி, மௌல்வி முகம்மது காசிம், பாதிரி நோபில் துரைமகனார், ஆகிய இவர்களைத் தலைவராகக் கொண்ட பெரிய பண்டித சபையில் நடந்தேறிய விவாதம இதில் விளக்கப்பட்டிருக்கிறது. வைதிக சமயத்தின் பெருமையும், அதனுடன் உற்று நோக்குமிடத்து பிறமதங்களுடைய குறையும் நன்கு விவாதிக்கப்பட்டிருக்கிறது. அவர்களால் பதில். கூற முடியாதென நினைத்துக்கொண்டு வலிய வந்து நம்மை வாதற்கிழுக்கும் கேள்விகளுக்குப் பசுமரத்தாணிபோல் பதில் அளிக்கப்பட்டிருக்கிறது. எளிதில் ஏய்க்கப்படும் பாமரர்களைக் காப்பாற்ற எண்ணமுள்ளவர்கள் இதை வாங்கி இனாமாக விநியோகிக்கலாம். தனிப்பிரசுரம் விலை அணா இரண்டு. அதிகம் பிரதிகளுக்கு விலை சகாயம் உண்டு. உடனே எழுதவும். எளிய நடையில் சத்தியார்த்தப் பிரகாசத்தின் ஆசிரியரால் தொகுக்கப்பட்டது.

**சூடன் அன் கோ.,**

14, பள்ளியப்பன் தெரு, சௌகார்பேட்டை,
சென்னை.

# உபநிடதப் பிரகாசம்

எம். ஆர். ஜம்புநாதன் எழுதியது.

" அண்டங்களை நான் வென்றேன் ; என்னை உபநிடதங்கள் வென்றது " என்றார் மகா அலக்சான்டர் ; பன்னிரண்டு உபநிடதங்களும் எங்கள் நூலே என்றார் பாரதியார். இவைகளின் உண்மை வெளியாய் விட்டது. பிரபஞ்ச சூட்சுமங்களாகிய ஆன்மவாழ்க்கை ; மானிட சூட்சமம் ; சீரிய அரசுரிமை ; இல்லற இரகசியம் ; சத்திய சுயரூபம் ; பர இன்பம் ; சிரஞ்சீவிமூலிகை முதலியவைகளை அறிய இதைப் படியுங்கள். உரையுடன் மூலமும் சேர்ந்தது. ஆர்டர் ரிஜிஸ்டர் செய்துகொள்ளுகிறவர்வளுக்குப் போஸ்டேஜ் இனுமாகக் கொடுக்கப்படும். இரண்டு பாகம் விலை ரூபா ஐந்து. தனித்தனி பாகம் விலை ரூபா மூன்று. உடனே எழுதுங்கள்.

# சத்தியார்த்தப் பிரகாசம்

இதுவரைத் தமிழில் வெளிவராத அற்புத நூல்.

ஆரிய சமாஜத்தை நிறுவிய தயாநந்த சுவாமிகளால் அருளப்பட்டது ! லட்சம் பிரதிகள் அச்சாகி செலவழிந்திருக்கின்றன. தேகசம்பந்தம் செய்யவேண்டிய வழியிலிருந்து தெய்வத்தைக் காணும் வழி வரையிலிருக்கிறது. பெரும் பிரயாசையுடன் கடந்த பத்து வருடங்களாகப் பாடுபட்டு ஸ்ரீ எம். ஆர். ஜம்புநாதனால் தமிழ்ப்படுத்தப் பட்டது.

பதினெண் புராணங்கள், ஆறுசாஸ்திரங்கள், இன்னும் பரதகண்டத்திலுள்ள 999 மதப்புத்தகங்கள் ஆகியவைகளின் ஆராய்ச்சியையும், தந்திரப் புத்தகங்களின் அடாத போதனைகளின் விளக்கம், நாஸ்திகம், சாரவாகம். நவீன வேதாந்தம், பௌத்தம், ஜைனம் முதலியவைகளின் சுயரூபங்களையும் பரிசிலனை செய்யப்பட்டிருக்கிறது. பைபில், குர்ஆன் ஷரீபு முதலியவைகளையும் எடுத்து ஆராய்ச்சி செய்யப்பட்டிருக்கிறது. உண்மை சாஸ்திரம், வேதம் முதலியவைகள் விளக்கப்பட்டிருக்கிறது.

சத்திய தர்மத்தை நாடெங்கும் பரவச்செய்து வேதத்தின் உண்மையை விளக்குவதையே தர்மமாகக் கொண்டவர்களின் பிரசாரநிமித்தமே இப்பெரிய கிரந்தத்தைச் சொற்ப விலைக்குப் பிரசுரஞ் செய்திருப்பதனால் நூலுக்கு முந்தவும்.

சத்தியாக்கிரக இயக்கத்தில் டில்லிமாநகரை ஆட்டுவித்த துறவி சிரத்தானந்த சந்நியாசி முகவுரை கொண்டது.

காபிகள் ஆனபிறகு எழுதுவதினால் பிரயோசனமில்லை. இரண்டு திரு உருவப் படங்கள் கொண்டது.

முழு விலை ரூ. 4. இரண்டாம் பாகம் விலை 2-8-0.

முதற்பாகம் தனியாய்க் கிடைக்காது.

கூடன் அன் கோ.,

14, பள்ளியப்பன் தெரு, சௌகார்பேட்டை, சென்னை.

# ராவெங்கார்

இலட்சக் கணக்காய்ப் பதிக்கப்பட்டும், உலக மெங்கிலும் பிரன்சு பாஷையை அறிந்தவர்க ளால் வெகுவாய் மதித்து வாசிககப்பட்டும், அப் பாஷையை அறியாத மற்றவர்களும் ஆனந்திக் குமாறு திரையினில் காட்டப்பட்டும், எப்பாஷை யிலும் மொழி பெயர்ப்பதற்கு உத்திரவளிப்பதற் கியலாதென்று தீர்மானித்திருந்தும் தமிழ்ப் பாஷைக்கென்று நமது கோரிக்கையை அங்கீ கரித்ததுமான ராவெங்கார் நாவலின் தமிழ் மொழி பெயர்ப்பு. மோரீஸ் பெருமாள் பிள்ளை யால் எழுதப்பட்டது.

விலை ரூபா 1—8—0.

சூடன் அன் கோ.,

14, பள்ளியப்பன் தெரு,

சௌகார்பேட்டை, சென்னை.

Kesari Printing Works, Madras.